## அல்லாஹ்வின் கட்டளை

هُوَ الَّذِيْ بَعَثَ فِي الْأُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَ يُزَكِّيْهِمْ وَ يُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَ الْحِكْمَةَ ۗ وَ اِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ۝۳

அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.(62: 3)


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 11

இதழ் 10 & 11

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - 15 - 22 ரமலான்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அமான் 05 - 12 ★ 05 - 12 மார்ச் 2026


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இமாம் மஹ்தியின் வருகை மற்றும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி பற்றிய நற்செய்திகள்

قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَالَّذِيْ نَفْسِيْ بِيَدِهٖ لَيُوْشِكَنَّ اَنْ يَّنْزِلَ فِيْكُمُ ابْنُ مَرْيَمَ حَكَمًا عَدْلًا فَيَكْسِرَ الصَّلِيْبَ وَيَقْتُلَ الْخِنْزِيْرَ وَيَضَعَ الْجِزْيَةَ وَيَفِيْضَ الْمَالُ حَتّٰى لَا يَقْبَلَهٗ اَحَدٌ حَتّٰى تَكُوْنَ السَّجْدَةُ الْوَاحِدَةُ خَيْرًا مِّنَ الدُّنْيَا وَمَا فِيْهَا ۔

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

‘என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நிச்சயமாக மர்யமின் குமாரர் (ஈஸா அலை) உங்களிடையே ஒரு நீதிநெறி தீர்ப்பவராக தோன்றும் காலம் நெருங்கிவிட்டது. அவர் சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார், ஜிஸ்யா (வரி) விதிப்பதை நிறுத்துவார். அப்போது செல்வம் மிக அதிகமாகப் பெருகும், அதை வாங்குவதற்கு எவரும் முன்வர மாட்டார்கள். அந்த நேரத்தில் (அல்லாஹ்வுக்காகச் செய்யப்படும்) ஒரேயொரு ஸஜ்தா (சிரம் பணிதல்) இவ்வுலகம் மற்றும் அதில் உள்ள அனைத்தையும் விடச் சிறந்ததாக இருக்கும். (ஸஹீஹ் புஹாரி, கிதாபுல் அன்பியா, பாடம்: மர்யமின் மகன் ஈஸா இறங்குதல்)

عَنْ اَبِيْ هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ يُوْشِكُ مَنْ عَاشَ مِنْكُمْ اَنْ يَّلْقٰى عِيْسَى ابْنَ مَرْيَمَ اِمَامًا مَّهْدِيًّا وَحَكَمًا عَدْلًا فَيَكْسِرَ الصَّلِيْبَ وَيَقْتُلَ الْخِنْزِيْرَ وَيَضَعَ الْجِزْيَةَ وَتَضَعَ الْحَرْبُ اَوْزَارَهَا ۔

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘உங்களில் யார் மர்யமின் குமாரர் ஈஸாவைச் சந்திப்பார்களோ, அவர் நீதியான இமாமாகவும், நேர்வழி பெற்ற நீதிபதியாகவும் இருப்பார். அவர் சிலுவையை உடைப்பார், பன்றியைக் கொல்வார், ஜிஸ்யாவை நீக்குவார் மற்றும் போர் தனது சுமைகளைக் குறைக்கும் (அதாவது போர்கள் முடிவுக்கு வரும்).(முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், பாகம் 2, பக்கம் 411)

## கத்மே நுபுவ்வத் இஸ்லாமிய ஷரீஅத்தின் முழுமை மற்றும் மஸீஹ் மவ்வூத் அவர்களின் உண்மைத்துவம் பற்றிய அறிவிப்பு

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களின் பொன்மொழிகள்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

‘ எங்கள் மார்க்கத்தின் சுருக்கம் மற்றும் சாராம்சம் என்னவென்றால், لا اله الا الله محمد رسول الله (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார்) என்பதே ஆகும். இந்த உலக வாழ்க்கையில் நாம் கொண்டுள்ள ஈமான் இதுவே ஆகும். அல்லாஹ்வின் அருளாலும் நற்பேறாலும் இந்த உலகத்தை விட்டுப் பிரியும் போதும் இதே நம்பிக்கையுடன் செல்வோம்.

எங்கள் தலைவரும் எஜமானருமான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக மார்க்கம் முழுமையடைந்துவிட்டது என்பதிலும், அவர் காத்தமுன் நபிய்யீன் மற்றும் தூதர்களுக்கெல்லாம் தலைவர் ஆவார்கள் என்பதிலும் எங்களுக்கு உறுதி மிக்க நம்பிக்கை உள்ளது. திருக்குர்ஆன் வேதங்களுக்கெல்லாம் முத்திரையானது என்றும், அதன் ஒரு புள்ளியோ, ஒரு கட்டளையோ, ஒரு சட்டமோ மாற்றப்படவோ அல்லது நீக்கப்படவோ முடியாது என்றும் நாம் நம்புகிறோம். தற்போது திருக்குர்ஆனுக்குப் பிறகு வஹீ மூலமாக திருக்குர்ஆனின் கட்டளைகளை மாற்றும் அதிகாரம் யாருக்கும் இல்லை. எவராவது அவ்வாறு நினைத்தால், அவர் எமது ஜமாஅத்தைப் பொறுத்தவரை ஈமானிலிருந்து வெளியேறியவரும், வழிகெட்டவர் மற்றும் காஃபிர் (நிராகரிப்பவர்) ஆவார்.‘

(அசாலா-ஏ-அவ்ஹாம், ரூஹானி கஜாயின் பாகம் 3, பக்கம் 169-170)

‘ என்னை அனுப்பிய அந்த இறைவனின் மீது ஆணையாக! அவன் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளான். திருக்குர்ஆனின் வசனங்களை நான் எவ்வாறு நம்புகிறேனோ, அதேபோல எந்த சந்தேகமும் இன்றி என் மீது இறங்கும் வஹீயையும் நான் நம்புகிறேன். பைத்துல்லாஹ்வில் நின்று கொண்டு என்னால் சத்தியம் செய்ய முடியும்: என் மீது இறங்கும் பரிசுத்த வஹீ, ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) ஆகியோருக்கு வஹீ அருளிய அதே இறைவனின் வஹீயே ஆகும்.‘ (ஏக் கல்தி கா அசாலா, பக்கம் 8-9, 1901 இல் பிரசுரிக்கப்பட்டது)

*******


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## தலையங்கம்
## இறை வஹீயின் ஒளியில் நீதி நெறித் தீர்ப்பவரின் தீர்ப்புகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள், இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களைப் பற்றிய நற்செய்தியை வழங்கியவாறு, அவர் இந்த உம்மத்தில் 'ஹகம்' மற்றும் 'அத்ல் அதாவது நீதி நெறி தீர்ப்பவர் என்ற அந்தஸ்துடன் வருவார் என்று கூறியிருந்தார்கள். அந்த அருளுக்குரிய ஹதீஸின் வார்த்தைகள் பின்வருமாறு:

يُوشِكُ مَنْ عَاشَ مِنْكُمْ أَنْ يَلْقَى عِيسَى ابْنَ مَرْيَمَ إِمَامًا مَهْدِيًّا وَحَكَمًا عَدْلًا. فَيَكْسِرُ الصَّلِيبَ وَيَقْتُلُ الْخِنْزِيرَ

உங்களில் எவர் உயிருடன் இருப்பாரோ அவர் மர்யமின் மகன் ஈஸாவைச் சந்திக்கட்டும். அவர் இமாம் மஹ்தியாகவும், ஹகம் மற்றும் அத்ல்-ஆகவும் இருப்பார். அவர் உம்மத்துடைய கருத்துவேறுபாடுகளில் தீர்ப்பளிப்பார்; அவர் சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார்.'

(முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், பாகம் 2, பக்கம் 411, ஹசரத் அபூ ஹுரைரா மூலம்)

அதாவது, உங்களில் உயிருடன் இருப்பவர்கள் மர்யமின் மகன் ஈஸாவைச் சந்திப்பது சமீபமாகும். அவர் இமாம் மஹ்தியாகவும், நீதிநெறி தீர்ப்பவராகவும் இருப்பார். அவர் உம்மத்தின் கருத்து வேறுபாடுகளில் தீர்ப்பளிப்பார்; அவர் சிலுவையை முறிப்பார்; மேலும் பன்றியைக் கொல்வார்.

மேற்குறிப்பிட்ட ஹதீஸில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் 'ஹகம்' மற்றும் 'அத்ல்' ஆக இருப்பார் என்று கூறப்பட்டதன் தெளிவான பொருள் என்னவென்றால், அவரது காலத்தில் முஸ்லிம்களிடையே ஏராளமான பிரிவுகள் தோன்றும், அவர்களுக்கிடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் ஏற்படும். அவர்கள் இஸ்லாமியக் கொள்கைகள் மற்றும் கட்டளைகளைப் புரிந்துகொள்வதில் தவறான புரிதலுக்கு இரையாகி விடுவார்கள், அந்த வேறுபாடுகளைக் களைவதற்கு ஆலிம்களிடம் ஆற்றல் இருக்காது. அப்போது இறைவனின் பிரதிநிதியாக திகழும் இமாம் மஹ்தி இறை வஹீயின் ஒளியில் அவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை களைந்து விடுவார்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை அல்லாஹ் இமாம் மஹ்தியாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் ஆக்கி நீதி நெறி தீர்ப்பவர்' என்ற அந்தஸ்தில் நியமித்தபோதோ, முஸ்லிம் பிரிவினரிடையே பரஸ்பரம் எவ்வளவு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு விட்டிருந்தன என்றால், பொது மக்கள் மட்டுமின்றி, ஆலிம்களும் ஒருவரையொருவர் தாக்குவதில் ஈடுபட்டிருந்தனர். அவரவர் சுயமாக உருவாக்கிக் கொண்ட கொள்கைகளை கைவிடுவதற்கு எவரும் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல; மாறாக, எதிர்நிலை கருத்தில் இருப்பவர்களுக்கு புரிய வைப்பதற்கு பகரமாக, முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுபவர்களே சக முஸ்லிம்களுடன் வாளேந்தி செய்யப்படும் ஜிஹாதில் ஈடுபட்டிருந்தனர். தற்போதும் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும், சின்னச் சின்ன விஷயங்களில் ஒருவர் மற்றவரை முர்தத் என்று அறிவித்து தலையை வெட்டிக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இறைவனின் கட்டளை மற்றும் இறை வஹீயின் ஒளியில் செய்த அந்தச் சீர்திருத்தங்களைப் பற்றி பார்ப்போம். அன்னார் (அலை) தோன்றுவதற்கு முன் முஸ்லிம்களிடையே சில தவறான கொள்கைகள் பரவியிருந்தன. மேலும், அன்னார் (அலை) அவற்றை சீர்திருத்தம் செய்தார்கள். உதாரணமாக, முஸ்லிம்களிடையே கிறிஸ்தவர்களின் தாக்கத்தால் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிற்கு எதிரான ஒரு கொள்கை உருவாகியிருந்தது. அதாவது, ஈஸா (அலை) அவர்கள் பூத உடலுடன் விண்ணில் உயிருடன் உள்ளார்கள் என்றும், மேலும், முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்காக அவர்களே மீண்டும் தமது அதே பூத உடலுடன் விண்ணிலிருந்து இறங்கி வருவார்கள் என்றும் ஒரு நம்பிக்கை முஸ்லிம்களிடம் பரவியிருந்தது.

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மசீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் திருக்குர்ஆனிலிருந்து எத்தகைய 30 சான்றுகளைக் கற்றுக் கொடுத்தான் என்றால், அவற்றின் மூலம் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் சிலுவை மரணத்திலிருந்து காப்பாற்றிவிட்டான் என்பதும், அன்னார் இஸ்ரேலிய கோத்திரத்தின் காணாமல் போன ஆடுகளைத் தேடி ஹிஜ்ரத் செய்து புறப்பட்டார்கள். மேலும் 120 வயதில் காஷ்மீரில் அன்னார் மரணமடைந்தார்கள்; மேலும் அங்கு ஸ்ரீநகர் கான்யார் வீதியில் அன்னாரது கல்லறை இன்றும் உள்ளது என்பதும் பட்டப் பகலை போல நிரூபணமாகி விட்டது.

எங்கு அன்னார் (அலை) திருக்குர்ஆன் வசனங்களின் மூலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபணம் செய்தார்களோ அங்கு இறை வஹீயின் ஒளியில் வரலாற்று சான்றுகளின் மூலம், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை மரணத்திலிருந்து தப்பித்து ஆஃப்கானிஸ்தான் வழியாக காஷ்மீர் வந்தடைந்தார்கள் என்பதையும், மேலும் இறுதியாக அங்கேயே மரணமடைந்தார்கள் என்பதையும் அன்னார் (அலை) நிரூபணம் செய்தார்கள். இன்று முஸ்லிம் அல்லாத அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபணம் செய்து வருகின்றனர். மேலும், எப்படிப்பட்ட ஆய்வுகளையும் வெளியிட்டுள்ளார்கள் என்றால், அவற்றின் மூலம் ஈஸா (அலை) அவர்கள் காஷ்மீருக்குப் புலம்பெயர்ந்தது நிரூபணமாகின்றது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்ததன் மூலம், (நவூதுபில்லாஹ்) ஈஸா மஸீஹ் இறைவனும் இறை மகனும் ஆவார் என்ற கிறிஸ்துவத்தின் பொய்யான கொள்கையை அன்னார் (அலை) தவிடு பொடியாக்கி விட்டார்கள். மேலும், ஈஸா (அலை) பூத உடலுடன் விண்ணிற்குச் சென்றுள்ளார்; மேலும் அதே பூத உடலுடன் மீண்டும் விண்ணிலிருந்து இறங்குவார் என்ற முஸ்லிம்களின் நம்பிக்கை தவறானதாகும் என்பதையும் அன்னார் (அலை) அறிவித்தார்கள். இந்த மகத்துவ மிக்க உண்மைத்துவத்தை வெளிப்படுத்திய பிறகு, தற்போது ஞானம் மிக்க முஸ்லிம்களும், கிறித்தவர்களும் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் மீது ஈமான் கொண்டு வருகின்றனர். எவர்களுக்கு இந்த நற்பேறு கிடைக்கவில்லையோ, அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் வருகையின் கொள்கையை நிராகரித்து வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் கொள்கையை ஒரு கட்டுக்கதை என்று கூறி வருகின்றனர். அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை மட்டும் பொய்ப்படுத்தவில்லை. மாறாக, இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த மற்றும் இறை வஹீயின் மூலம் அன்னாரின் வருகை குறித்து தகவல் வழங்கிக் கொண்டிருந்த உம்மத்தின் அந்த ஆயிரக்கணக்கான சான்றோர்களையும் பொய்ப்படுத்துகின்றனர்.

(2) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இனி கியாமத் நாள் வரை எந்த நபியும் வர முடியாது; வருபவர் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே என்ற மற்றொரு தவறான புரிதல் முஸ்லிம்களிடையே பரவியிருந்தது.

நபித்துவம் என்பது ஓர் அந்தஸ்தாகும்; அதனை அல்லாஹ் தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தினருக்கு மட்டுமே உரியதாக ஆக்கிவிட்டான் என்பதை

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் ...

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம்**

**குறித்து மனதை கவரும் வகையிலான விளக்கம்**

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்:
அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுப்படுத்த மாட்டான். தாங்கள் உறவுகளை பேணுபவர் ஆவீர்கள்; எளியவர்களின் சுமையைச் சுமக்கின்றீர்கள்; மறைந்து போன அந்த நன்மைகளை செய்கின்றீர்கள்; விருந்தோம்பல் செய்கின்றீர்கள்; உரிமைகளை பெறுவதில் ஏற்படும் கஷ்டங்களில் மக்களுக்கு உதவுகின்றீர்கள்; கஷ்டங்களை எதிர்கொண்டபோதிலும், எப்போதும் தாங்கள் உண்மைக்கு ஆதரவு அளித்துள்ளீர்கள்

قُرَّةُ عَيْنِيْ فِي الصَّلٰوةِ என்று
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பொருள்: தொழுகையில் எனது கண்களின் குளிர்ச்சி உள்ளது.

மனிதன் தன்னைத் தானே ஆய்வு செய்து பார்க்க முடியும். வெளியிலிருந்து வேறு ஒருவரை நீதிபதியாக ஆக்குவதற்கான அவசியமில்லை. அவர் என்ன நன்மைகளை செய்து கொண்டிருக்கின்றாரோ அவற்றை அவர் அல்லாஹ்விற்காக செய்து கொண்டிருக்கின்றார் என்றால் பின்னர் அவை நிச்சயமாக அல்லாஹ்விற்கு விருப்பமானவையாகும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 ஜனவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **16 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

நான் கடந்த ஒரு குத்பாவில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து அல்லாஹ்வின் மீதான நேசத்தின் அம்சத்தை எடுத்துரைத்திருந்தேன். அதைப் பற்றியே இன்று கூடுதலாக சில விஷயங்களை எடுத்துரைப்பேன். இளமையிலும் மற்றும் நபித்துவ வாதத்துக்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் மீதான நேசத்தின் உத்வேகம் எந்த அளவு இருந்தது என்றால், அன்னார் (ஸல்) நிம்மதி இழந்தவராக குகைக்குச் சென்று, நேசத்திற்குரிய இறைவனிடம் இரகசிய பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வந்தார்கள்.

இதே நேசத்தை குறிப்பிட்டவாறு, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கோடை காலங்களுக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் ஒரு சிறப்பான தொடர்பு இருப்பதாக நான் பார்க்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாருங்கள்; அல்லாஹ் தஆலா அவர்களை மக்கா போன்ற ஒரு நகரில் பிறக்கச் செய்தான். பின்னர் அந்த வெப்பமான நாட்களில், அன்னார் தனியாக ஹிரா குகைக்குச் சென்று அல்லாஹ் தஆலாவை வணங்கி வந்தார்கள். அது எவ்வளவு விந்தையான காலமாக இருந்திருக்கும்! அன்னாரே ஒரு தண்ணீர் தோல்பையைத் சுமந்து கொண்டு சென்றிருப்பார்கள்.

உண்மையான விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வுடன் அன்பும், ஆர்வமும் உருவாகிவிட்டால், பின்னர் உலகம் மற்றும் உலகவாசிகளின் மீது ஒரு வெறுப்பும் அருவருப்பும் உருவாகிவிடுகின்றது. இயல்பாகவே தனிமையை மனம் விரும்புகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலையும் இப்படித்தான் இருந்தது. அல்லாஹ்வின் மீதான நேசத்தில் அன்னார் (ஸல்) எந்த அளவு தம்மை அர்ப்பணித்திருந்தார்கள் என்றால், அந்த தனிமையில்தான் அன்னார் (ஸல்) முழு இன்பத்தையும் சுவையையும் கண்டு வந்தார்கள்.

எந்தவொரு ஓய்விற்கும், வசதிக்கும் எந்த ஏற்பாடும் இல்லாத இடமாக இருந்தது. எங்கு செல்வதற்கே அச்சம் இருந்து வந்ததோ அந்த இடத்தில், அன்னார் (ஸல்) பல,பல இரவுகளை தனியாகக் கழித்து வந்தார்கள். இதிலிருந்து அன்னார் (ஸல்) எவ்வளவு தைரியம் மிக்கவராகவும், வீரம் மிக்கவராகவும் இருந்தார்கள் என்பது தெரிய வருகிறது. அல்லாஹ் தஆலாவுடன் ஆழமான தொடர்பு இருந்தால் தைரியமும் வந்துவிடுகின்றது. எனவே நம்பிக்கையாளர் ஒருபோதும் கோழையாக இருக்கமாட்டார். உலகவாதிகள் கோழைகளாக இருக்கின்றனர். அவர்களிடம் உண்மையான வீரம் இருப்பதில்லை.

இறைவனுடன் எந்த அளவு தீவிரமான தொடர்பு இருக்குமோ, அத்தகைய மக்கள் தனிமையை விரும்புகின்றனர் என்ற விஷயத்தை செவியுற்று, அப்படியானால், அந்த நபிமார்களுக்கும், ரஸூல்மார்களுக்கும் மனைவி, பிள்ளைகள் ஏன் இருக்கின்றனர்? என்று சில நபர்கள் ஆட்சேபனை செய்கின்றனர். அவர்கள் இவ்வளவு தனிமையையே விரும்புகின்றனர் என்றால் மனைவி, மக்களைப் பெற்றிருக்கின்றனர்? ஏன் திருமணங்கள் செய்கின்றனர்? அவர்கள் ஏன் சந்தைகளில் நடமாடுகின்றனர்? மேலும் உண்டு, பருகுகின்றனர்? என்று கேட்கின்றனர்.

திருக்குர்ஆனிலும் இதைப் பற்றிக் குறிப்பு வந்துள்ளது. ஆனால் வருத்தம் என்னவென்றால், இவ்வாறு ஆட்சேபனை செய்பவர்கள் சிந்திப்பதில்லை: இவர்களின் உதாரணமோ எத்தகையது என்றால், ஒரு நபர் ஒருவரின் வாசலுக்கு யாசம் கேட்க செல்கின்றார்; மற்றொருவர் அவருடைய நண்பராக அவரைச் சந்திக்கச் சென்றிருப்பதைப் போன்ற உதாரணம் ஆகும்.

இப்போது, அந்த நண்பர், தனது நண்பருக்கு முன்னால் பிரியாணி போன்ற உணவுகளை வைத்து விருந்தோம்பல் செய்தால், அதில் அவருடைய குற்றம் என்ன? இரண்டு பேர் செல்கிறார்கள்: ஒருவர் யாசகம் கேட்கச் செல்கிறார்; மற்றொருவர் நண்பராகச் செல்கிறார். இப்போது நண்பருக்காக வீட்டில் இருப்பவர்கள் விருந்தோம்பல் செய்தால், அதில் அவரது குற்றம் என்ன இருக்கின்றது? அதாவது, நண்பரைச் சந்திக்க சென்ற அந்த நண்பர் மீது இதில் எந்தத் தவறும் இல்லை.

அந்த நண்பருக்கோ அவரது உணவை உண்பதில்

இன்பம் கிடைக்கிறது. ஆனால் யாசகம் கேட்க வந்த அந்த பிச்சைக்காரருக்கோ உலர்ந்த ஒரு ரொட்டி துண்டு மட்டுமே கொடுக்கப்படுகிறது; அவர் அதிக நேரம் தங்கினால், தள்ளிவிட்டு வெளியேற்றப்படுகின்றார்.

இரு விதமான நடத்தை உள்ளது: ஒன்று, யாசகம் கேட்பவரிடம் ஒருவகையில் நடந்து கொள்ளப்படுகிறது. நண்பருடன் வேறு வகையில் நடந்து கொள்ளப்படுகிறது. அவரை கழுத்தைப் பிடித்து தள்ளிவிடும்படியான நடத்தை நண்பருடன் நடந்து கொள்ளப்படுவதில்லை; அவர் அதிக நேரம் தங்குவதிலும், அவர் உண்டு குடிப்பதிலும் வீட்டினருக்கு ஒரு மகிழ்ச்சி உண்டாகிறது. ஆனால் பிச்சைக்காரரிடம் வேறு விதமான நடத்தை மேற்கொள்ளப்படுகிறது. நண்பனுக்கு வரவேற்பும், உபசரிப்பும் செய்யப்படுகிறது; பிச்சைக்காரனுக்கு சிறிது கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இதே நிலைதான் நபிமார்கள் மற்றும் அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டவர்களின் நிலையும் இருக்கின்றது. அவர்களுக்கு முன்னால் வரும் எந்தவொரு விஷயமும், அவர்களுடைய மனயிச்சைகளின் விளைவாக இருப்பதில்லை. அவர்கள் எல்லா இன்பத்தையும், சுகத்தையும் அல்லாஹ் தஆலாவின் நினைவிலும், பணியிலும் பெறுகின்றனர். உண்மையில் அவர்கள் தனிமையையே விரும்புகிறார்கள்; அங்கே அவர்கள் தங்களுடைய உள்ளத்து ஆசைகளையும், விருப்பங்களையும் தங்களது இறைவனின் முன்னால் சமர்ப்பிக்கின்றனர். அந்த நிலையில் யாரும் அவர்களைப் பார்த்து விடக்கூடாது என்று விரும்புகின்றனர். இது தவிர, இந்த தொடர்புகள் அவர்களின் முழுமை பெறுதலுக்காகவே அமைகின்றன. (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 407 - 408, 1984-ம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ் தஆலாவுடன் இருக்கும் அவர்களின் அன்பின் உறவுகள், மிக உயர்ந்த தரத்தை அடைவதற்காகவே அமைந்துள்ளன.

ஹிரா குகையில் (மேற்கொள்ளப்பட்ட) இறைவணக்கங்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குக் கூறியதை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு ஹதீஸில் மிக விரிவாக விவரித்துள்ளார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி)அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் வஹீ தொடங்கிய விதம் எப்படி இருந்தது என்றால், தூக்கத்தில் உண்மையான கனவுகளைப் பார்ப்பதாக இருந்தது. அன்னார் (ஸல்) எந்தக் கனவை கண்டாலும், அது பட்டப் பகலைப் போல அப்படியே நிகழ்ந்துவிடும்.

மிக உண்மையான கனவுகள் வந்தன; உடனடியாக அவற்றின் விளைவு வெளிப்பட்டு வந்தது.

இதன் பிறகு, அன்னாருக்கு தனிமையின் மீது விருப்பம் உருவானது. அன்னார் (ஸல்) ஹிரா குகையில் தனியாகத் தங்கியிருந்தார்கள்; மேலும் அதில் இறை வணக்கம் செய்து வந்தார்கள். அந்த இறை வணக்கம் சில குறிப்பிட்ட இரவுகளில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தமது குடும்பத்தினரை சந்திக்க வேண்டும் என்ற விருப்பம் அன்னாருக்கு எழுவதற்கு முன்னரே அவற்றை அன்னார் (ஸல்) முழுமைப்படுத்தி விடுவார்கள். அதற்கு தேவையான பொருட்களை அன்னார் (ஸல்) தம்முடன் எடுத்துச் செல்வார்கள்.

பின்னர், சில காலம் கழித்து, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் திரும்பி வருவார்கள். அதன் பிறகு, அதே எண்ணிக்கையிலான இரவுகளுக்காக இன்னும் அதிகமான பயண உணவுப் பொருட்களை எடுத்துக் கொண்டு மீண்டும் செல்வார்கள். இறுதியில், ஹக் (உண்மை) அன்னாரிடம் வந்தது. அந்த நேரத்தில் அன்னார் (ஸல்) ஹிரா குகையிலேயே இருந்தார்கள். அன்னாரிடம் ஒரு மலக்கு (வானவர்) வந்தார்; மேலும், ஓதுவீராக என்று அன்னாரிடம் கூறினார். அதற்கு, நான் ஒருபோதும் படிக்க மாட்டேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறி வந்ததாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அந்த வானவர் என்னை பிடித்தார்; மேலும் என்னை எந்த அளவிற்கு இறுக்கமாக அழுத்தினார் என்றால், எனது வலிமை அதன் உச்சத்தை அடைந்து விட்டது. பின்னர் அவர் என்னை விடுவித்தார். மேலும் ஓதுவீராக என்று கூறத் தொடங்கினார். நான் படிக்க மாட்டேன். படிக்கவே தெரியாது என்று நான் கூறினேன்

பின்னர் அவர் என்னை பிடித்தார். மீண்டும், எந்த அளவுக்கு அழுத்தினார் என்றால், நான் மயக்கமடைந்து விட்டேன். பின்னர் அவர் என்னை விட்டுவிட்டார். மேலும், ஓதுவீராக என்று கூறினார். நான் படிக்க மாட்டேன் என்று நான் கூறினேன். பின்னர் அவர் என்னை பிடித்தார். பின்னர் அவர் மூன்றாவது முறையாக வேகத்துடன் அழுத்தினார். பின்னர் அவர் என்னை விட்டுவிட்டார். மேலும்

اِقْرَاْ بِاسْمِ رَبِّكَ الَّذِيْ خَلَقَ ۚ خَلَقَ الْاِنْسَانَ مِنْ عَلَقٍ ۚ
اِقْرَاْ وَرَبُّكَ الْاَكْرَمُ

என்று கூறினார்.

உம்மைப் படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை உறைந்த திரவத்திலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் மாபெரும் கண்ணியத்திற்குரியவனாவான். (அலக்: 2 - 4)

இந்த வசனங்களைப் பெற்றுக் கொண்டு, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிரா குகையிலிருந்து திரும்பினார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் வீட்டிற்கு வந்தபோது, அன்னாருடைய இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: எனக்கு போர்வை போர்த்துங்கள், எனக்கு போர்வை போர்த்துங்கள்.

அதனால் அவர்கள் அன்னாருக்கு போர்வை போர்த்தினார்கள். எதுவரை என்றால், அன்னாருடைய பதற்றம் குறையத் தொடங்கியது. அப்போது, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் நடந்த அனைத்தையும் கூறினார்கள். மேலும், எனது உயிரைப் பற்றியே எனக்கு பயம் ஏற்பட்டுவிட்டது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஒருபோதும் இல்லை, அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுப்படுத்த மாட்டான். தாங்கள் உறவுகளை பேணுபவர் ஆவீர்கள்; எளியவர்களின் சுமையைச் சுமக்கின்றீர்கள்; மறைந்து போன அந்த நன்மைகளை செய்கின்றீர்கள்; விருந்தோம்பல் செய்கின்றீர்கள்; உரிமைகளை பெறுவதில் ஏற்படும் கஷ்டங்களில் மக்களுக்கு உதவுகின்றீர்கள்; கஷ்டங்களை எதிர்கொண்டபோதிலும், எப்போதும் தாங்கள் உண்மைக்கு ஆதரவு அளித்துள்ளீர்கள்.

இதன் பின்னர் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அன்னாரை அழைத்துக் கொண்டு, தமது சிறிய தந்தையின் மகன் வர்கா பின் நவ்ஃபல் அவர்களிடம் சென்றார்கள். அவர் அஸத் பின் அப்துல் உஸ்ஸாவின் மகன் ஆவார். அறியாமையின் காலத்தில் கிறிஸ்தவராக மாறியிருந்த நபராக வர்கா இருந்தார். அவர் எபிரேய மொழியை எழுதவும், வாசிக்கவும் அறிந்திருந்தார். இன்ஜீலிலிருந்து அல்லாஹ் தஆலா விரும்பியதனை அவர் எபிரேய மொழியில் எழுதி வந்தார். அவர் மிக வயதானவராகவும், கண் பார்வையற்றவராகவும் ஆகியிருந்தார்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்: என் சிறிய தந்தையின் மகனே, தங்களின் சகோதரரின் மகனின் பேச்சைக் கேளுங்கள். அதற்கு, என் மகனே, தாங்கள் என்ன கண்டீர்கள்? என்று வர்கா கேட்டார். அப்போது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்,

தாம் கண்ட அனைத்தையும் அவருக்கு விளக்கிக் கூறினார்கள். வர்கா அன்னாரிடம் கூறினார்: அல்லாஹ் தஆலா மூஸா (அலை) அவர்கள் மீது இறக்கிய ஷரீஅத்தை கொண்டு வரக் கூடிய அதே வானவர் இவர் ஆவார்; அந்தோ அந்த காலத்தில் நான் இளமையாக இருந்திருக்க வேண்டுமே! அந்தோ உன் மக்கள் உன்னை நாடு கடத்தும் அந்த நேரத்தில் நான் உயிருடன் இருக்க வேண்டுமே!

அதற்கு, அவர்கள் என்னை வெளியேற்றுவார்களா என்ன? என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்:

வர்கா கூறினார்: ஆம்! நீர் தூதுச் செய்தியை கொண்டு வந்துள்ளீர்; எப்போதெல்லாம் ஒருவர் இதைப் போன்ற தூதுச் செய்தியை கொண்டு வந்தாரோ அவரிடம் நிச்சயமாக பகைமை காட்டப்பட்டது. நான் உமது அந்தக் காலத்தை அடைந்தால், முழு வலிமையுடன் உமக்கு உதவி செய்வேன்.

அதற்குப் பிறகு, வர்கா விரைவில் மரணமடைந்து விட்டார். அதன் பின்னர், வஹீ சில காலத்திற்கு நிறுத்தப்பட்டது. நின்று விட்டது. (ஸஹீஹ் புஹாரீ, உருது மொழியாக்க நூல், தொகுதி 1, பக்கம் 5 - 7, ஹதீஸ் எண்: 3)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையான விஷயம் என்னவென்றால், திருக்குர்ஆனின் போதனையின் காரணமாக நமக்கு இந்த விவகாரம் இவ்வாறு தெரிய வருகின்றது. அதாவது, ஒரு பக்கமோ, அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் தனது பரிவு, கருணை, இரக்கம், அருள் மற்றும் தயவு போன்ற பண்புகளை எடுத்துரைக்கின்றான். மேலும், தான் ரஹ்மான் ஆக இருப்பதை வெளிப்படுத்துகிறான். மறுபக்கம்,

اَنْ لَّيْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَا سَعٰى

**என்று அவன் கூறுகிறான். பொருள்: மனிதனுக்கு அவன் செய்த முயற்சியின் பலனே தவிர வேறு எதுவும் கிடைப்பதில்லை. மேலும், இறைவன் கூறுகின்றான்:**

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا

**எம்மை சந்திப்பதற்காக எவர்கள் முயற்சி செய்கின்றனரோ நிச்சயமாக நாம் அவர்களுக்கு எமது வழிகளின் பக்கம் வருவதற்கான நற்பேறை வழங்குவோம்.**

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறு கூறி, அல்லாஹ் தஆலா தனது அருளை மனிதனின் முயற்சி மற்றும் உழைப்பைச் சார்ந்ததாக ஆக்கிவிட்டான். அதாவது, இந்த முயற்சியையும் செய்யுங்கள்; அப்போதுதான் பயன் கிடைக்கும், போராடுங்கள் கூறினார்கள்: மேலும், இந்த விஷயத்தில் ஸஹாபிகளின் நடைமுறை நமக்கான ஓர் அழகிய முன்மாதிரியும், சிறந்த முன்னுதாரணமும் ஆகும். ஸஹாபிகளின் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். அவர்கள் சாதாரணமான தொழுகைகளால் மட்டுமே அந்த உயர் படித்தரங்களை அடைந்தார்களா? இல்லை. மாறாக, அவர்களோ அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தங்களது உயிர்களைக் கூட பொருட்படுத்தவில்லை; ஆடு, மாடுகளைப் போல அல்லாஹ்வின் வழியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அப்போதுதான் அவர்களுக்கு இந்த உயர் அந்தஸ்து கிடைக்கப் பெற்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் ஸஹாபிகள் இறை நேசத்தைப் பெற முயற்சி செய்தனர். அதற்காக எல்லா தியாகத்திற்கும் தயாராகி விட்டனர்; தியாகங்களும் செய்தனர்; அதன் பின்னர், ஓர் அந்தஸ்தையும் பெற்றார்கள். அதன் மூலம் அல்லாஹ் தஆலா அவர்களிடம் திருப்தி கொண்டு விட்டான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாம் இப்படிப்பட்ட பெரும்பாலான மக்களைப் பார்த்துள்ளோம். அவர்கள் இதனையே விரும்புகின்றனர். அதாவது, சிரமமேயில்லாமல், மிக எளிதாக அவர்களுக்கு அந்த உயர் படித்தரங்கள் கிடைத்துவிட வேண்டும்; அர்ஷ் வரை சென்றடைந்துவிட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: நமது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட சிறந்தவர் யார் இருக்க முடியும்? அவர்கள் மனிதர்களில் சிறந்தவராகவும், ரஸூல்மார்களிலும் நபிமார்களிலும் சிறந்தவராகவும் இருந்தார்கள். அவர்களே கூட ஒரே மூச்சில் அந்த பணியைச் செய்யவில்லை. அவ்வாறிருக்க, வேறு யாரால் அவ்வாறு செய்ய முடியும்?

பாருங்கள்! அன்னார் (ஸல்) ஹிரா குகையில் எவ்வளவு தியானங்கள் செய்தார்கள். எத்தனை காலம் பணிவுடன் மன்றாடி பிரார்த்தனை செய்தார்கள் என்பதையும், தூய்மை பெறுவதற்காக எத்தகைய பெரும் அர்ப்பணிப்பு மற்றும் கடுமையான உழைப்புகளை அன்னார் (ஸல்) மேற்கொண்டார்கள் என்பதையும் இறைவனே அறிவான். அப்போது தான் அல்லாஹ் தஆலாவின் புறமிருந்து அருள் இறங்கியது.

அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் அல்லாஹ்வின் வழியில் தன் மீது ஒரு வகையான மரணத்தின் நிலையையும், மாய்த்துக் கொள்ளுதல் என்ற நிலையையும் ஏற்படுத்திக் கொள்ளாத வரை அங்கிருந்து எந்த கவனமும் காட்டப்படுவதில்லை. ஆனால், மனிதன் தன் தரப்பிலிருந்து முழுமையான முயற்சியைச் செய்துவிட்டான் என்றும், என்னைப் பெறுவதற்காக தன் மீது மரணத்தின் நிலையை ஏற்படுத்திக் கொண்டான் என்றும் அல்லாஹ் காணும்போது, பின்னர் அவன் சுயமே அந்த மனிதன் மேல் வெளிப்படுகிறான்; அவனுக்கு அருளி, தமது வல்லமையைக் காட்டி உயர்த்துகிறான். (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக் 205 - 206, 1984-ம் ஆண்டு பதிப்பு)

அடுத்து, ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நபிமார்களின் இயல்பு இந்த வகையில்தான் அமைந்துள்ளது. அதாவது அவர்கள் ஒருபோதும் புகழை விரும்புவதில்லை. எந்தவொரு நபியும் புகழுக்கு ஆசைப்பட்டதில்லை. நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தனிமையையே விரும்பி வந்தார்கள். இறை வணக்கத்திற்காக மனிதர்களிடமிருந்து விலகி, ஹிரா குகை எனப்படும் அந்த குகைக்குச் சென்றார்கள். இந்த குகை எந்த அளவுக்கு அபாயகரமானதாக இருந்தது என்றால் அதில் செல்வதற்கு எந்த மனிதரும் துணிய மாட்டார். ஆனால், அச்சத்தால் அங்கு யாரும் வரமாட்டார் என்ற காரணத்தினாலேயே அன்னார் (ஸல்) அந்த இடத்தை விரும்பி வந்தார்கள். அன்னார் (ஸல்) முழுமையான தனிமையை விரும்பினார்கள். புகழை ஒருபோதும் விரும்பியதில்லை. ஆனால்,

يٰاَيُّهَا الْمُدَّثِّرُ ۙ قُمْ فَاَنْذِرْ

என்ற அல்லாஹ் தஆலாவின் கட்டளை வந்தது. பொருள்:

**மேலங்கி அணிந்திருப்பவரே! எழுந்து எச்சரிக்கை விடுப்பீராக!**

**(அல் முத்தஸிர்: 2 - 3)**

இந்தக் கட்டளையில் ஒரு நிர்ப்பந்தம் இருப்பது தெரிகின்றது. எனவே, தங்களுக்கு மிகவும் விருப்பமாக இருந்த அந்த தனிமையை இப்போது விட்டுவிடுங்கள் என்று பலவந்தமாக அன்னாருக்கு கட்டளையிடப்பட்டது. (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக் 44, 1984-ம் ஆண்டு பதிப்பு)

அல்லாஹ் தஆலாவின் மீதான அன்பு உச்சத்தை அடைந்து விட்டது. மேலும் அன்னாருடைய முயற்சியும் உச்சத்தை அடைந்து விட்டது. அப்போது, அல்லாஹ் தஆலா அன்னாரை தனது இறுதி ஷரீஅத்தை பரப்புவதற்காக உலகில் அனுப்பினான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இது அல்லாஹ் தஆலாவின் மீது கொண்ட அன்பும் நேசமுமாக இருந்தது. ஆயினும், ஒரு பெரும் முயற்சியும் இருந்தது. அதன் காரணமாக அல்லாஹ் தஆலா அன்னாருக்கு எண்ணற்ற அருள்களை வழங்கினான். மேலும், ஒவ்வொரு மனிதனும், தத்தமது அந்தஸ்திற்கு ஏற்ப முயற்சி செய்யாமல், பாடுபடாமல், அல்லாஹ்

தஆலாவை அடைவது கடினமாகும்.

அல்லாஹ் தஆலாவின் மீதான அன்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொழுகையின் தன்மை இவ்வாறாக இருந்தது. முத்ரிஃப் அவர்கள் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறினார்கள்:

நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அன்னார் (ஸல்) தொழுது கொண்டிருந்தார்கள். (உலையில்) பானை கொதிக்கும் ஓசையைப் போன்ற ஓசை அன்னாருடைய மார்பிலிருந்து வந்து கொண்டிருந்தது. (ஸுனன் நிஸாயீ, ஹதீஸ் எண்: 1215)

அன்னார் (ஸல்) எவ்வளவு தீவிரமாக அழுது கொண்டிருந்தார்கள், மன்றாடி கொண்டிருந்தார்கள் என்றால், அது பாத்திரத்தில் நீர் கொதித்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது.

இதேபோல், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பில் கூறுகின்றார்கள்:

அன்னார் (ஸல்) எந்த அளவு அதிகமாக இறை வணக்கத்தில் ஈடுபட்டு வந்தார்கள் என்றால், இறை வணக்கத்தின் நேரத்தில் நீண்ட நேரம் நின்று தொழுததனால், அன்னாரது பாதங்கள் வீங்கி விட்டன என்ற இந்த அறிவிப்பை நான் கடந்த ஒரு குத்பாவில் ஏற்கனவே குறிப்பிட்டு விட்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் மற்றும் இறை வணக்கத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஓர் இடத்தில் கூறுகின்றார்கள்.

நான் முன்பு ஒரு குத்பாவில் அன்னாரது வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தபோது இதன் சிறிய பகுதியை எடுத்துரைத்து விட்டேன்; ஆனால் அதில் மேலும் சில கூடுதல் விவரங்களும் உள்ளன. அவற்றையும் எடுத்துரைக்கின்றேன். இதிலிருந்து, அல்லாஹ் தஆலாவின் மீது அன்னார் (ஸல்) கொண்டிருந்த ஆழ்ந்த நேசமும், அன்பும் மேலும் தெளிவாகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோது, கடுமையான பலவீனத்தின் காரணமாக மக்களுக்கு தொழுகை நடத்த முடியாத நிலையில் இருந்தார்கள். அதனால், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கு தொழுகை நடத்தும்படி கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) தொழுகை நடத்தத் தொடங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சற்று நிம்மதியை உணர்ந்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) தொழுகைக்காக புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தொழுகை நடத்துமாறு கட்டளையிட்ட பின், நோய் சற்று குறைந்ததால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சில நபர்களின் உதவியுடன் தொழுகைக்காக புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள்: தற்போதும் அந்தக் காட்சி என் கண்களுக்கு முன்னால் உள்ளது. அதாவது கடுமையான வலியின் காரணமாக, அன்னாரது பாதங்கள் தரையைத் தொட்டுக் கொண்டு சென்றன.

அன்னார் (ஸல்) மஸ்ஜிதை அடைந்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பின்னால் செல்ல எண்ணியபோது, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாரது எண்ணத்தை உணர்ந்து, நீங்கள் உங்கள் இடத்திலேயே இருங்கள் என்று சைகை செய்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அங்கு கொண்டு வரப்பட்டார்கள். மேலும், அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அருகாமையில் அமர்ந்து விட்டார்கள். அதன் பின், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழ ஆரம்பித்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்து தொழத் தொடங்கினார்கள். மற்ற மக்கள் அனைவரும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பின்பற்றி தொழுதார்கள்.

இந்த ஹதீஸிலிருந்து, எவ்வளவு அபாயகரமான நோய் ஏற்பட்டாலும், அன்னார் (ஸல்) அல்லாஹ் தஆலாவை நினைவு கூர்வதை ஒருபோதும் மறக்கவில்லை என்பது தெரிய வருகிறது. பொதுவாக மக்களில் நாம் பார்த்திருக்கின்றோம். சிறிதளவு வேதனை ஏற்பட்டாலே, அவர்கள் அனைத்து இறை வணக்கங்களையும் மறந்து விடுகின்றனர்; ஜமாஅத்தான தொழுகை மற்றும் பிற நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலோ பெரும்பாலும் அலட்சியம் ஏற்படுகின்றது. ஆனால் அன்னாரது நிலைமை என்னவென்றால். சாதாரண நோய் ஒரு பக்கம் இருக்கட்டும்; எந்த நோயில் அன்னாருக்கு மரணம் நிகழ்ந்ததோ, மேலும் அந்த நோயின் தீவிரம் எவ்வாறு இருந்தது என்றால், அன்னாருக்கு மீண்டும், மீண்டும் மயக்கம் ஏற்பட்டு வந்தது, எழுந்து நிற்க முடியாமல் இருந்தார்கள். ஆனால், தொழுகை ஆரம்பமானதும், அமைதியாக வீட்டில் அமர்ந்திருப்பதை அன்னாரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அப்போதே, பாதங்கள் தடுமாறும் அளவிலான பலவீனம் இருந்தபோதிலும் இரண்டு நபர்களின் தோள்களை பிடித்துக் கொண்டு ஜமாஅத்தான தொழுகைக்காக மஸ்ஜிதிற்கு சென்று விட்டார்கள்.

வெளிப்படையில், இது ஒரு சாதாரண நிகழ்வாக தோன்றலாம். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இருந்த அந்த நிலையை சற்று (எண்ணிப்) பாருங்கள். பின்னர், அந்த இறை தியானத்தின் ஆர்வத்தை பாருங்கள்! அந்த ஆர்வத்தின் காரணமாகவே இரண்டு நபர்களின் தோள்களில் கைகளை வைத்து அன்னார் தொழுகைக்காக வருகை தந்தார்கள். இதிலிருந்து, இது ஒரு சாதாரண நிகழ்வல்ல; மாறாக, இது அல்லாஹ் தஆலாவை நினைவுகூர்வதில் அன்னாருக்கு இருந்த அந்த ஆழ்ந்த ஆர்வத்தின் பிரதிபலிப்பாகும் என்பது தெரிய வரும்.

ஒவ்வொரு அறிவு படைத்த நபரும் புரிந்துகொள்ள முடியும். அதாவது இறை தியானம் அன்னாரது உணவாக இருந்தது. அதுவின்றி, அன்னார் (ஸல்) தமது வாழ்க்கையில் எந்த இன்பத்தையும் பெற்றதில்லை. இதன் பக்கமே அன்னார் (ஸல்) சுட்டிக்காட்டினார்கள்: எனக்கு எந்த விஷயங்களின் மீது நேசம் இருக்கின்றதோ அவற்றில் ஒன்று

قُرَّةُ عَيْنِي فِي الصَّلٰوةِ

ஆகும்.

பொருள்: தொழுகையில் எனது கண்களின் குளிர்ச்சி உள்ளது.

ஷரீஅத்தின் அடிப்படையில், அன்னார் (ஸல்) ஜமாஅத்தாக தொழுவதோ அல்லது மஸ்ஜிதிற்கு வருவதோ ஒன்றும் அவசியமான காரியம் கிடையாது. ஏனெனில், நோயின் நிலையில், இஸ்லாமிய ஷரீஅத் எந்த ஒருவரையும் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்துவதில்லை. நோயின் போது வீட்டிலேயே தொழுது கொள்ள முடியும். ஆனால் இது அன்பின் ஷரீஅத் ஆகும். ஒன்று, அந்த ஷரீஅத்தின் கட்டளையாக இருந்தது; ஆனால் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஷரீஅத்தின்படி செய்த அந்த அமலானது, அன்பின் ஷரீஅத்தாக இருந்தது. அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வெளிப்பாடாக இருந்தது. அவையோ ஷரீஅத்தின் கட்டளைகளாக இருந்தன. ஆனால், இவை நேசத்தின் ஷரீஅத்தாக இருந்தது. இவை அன்பின் விஷயங்களாக இருந்தன; இவை அன்பின் கட்டளைகளாக இருந்தன ; இவை அதைவிட உயர்ந்தவையாக இருந்தன. இதில் நேசமும், அன்பும் வழிந்து கொண்டிருந்தன.

நிச்சயமாக, ஷரீஅத் அன்னாருக்கு வீட்டிலேயே தொழுது கொள்வதற்கு அனுமதி அளித்திருந்தது. ஆனால் இறைவனை நினைவு கூறுவதில் அன்னாருக்கு இருந்த நேசமானது, என்ன நேர்ந்தாலும் சரி; எல்லா வேதனையையும் தாங்கிக்கொண்டு, அனைத்து நிபந்தனைகளுடனும் இறைவனை நினைவு கூறவேண்டும். மேலும் தமது நேசனை நினைவு கூறவேண்டும் என்று அன்னாரை வற்புறுத்தியது.

இந்த அளவு வேதனையின் நிலையிலும், அன்னாருக்கு இறை தியானத்தில் இந்தத் தொடர்பு இருந்தது என்றால், பின்னர் ஆரோக்கியமான நிலையிலோ அதனை எண்ணிப் பார்க்க முடியும். அன்னார் (ஸல்) எந்த உத்வேகத்துடன் தமது நேசனின் நினைவில் மூழ்கியிருந்திருப்பார்கள் என்பதை ஒருவரால் சிந்தித்துப் பார்க்க முடியும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு, அல்லாஹ்வுடன் எத்தகைய தொடர்பு இருந்தது என்றால், இறைவனின் நினைவு வந்த உடனேயே, அன்னாரது உள்ளத்தில் ஒரு உத்வேகம் தோன்றி விடும். அன்னார் (ஸல்) அல்லாஹ்வை எவ்வளவு நேசித்தார்கள் என்றால், ஆரோக்கியத்திலும் நோயிலும், அல்லாஹ்வின் நினைவே அன்னாரது உணவாக இருந்தது. இதே நிலையைத்தான், அன்னார் (ஸல்) தமது சமுதாயத்திலும், தமது மக்களிடமும் உருவாக்க விரும்பினார்கள்; அவர்களிடமும் இந்தப் பழக்கம் ஏற்பட வேண்டும் என்பதே அன்னாரது நோக்கமாக இருந்தது.

முந்தைய குத்பாவில் நான் ரஸூல் (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்திருந்தேன். நான் சுருக்கமான ஹதீஸை எடுத்துரைத்திருந்தேன். அதில், சில விவரங்கள் இருக்கின்றன ; அவற்றில் சில விஷயங்கள் மீண்டும் எடுத்துரைக்கப்பட வேண்டியவையாகும். எனவே எடுத்துரைக்கின்றேன்.

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஒருமுறை பனீ அம்ர் பின் அவ்ஃப் மக்களிடையே சமாதானம் ஏற்படுத்துவதற்காக சென்றார்கள். அவர்களுக்குள் ஒரு சண்டை சச்சரவுக்கான விவகாரம் இருந்தது. அன்னார் (ஸல்) சமாதானம் செய்து வைப்பதற்காக சென்றார்கள். அங்கு அவர்களுக்குள் ஒரு மோதலுக்கான விவகாரம் இருந்தது. அப்போது, தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது. மஸ்ஜிது நபவியில் பாங்கு கொடுப்பவர் பாங்கு கூறினார். பின்னர் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து, தாங்கள் மக்களுக்கு தொழுகை நடத்துகின்றீர்களா?; நான் இகாமத் சொல்லட்டுமா? என்று கேட்டார். அதற்கு ஆம் என்று அன்னார் (ரலி) பதிலளித்தார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) தொழுகைக்காக முன்னால் நின்றார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களும் வருகை தந்து விட்டார்கள். மக்கள் தொழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு வழியாக கடந்து சென்று முன்னால் சென்றுவிட்டார்கள். முதல் (வரிசை) யில் சென்று நின்று விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகை பற்றி தெரிய வந்ததும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதனை அறிந்து கொள்ளும் பொருட்டு மக்கள் கைதட்டத் தொடங்கினர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொழுகையில் வேறு எந்த பக்கமும் கவனம் செலுத்தவில்லை. தொழுகையின் பக்கம் ஒரு விநோதமான ஈடுபாடு இருந்தது. இறை வணக்கத்தின்போது, வேறு எதன் பக்கமும் அன்னாருக்கு கவனம் இருந்ததில்லை. கைதட்டல் நீண்டு கொண்டே சென்றபோது, ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கவனம் செலுத்தி பார்த்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) வந்துவிட்டார்கள் என்பதை அறிந்தார்கள். அப்போது ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள், அன்னாரை நோக்கி, நீங்கள் உங்கள் இடத்திலேயே நிலைத்திருங்கள்! என்று சைகை செய்தார்கள். அதற்கு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கைகளை உயர்த்தி இந்த கண்ணியம் கிடைத்ததற்காக அல்லாஹ்விற்கு நன்றி கூறி அவனது புகழை எடுத்துரைத்தார்கள். பிறகு, அவர்கள் பின்னால் விலகி விட்டார்கள். மேலும் வரிசையில் சேர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) முன்னால் சென்று தொழுகை நடத்தினார்கள். தொழுகை முடிந்து ஸலாம் கூறிய பின்பு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்கரே! நான் உங்களுக்கு உத்தரவிட்டபோது, பின்னர் எந்த விஷயம் உம்மை தொழுகை நடத்துவதிலிருந்து தடுத்தது? அதற்கு, நான் முன்பும் எடுத்துரைத்திருந்தது போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்று தொழுகை நடத்துவதற்கு இப்னு அபீ கஹாஃபாவுக்கு (எனக்கு) என்ன தகுதி உள்ளது?

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை நோக்கி திரும்பி கூறினார்கள்:

நீங்கள் அதிகமாக கைதட்டியதை நான் கண்டேன். தொழுகையில் ஏதேனும் வழக்கத்திற்கு மாறான சம்பவம் நிகழ்ந்தால் ஸுப்ஹானல்லாஹ் என்று கூற வேண்டும். ஏனெனில் ஒருவர் ஸுப்ஹானல்லாஹ் என்று கூறினால் அதன் மூலம் கவனம் தானாகவே அவர் பக்கம் திரும்பும். கைதட்டுவதோ பெண்களின் செயல் ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இந்த ஹதீஸிலிருந்து இன்னும் பல பாடங்கள் கிடைக்கின்றன என்றாலும், இங்கே நான் ஒரே ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். அது இதுவாகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளின் முயற்சி இவ்வாறாகவே இருந்தது. அதாவது முடிந்த வரை மக்களின் நாவுகளில் இறைவனின் நாமம் உச்சரிக்க செய்யப்பட வேண்டும் என்பதே முயற்சியாக இருந்தது.

அன்னார் (ஸல்) சுயமே எவ்வாறு திக்ரே இலாஹியில் முழுமையாக ஈடுபட்டு இருந்தார்கள் என்பதற்கான நிலை ஏற்கனவே விளக்கப்பட்டுவிட்டது. ஆனால் இந்த ஹதீஸிலிருந்து, அவர்கள் ஒவ்வொருவரின் நாவிலும் இந்த வார்த்தைகள் இருப்பதையே அவர்கள் விரும்பினார்கள் என்பது தெளிவாகிறது.

இப்போது நாம் நம்மை நாமே சுய ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திடமிருந்து எதிர்பார்த்தது போல, நமது உள்ளங்களிலும் அல்லாஹ்வின் நினைவு எப்போதும் இருக்கிறதா? நமது உள்ளங்களில் அத்தகைய வேதனை இருக்கிறதா? அல்லது நமது உலகியல் இலக்குகளுக்காக மட்டுமே தொழுகைகளுக்கும், அல்லாஹ்வின் திக்ருக்கும் நாம் கவனம் செலுத்துகிறோமா? சாதாரண சூழ்நிலைகளில் நாம் அதை மறந்து விடுகிறோமா? என்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

பிறகு அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திக்ர் அதிகமாக செய்யப்பட வேண்டும் என்று விரும்பினார்கள் என்பதை காட்டும் பல நிகழ்வுகள் உள்ளன. உதாரணமாக, தும்மும்போதும், உண்ணத் தொடங்கும் முன்பும், உணவு உண்ட பிறகும், உறங்கும்போதும், விழித்தெழும்போதும், தொழுகைகளுக்குப் பிறகும், எந்தவொரு பெரிய காரியம் செய்யும்போதும், உளூ செய்யும்போதும், சுருக்கமாக, பெரும்பாலான செயல்களில் அல்லாஹ்வை நினைவு கூர்வதன்பால் அன்னார் (ஸல்) மக்களுக்கு கவனமூட்டினார்கள். இதிலிருந்து இந்த விஷயம் நிரூபணமாகின்றது. அதாவது, அன்னார் (ஸல்) தாம் மட்டுமே இறை தியானத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கவில்லை. மாறாக, மற்றவர்களிடம் அன்னார் (ஸல்) இதனை விரும்பியிருந்தார்கள். அதாவது இறை தியானத்தில் அவர்களும் மூழ்கியிருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இது அன்னாரின் சிறப்பு மிக்க இறை நேசத்திற்கான முத்திரையாகும். அதற்கான சான்றாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: நான் ஏராளமான நபர்களை பார்த்திருக்கிறேன்; சிறிதளவு இறை வணக்கம் செய்து விட்டு, ஆணவம் கொண்டு விடுகின்றனர். சில நாட்கள் தொழுகை அல்லது இபாதத் செய்த பிறகு, தங்களை ஃபிர்அவுன் போலவே, அல்லது வலிமார்களாகவோ கருதிக் கொள்கின்றனர். உலகமும் அதில்

உள்ள அனைத்தும் அவர்களின் பார்வைகளில் அற்பமாகி விடுகின்றது. பெரும் பெரும் நபர்களின் உண்மைத்துவத்தை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. இன்னும்கூறப்போனால், மனிதரைப் பற்றி கூறுவது இருக்கட்டும்; அல்லாஹ்விற்கும் தாங்கள் உபகாரம் செய்து விட்டதாக கூறுகின்றனர். மேலும், நாம் இறை வணக்கம் செய்திருக்கின்றோம்; இது ஒருவகையில் இறைவனுக்கு செய்த உபகாரமாகும்; மேலும் அவன் எங்களுக்கு நன்றிகடன் பட்டிருக்கின்றான் என்று அவர்கள் கருதுகின்றனர். நவூதுபில்லாஹ் நாங்கள் அவனை வணங்கியிருக்கின்றோம்; நாங்கள் வணங்காமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்பான்? என்று கருதுகிறார்கள்.

எவர்கள் இந்த தொனியைக் கொண்டிருப்பதில்லையோ, எவர்கள் இந்த எல்லையை அடைந்திருக்கவில்லையோ, அவர்களிலும் பெரும்பாலார் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், இறைவன் எங்களுக்காக என்ன செய்து கொண்டிருக்கின்றான்? என்பது போன்ற பேச்சுக்களைப் பேசுகின்ற எல்லைக்கு சென்றடையவில்லைதான். எனினும், அப்படிப்பட்டவர்களாக இல்லாதபோதிலும், அவர்களிலும் பெரும்பாலானவர்கள் இப்படிப்பட்டவர்களாக காணக் கிடைத்துள்ளனர். அதாவது, இறை வணக்கம் செய்து சிறிது ஆணவம் நிச்சயம் வந்து விடுகின்றது. இறைவணக்கம் செய்த பிறகும் தங்களுடைய பணிவான நிலையில் நிலைத்திருப்பவர்கள் மிகவும் குறைவானவர்களே இருக்கின்றனர். ஆனால், தமது இறை வணக்கத்தில் பணிவுடன் நிலைத்திருப்பவர்களே நல்லடியார்களின் கூட்டத்தினராக இருக்கின்றனர். இதே நல்லடியார்களின் கூட்டத்தினரே தாழ்மையுடன் இருக்கின்றனர். மேலும், அவர்கள் தங்கள் இறை வணக்கத்தையும் மறைத்துக் கொள்கின்றனர்; அல்லாஹ்வின் மீதான அன்பையும் மறைத்துக் கொள்கின்றனர்; மேலும், அல்லாஹ் நமக்கு இறை வணக்கம் செய்வதற்கு நற்பேறு வழங்கியதே ஒரு பேருபகாரம் ஆகும் என்று அதை அல்லாஹ்வின் அருளாகவே கருதுகின்றனர். இவர்களே உண்மையில் நல்லடியார்களின் கூட்டத்தினர் ஆவர்.

நன்மைகள் யாவை? என்று மக்கள் கேட்கின்றனர். அல்லாஹ் எப்போது திருப்தி அடைகிறான் என்பதை எவ்வாறு அறியலாம்? என்று இன்றைய காலத்து பிள்ளைகளும், இளைஞர்களும் பெரும்பாலும் கேட்கின்றனர். அல்லாஹ் இவ்வாறு திருப்தி அடைகிறான். அதாவது நீங்கள் நன்மைகளை செய்யுங்கள்; மேலும், அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டுமே செய்ய வேண்டும். மனிதன் தன்னைத் தானே ஆய்வு செய்து பார்க்க முடியும். வெளியிலிருந்து வேறு ஒருவரை நீதிபதியாக ஆக்குவதற்கான அவசியமில்லை. அவர் என்ன நன்மைகளை செய்து கொண்டிருக்கின்றானோ அவற்றை அவர் அல்லாஹ்விற்காக செய்து கொண்டிருக்கின்றார் என்றால் பின்னர் அவை நிச்சயமாக அல்லாஹ்விற்கு விருப்பமானவையாகும்.

அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள்: அப்படி என்றால், நன்மைகளின் தலைவரும், நபிமார்களின் தலைவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும். அன்னார் (ஸல்) அனைத்து சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டவர்களாகவும், அனைத்து நன்மைகளின் ஊற்றாகவும் இருந்தார்கள். இறை வணக்கத்தை ஓர் அகந்தைக்காக அல்லது பெருமைக்காகச் செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும்; அவர்கள் அல்லாஹ்விற்கு எந்த அளவு அடிமைத்துவத்தை நிறைவேற்றினார்களோ, அதே அளவிற்கு அவர்களின் ஆர்வத்தின் நெருப்பு மேலும் தீவிரமடைந்தது. தாம் செய்த இறை வணக்கத்தின் மூலம் அல்லாஹ்வை தமக்கு கடன்பட்டவனாக ஆக்குவதற்குப் பகரமாக, அல்லாஹ்வே! நான் இவ்வளவு இபாதத் செய்வதற்கு நற்பேறு பெற்றது கூட உன் அருளினாலேயே கிடைக்கின்றது என்று அன்னார் (ஸல்) சுயமே நாணம் கொண்டவர்களாக இருந்தார்கள். .

அன்னாரது இறை வணக்கமானது ஒரு தொடரின் வடிவத்தை கொண்டிருந்தது. சில பகுதி நேரத்தை அன்னார் (ஸல்) இறை வணக்கத்தில் கழிக்கும்போது, இது அல்லாஹ்வின் பெரும் கருணையாகும்; அவன் இந்த பணியை செய்வதற்கு நற்பேறு வழங்கியுள்ளான் ; மேலும் இந்த கருணைக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும் என்று எண்ணுவார்கள். மேலும் இதே நன்றி செலுத்தும் உணர்வுடன், தன்னிச்சையாக மேலும் சில இறை வணக்கங்களை செய்வார்கள். பின்னர் அதையும் அல்லாஹ்வின் ஓர் அருளாகவே கருதுவார்கள்; ஏனெனில் வல்ல இறைவனின் கருணை இல்லாத வரை நன்றி செலுத்துவதும் எல்லோருடைய வேலை அன்று.

அதாவது, நன்றி செலுத்துவதற்கு கிடைத்த வாய்ப்பும் கூட அல்லாஹ்வின் கருணையினாலேயே கிடைத்துள்ளது. பின்னர் இன்னும் அதிகமான ஆர்வம் வெளிப்படுகின்றது. அதன் பிறகு அன்னார் (ஸல்) தமது இறை வணக்கத்தில் மும்முரமாகி விடுவார்கள். இந்த இறை வணக்கத்தின் தொடர் எவ்வளவு பரந்ததாக இருந்தது என்றால், மீண்டும் மீண்டும் இறை வணக்கம் செய்து அன்னாரின் பாதங்கள் வீங்கி விடும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த அளவு இறை வணக்கம் செய்வதற்கு தங்களுக்கு என்ன தேவை உள்ளது? தங்களுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டனவே! என்று ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு, நான் நன்றி செலுத்த வேண்டாமா? என்பதே அன்னார் (ஸல்) அளித்த பதிலாக இருந்தது.

ஹஸ்ரத் முகீரா பின் ஷஅபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது, மிகவும் நீண்ட நேரம் நின்று வந்தார்கள். இதற்கு முன், அன்னாரின் பாதங்கள் அல்லது கால்தசைகள் வீங்கி விடும் என்ற ஹதீஸ் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. தாங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று மக்கள் அன்னாரிடம் கேட்கும்போது, நான் நன்றி செலுத்தும் அடியாராக ஆக வேண்டாமா? என்பது அன்னாரின் பதிலாக இருந்தது.

அல்லாஹ்! அல்லாஹ்! என்ன ஒரு காதல், என்ன ஓர் அன்பு, என்ன ஒரு நேசம்! இறைவனின் நினைவில் அன்னார் (ஸல்) நிற்கின்றார்கள். மேலும், தமது உடலைப் பற்றிய உணர்வே அன்னாருக்கு இருக்கவில்லை.

இரத்த ஓட்டம் கீழ் நோக்கி துவங்கி விடுகின்றது. மேலும், அன்னாரின் பாதங்கள் வீங்கிவிடுகின்றன. ஆனால் அந்த அன்பானது இதன் பக்கம் சிந்திக்கவே விடவில்லை. இவர்கள் என்ன செய்கின்றார்கள்? என்று சுற்றியிருந்த நபர்கள் இதைக் கண்டு ஆச்சரியப்படுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலியை அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உணர்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும், ஏன் உங்களை நீங்களே இவ்வளவு துன்பத்தில் ஆழ்த்துகின்றீர்கள்? மேலும் இந்த அளவு வேதனையை சுமக்கின்றீர்கள்? இறுதியில், தங்களின் உடல்நலம் மற்றும் ஓய்வை பற்றி கொஞ்சமாவது கருத்தில் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கவனமூட்டினார்.

ஆனால், அந்த துன்பம் மக்களை நிம்மதி இழக்கச் செய்தது; மேலும் அதனை பார்க்கக் கூடியவர்களை தாக்கத்திற்குள்ளாக்கியது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இறை வணக்கங்களில் சற்று சோம்பல் காட்டுதல் மற்றும் தமது இறைவனின் நினைவில் இனி இவ்வளவு நீண்ட நேரம் நிற்பதை தவிர்த்தல் போன்றவற்றிற்கு பகரமாக அன்னார் (ஸல்), அந்த மக்களின் அந்தக் கூற்றை வெறுக்கின்றார்கள்;. மேலும்,

இவ்வாறு பதிலளித்தார்கள்:

நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியாராக ஆக வேண்டாமா? அவன் என் மீது இவ்வளவு உபகாரம் செய்கிறான்; இவ்வளவு அருள்களை வழங்குகிறான்; இவ்வளவு பரிவுடன் என்னுடன் நடந்து கொள்கிறான். அவ்வாறிருக்க, அவனுடைய அந்த கருணைகளுக்குப் பகரமாக நான் அவனது நாமத்தை உச்சரிக்க வேண்டாமா? மேலும் அவனது அடிமைத்துவத்தில் அலட்சியம் காட்டத் தொடங்கிவிட வேண்டுமா?

என்ன ஒரு தூய்மை நிறைந்த பதில்! எத்தகைய நன்றியுணர்வை வெளிப்படுத்தும் பதில் இது! இந்த பதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த உள்ளத்தின் உணர்வுகளை எவ்வளவு தெளிவாக வெளிப்படுத்துகின்றது!

இறைவனின் நினைவும், அவனை நினைவு கூரும் இந்த துடிப்பும் வேறு எவருடைய உள்ளத்திலாவது இருக்கிறதா? வேறு எவராவது இதற்கான முன்மாதிரியை சமர்ப்பிக்க முடியுமா? வேறு ஒரு சமூகத்தின் ஒரு சான்றோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த பரிசுத்தத்துடன் போட்டியிட முடியுமா? ஆனால் பாருங்கள்: எங்கு அன்னார் (ஸல்) இதை சுயமே செய்து வந்தார்களோ அங்கு தமது சமுதாயமும் இவ்வாறே செய்ய வேண்டும் என்று அவர்களிடம் எதிர்பார்த்தார்கள்.

பின்னர் இதன் தொடர்ச்சியாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பணிகளில் எவ்வாறு மும்முரமாக இருந்து வந்தார்கள்? என்பதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அன்னார் (ஸல்) வெறும் இறை வணக்கத்தை மட்டும் செய்துவிட்டு மற்ற எல்லாப் பணிகளும் முடிந்துவிட்டது என்று இருந்து விடவில்லை. மேலும், இரவில் இறை வணக்கத்திற்காக எழுந்து நின்றுவிட்டு, பகல் முழுவதும் உறங்கி வந்தார்கள் என்பதும் இல்லை. ஏனெனில் அவ்வாறிருந்திருந்தால், பின்னர் பகல் முழுவதும் வல்ல இறைவனின் நாமத்தைப் பரப்புதல், அவனுக்கு கட்டுப்படுதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றை நடைமுறையில் கொண்டு வருவதற்கான முயற்சியில் அன்னார் (ஸல்) முயன்று கொண்டிருந்த அந்த ஆர்வமும், ஏக்கமும் தெளிவாக தெரிய வந்திருக்காது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே ஐந்து நேரங்களிலும் இமாமாக இருந்து தொழுகையை நடத்தினார்கள். தூரதூரத்திலிருந்து வந்த தூதுவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் தாமே சந்தித்தார்கள்; மேலும், அவர்களது கோரிக்கைகளுக்குப் பதிலளித்து வந்தார்கள். போர்க் களங்களில் கூட தாமே தலைமையேற்று நடத்தினார்கள். ஸஹாபிகளுக்கு திருக்குர்ஆன் போதனையையும் வழங்கினார்கள். நீதிபதியாகவும் தாமே இருந்தார்கள். மக்களுக்கிடையே நாள் முழுவதும் எழும் சண்டை சச்சரவுகளுக்குத் தீர்ப்பளித்தார்கள். பொருளாதார நிர்வாகம், பைத்துல் மாலின் நிர்வாகம், நாட்டின் நிர்வாகம், இஸ்லாமிய மார்க்கத்தை நடைமுறைப்படுத்துதல், மனைவிமார்களின் உரிமைகளை நிறைவேற்றுதல், பின்னர் வீட்டுப் பணிகளிலும் பங்கெடுத்தல் இவை அனைத்தையும் அன்னார் (ஸல்) பகல் நேரத்தில் செய்து வந்தார்கள். இந்த அனைத்தையும் செய்து முடித்த பிறகு, அயர்ந்து படுக்கையில் சென்று கிடப்பதற்கு பகரமாகவும், சூரியன் உதிக்கும் வரை தலை தூக்காமல் இருப்பதற்குப் பகரமாக, மீண்டும் மீண்டும் எழுந்து அமர்ந்து, அல்லாஹ்வின் தஸ்பீஹ் செய்தார்கள்; தஹ்மீத் செய்தார்கள்; பாதி இரவு கடந்த பின் எழுந்து, உளூ செய்து, நாலாபுறமும் அமைதியும் நிசப்தமும் சூழ்ந்திருக்கும் வேளையில், தமது இறைவனின் சமூகத்தில் மிகுந்த தாழ்மையுடனும் பணிவுடனும் நின்று, திருக்குர்ஆன் ஓதினார்கள். மேலும் எவ்வளவு நீண்ட நேரம் நிற்பார்கள் என்றால் அவர்களின் கால்கள் வீங்கி விடும். எந்த அளவிற்கு என்றால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை நானும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொழுவதற்காக நின்றேன். அப்போது எந்த அளவுக்கு துன்பம் ஏற்பட்டது என்றால், தொழுகையை முறித்துக் கொண்டு ஓடிவிடலாம் என்று எனக்கு தோன்றியது. ஏனெனில் என் கால்களால் அப்போது அந்த அளவு பாரத்தைத் தாங்க முடியவில்லை; மேலும் அவ்வாறு நீண்ட நேரம் நின்றிருப்பது எனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

இது ஓர் இளைஞரின் வாக்குமூலம் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட வயதில் மிகவும் இளையவர். இதிலிருந்து நம்மால் இதனை புரிய முடிகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மன உறுதியும், அன்பின் வேகமும் எவ்வளவு தீவிரமாக இருந்தது என்றால் முதுமையடைந்த நிலையிலும், நாள் முழுவதும் பணிகளில் ஈடுபட்டிருந்தபோதிலும், இறை வணக்கத்தில் எவ்வளவு நீண்ட நேரம் நின்றார்கள் என்றால், இளமையான மற்றும் பலமிக்க இளைஞர்களால் கூட அன்னாரின் பணிகளில் ஈடு கொடுக்க முடியவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அந்த இளைஞர்களால் நிற்க முடியவில்லை. மேலும் சோர்ந்து பின்தங்கி விட்டனர்.

இந்த இறை வணக்கம் ஏன் செய்யப்பட்டது? என்ன காரணத்தால் இருந்தது? என்ன காரணத்தால் அன்னார் (ஸல்) இந்தக் கடினத்தை தாங்கி வந்தார்கள். என்ன காரணத்தால் அன்னார் (ஸல்) இந்த துன்பத்தை சகித்து வந்தார்கள்? ஏனெனில், அன்னார் (ஸல்) ஒரு நன்றியுள்ள அடியாராக இருந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் கருணைகளை கண்டு, அன்னாரது இதயம் எப்போதும் அவனை நினைவுகூருதலின் பக்கம் சாய்ந்திருந்தது.

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் நூல், ஸீரதுன் நபி, தொகுதி 1, பக் 131 - 149)

அல்லாஹ்விடம் அன்னாருக்கு ஓர் அன்பு இருந்தது. அபூ சல்மா பின் அப்திர் ரஹ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், ரமலான் மாதத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தொழுகை எவ்வாறு இருந்தது? என்று கேட்டார்கள்.

தற்போதும் இன்னும் ஒரு மாதத்தில் ரமலான் வர உள்ளது. நாம் ரமலானிலோ இறை வணக்கங்கள் செய்கின்றோம் தான். நாம் அதற்கு முன்னரும் செய்ய வேண்டும்.

எவ்வாறிருப்பினும், இதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ரமலானிலும், அதைத் தவிர வேறு எந்த மாதத்திலும் பதினொன்று ரக்அத்துகளை விட அதிகமாக தொழுததில்லை. அந்த தொழுகை எவ்வாறு இருந்தது? அன்னார் (ரலி) கூறினார்கள்: அன்னார் (ஸல்) பதினொன்று ரக்அத்துகளை விட கூடுதலாக நஃபீல் தொழுதது கிடையாது. நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள். நீங்கள் அவற்றின் அழகையும், நீட்சீயையும் பற்றி கேட்காதீர்கள். அவை எத்தகைய மிகவும் அழகான மற்றும் நீளமான தொழுகையாக இருந்தது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள்; நீங்கள் அவற்றின் அழகையும், நீட்சீயையும் பற்றி கேட்காதீர்கள். பின்னர் அன்னார் (ஸல்) மூன்று ரக்அத்துகள் தொழுவார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் வித்ர் தொழுவதற்கு முன் உறங்கி விடுகின்றீர்களா? என்று நான் கேட்டேன். அதாவது, நான்கு ரக்அத்துகள் தொழுதுவிட்டு, சிறிது நேரம் ஓய்வெடுக்கின்றீர்கள்; பின்னர் வித்ர் தொழுகின்றீர்களா? அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என் கண்கள் உறங்குகின்றன; ஆனால் என் இதயம் உறங்குவதில்லை. (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண்: 3569) அது அல்லாஹ்வின் மீதான நேசத்தால் விழித்துக் கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு, ஓரிடத்தில் அன்னாரின் இறைநெருக்கம் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் மற்றோர் இடத்தில் அன்னாரின் இறைநெருக்கம் பற்றி இவ்வாறு கூறியுள்ளான்:

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

பொருள்: என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் அகில உலகங்களின் இறைவனான அல்லாஹ்வுக்கே உரியதாகும். (அல் அன்ஆம்: 163)

அதாவது, மக்களிடம் அறிவித்து விடுவீராக: என் நிலை இதுவேயாகும். அதாவது நான் என் இருப்பிலிருந்து முற்றிலும் கரைந்து விட்டேன். என் அனைத்து இறை வணக்கங்களும் அல்லாஹ்வுக்காகவே ஆகிவிட்டன. இது, எந்த விஷயத்தை சுட்டிக் காட்டுகின்றது என்றால், ஒவ்வொரு மனிதனும் அவன் முழுமை அடையாத வரையில், தூய்மையாக அல்லாஹ்வுக்காக மட்டுமே அவனால் இறை வணக்கம் செய்ய முடியாது. இன்னும் கூறப்போனால், அவரது சில இறை வணக்கங்கள் இறைவனுக்காகவும், சில இறை வணக்கங்கள் அவரது நஃப்ஸிற்காகவும் இருக்கும். ஏனெனில் அவன், இறைவன் என்ன மகத்துவமும் பெருமையும் இருக்க வேண்டுமோ அந்த மகத்துவம் மற்றும் பெருமையை அவர் தனது நஃப்ஸிற்காக நாடுகின்றார். இதுவே அந்த இறை வணக்கத்தின் உண்மைத்துவம் ஆகும். அதுபோலவே, அவரது இறை வணக்கத்தின் ஒரு பகுதி படைப்பினங்களுக்காக இருக்கின்றன. ஏனெனில், எந்த மகத்துவமும், மேன்மையும், வல்லமையும், ஆதிக்கமும் இறைவனுடன் குறிப்பிட்டதாக இருக்க வேண்டுமோ அந்த மகத்துவம் மற்றும் வல்லமையின் பங்கை படைப்பினங்களுக்கும் அவர் கொடுக்கின்றார்.

எனவே அவர் இறைவனை வணங்குவதைப் போன்று, நஃப்ஸ் மற்றும் படைப்பினங்களையும் வணங்குகின்றார்; இன்னும் கூறப்போனால், பொதுவாக எல்லா அற்ப உலகியல் காரணிகளுக்கும் தனது வழிபாட்டில் பங்களிக்கின்றார். அதாவது உலகின் அனைத்து அற்பமான காரணிகளுக்கும் தனது இறை வணக்கத்தில் பங்கு வழங்குகிறார்.

அதாவது உலகின் கீழான காரணிகள் இருக்கின்றனவே அவற்றிற்கும் பங்களிக்கின்றார்.

ஏனெனில், இறைவனின் எண்ணம் மற்றும் நியதிக்கு எதிரில் அந்த காரணிகளுக்கும் அழித்தல் மற்றும் நிலைபெற்றிருத்தல் போன்ற நடைமுறையில் பங்கு இருக்கின்றன என்று கருதுகின்றார்.

ஆகவே, அத்தகைய மனிதன் வல்ல இறைவனின் உண்மையான அடியானாக ஆக முடியாது. அதாவது எவன் சிலநேரம் இறைவனின் மகத்துவத்தில் தனது நஃப்ஸை இணையாக்குகின்றாரோ, மேலும் சிலநேரம் படைப்பினங்கள் மற்றும் காரணிகளை இணையாக்குகின்றாரோ அவர் வல்ல இறைவனை உண்மையாக வணங்குபவராக இருக்க முடியாது. மாறாக, இறைவனை உண்மையாக வணங்குபவர் யாரென்றால், எவர் அல்லாஹ்வின் அனைத்து மகத்துவங்களையும், அனைத்து பெருமைகளையும், அனைத்து அதிகாரங்களையும் இறைவனுக்கு மட்டுமே வழங்குகின்றாரோ மேலும் வேறு எவருக்கும் வழங்குவதில்லையோ அவரே ஆவார்.

ஏகத்துவத்தின் இந்த படித்தரத்தை மனிதனின் இறை வணக்கம் அடைந்து விடும்போது, அந்நேரத்தில் அவர் உண்மையான முறையில் இறைவனை வணங்குபவர் என்று அழைக்கப்படுவார். அத்தகைய மனிதன், நாவால் இறைவன் ஏகன் ஆவான்; அவனுக்கு இணையில்லை என்று கூறுவார்.

لَا شَرِيكَ لَهُ

என்று கூறுகின்றார்; மேலும் அதேபோன்று தனது செயல்களாலும், அதாவது தமது இறை வணக்கங்களாலும், அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கு சாட்சி அளிக்கிறார்.

எனவே இந்த முழுமையான படித்தரத்தின் பக்கமே மேற்குறிப்பிட்ட வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது நீர் மக்களிடம் கூறுவீராக என்னுடைய அனைத்து வணக்கங்களும் இறைவனுக்கே உரியவையாகும். அதாவது, எனது இறைவணக்கங்களில் நஃப்ஸுக்கும், படைப்பினங்களுக்கும் காரணிகளுக்கும் எந்தப் பங்கும் இல்லை.

பின்னர் இதன் பிறகு கூறினார்கள்:

என் தியாகங்களும் இறைவனுக்காக மட்டுமே உரியவை ஆகும்; என் வாழ்வும் இறைவனுக்காகவே ஆகும்; என் மரணமும் இறைவனுக்காகவே ஆகும். நினைவு இருக்கட்டும். அரபி அகராதியில் نُسُك என்பதற்கு குர்பானி என்று கூறுவர். வசனத்தில் உள்ள நுஸுக் என்ற சொல் அதன் பன்மை ஆகும். அதேசமயம், இதற்கு இறை வணக்கம் என்ற மற்றொரு பொருளும் உண்டு. எனவே, இங்கு பயன்படுத்தப்பட்ட சொல்லானது இறைவணக்கம் மற்றும் தியாகம் இரண்டுக்கும் பொருந்துகின்றது. இது, இந்த விஷயத்தின் பக்கம் சுட்டி காட்டுகின்றது. அதாவது, முழுமையான இறை வணக்கங்களில் நஃப்ஸ், படைப்பினம் மற்றும் காரணி ஆகியவற்றின் பங்கு இருக்காது. உண்மையில், தியாகம் என்று ஒன்று இருக்கின்றது; முழுமையான தியாகம் என்பது உண்மையில் முழுமையான இறை வணக்கம் ஆகும். அதன் பின்னர் கூறப்பட்ட, எனது வாழ்வும் இறைவனுக்காகவே ஆகும்; எனது மரணமும் இறைவனுக்காகவே ஆகும். இந்த இறுதி வாக்கியம், குர்பானி என்ற சொல்லின் விளக்கமாகும். இங்கு குர்பானி என்றால் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவற்றின் குர்பானி என்ற ஐயத்தில் எவரும் விழுந்து விடாமலிருக்க விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அதாவது, எனது வாழ்வும், எனது மரணமும் இறைவனுக்கு மட்டுமே உரியதாகும் என்ற இந்த வாக்கியத்தின் மூலம் இந்த தியாகத்தின் அர்த்தம் ஆன்மாவின் தியாகமாகும் என்று தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

குர்பானி என்ற சொல் குர்ப் (நெருக்கம்) என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது. இது இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது மனிதனின் அனைத்து மன ஆற்றல்கள் மற்றும் மன இயக்கங்களின் மீதும் மரணம் ஏற்பட்டு விடும் போது தான் இறை நெருக்கம் கிடைக்கின்றது.

சுருக்கமாக, இந்த வசனம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான இறை நெருக்கத்திற்கு ஒரு பெரும் சான்றாகும். அல்லாஹ்வுடன் அன்னாருக்கு ஒரு உச்சபட்சமான, முழுமையான நெருக்கம் உள்ளது.

இந்த வசனம் இதை வெளிப்படுத்துகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் எந்த அளவு மாய்ந்தும், மூழ்கியும் விட்டிருந்தார்கள் என்றால் அவர்களின் வாழ்க்கையின் அனைத்து மூச்சும், அவர்களின் மரணமும் இறைவனுக்காக மட்டுமே ஆகிவிட்டது. அன்னாரின் இருப்பில் நஃப்ஸ், படைப்புகள் மற்றும் காரணிகள் ஆகியவற்றின் எந்தப் பங்கும் எஞ்சியிருக்கவில்லை. மேலும், அன்னாரின் ஆன்மா இறைவனின் சன்னிதானத்தில் எவ்வளவு தூய்மையாக வீழ்ந்திருந்தது என்றால், அதில் ஓர் அணுவளவு கூட அல்லாஹ் அல்லாதவற்றின் கலப்பு இருக்கவில்லை. (அஸ்மத் அன்பியா அலைஹிஸ்ஸலாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 18, பக்கம் 664 - 666)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றோர் இடத்தில் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் தஆலா சில விஷயங்களை ஆகுமானவையாக ஆக்கிவிட்டான்; ஆனால், அதற்கு மனிதன் தனது முழு வாழ்நாளையும் அதிலேயே கழித்து

விட வேண்டும் என்பது பொருள் அல்ல. இறைவனோ

يَبِيتُونَ لِرَبِّهِمْ سُجَّدًا وَقِيَامًا

என்பதை தனது அடியார்களின் பண்பாக கூறுகிறான். (அல் ஃபுர்கான்: 65)

பொருள்: அந்த மக்கள் தங்களது இறைவனுக்காக இரவுகளை ஸஜ்தாவிலும், நின்று கொண்டும் கழித்து விடுவர். அவர்கள் தங்கள் இறைவனுக்காக முழு இரவையும் ஸஜ்தா மற்றும் கியாமில் கழிக்கின்றனர்.

இப்போது பாருங்கள்! இரவு, பகலாக மனைவிமார்களிடம் மூழ்கிக் கிடப்பவன், இரவை எப்படி அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்ப இறை வணக்கத்தில் கழிக்க முடியும்? அவன் திருமணம் செய்யவில்லை ; மாறாக, அவன் ஒருவகையில் இறைவனுக்கு இணையை உருவாக்குகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒன்பது மனைவிகள் இருந்தனர்; அவர்கள் இருந்த போதிலும், அன்னார் (ஸல்) முழு, முழு இரவையும் இறை வணக்கத்தில் கழித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முறையாக ஓர் இரவு ஆயிஷா ஸித்தீக்கா (ரலி) அவர்களிடம் இருந்தது. இரவின் சிறிய பகுதி கழிந்தபோது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கண் விழித்தார்கள். பார்த்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அருகில் இல்லை. அநேகமாக, அன்னார் (ஸல்) வேறு மனைவியின் வீட்டிற்கு சென்றிருப்பார்கள் என்ற ஐயம் உடனே அன்னாருக்கு ஏற்பட்டது. அன்னார் (ரலி) எழுந்து சென்று ஒவ்வொரு வீட்டிலும் தேடினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கிடைக்கவில்லை. இறுதியில், அன்னார் (ஸல்) கப்ர்ஸ்தானில் இருப்பதையும், அன்னார் (ஸல்) ஸஜ்தாவில் அழுது கொண்டிருப்பதையும் அன்னார் (ரலி) கண்டார்கள்.

தற்போது பாருங்கள்! உயிருடன் இருக்கும் மற்றும் விரும்பக் கூடிய மனைவியை விட்டுவிட்டு, மரணித்தவர்களின் இடமான கப்ரஸ்தானுக்குச் சென்று விட்டார்கள்; மேலும் ஸஜ்தாவில் அழுதுகொண்டிருந்தார்கள். ஆக, அன்னார் (ஸல்) பலதார மணம் புரிந்தது, மனஇச்சை அல்லது காமத்தை பின்பற்றுதலின் அடிப்படையில் அமைந்திருக்க முடியுமா என்ன ? அன்னார் (ஸல்) மீது குற்றம் சுமத்துபவர்கள் இவ்வாறு குற்றம் சுமத்துகின்றனர்.

சுருக்கமாக, இதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் உண்மையான விருப்பம் என்னவென்றால், உங்கள் மீது காம இச்சைகள் மேலோங்கி விடக் கூடாது; மேலும் இறையச்சம் முழுமை பெறுவதற்காக உண்மையில் தேவை இருந்தால், மற்றொரு திருமணம் செய்து கொள்ளலாம். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 66, 1984-ம் ஆண்டு பதிப்பு)

இறையச்சத்தை கருத்தில் கொண்டு கூடுதல் திருமணம் செய்ய வேண்டுமென்றால் செய்து கொள்ளுங்கள் என்ற இந்த பொதுவான அறிவுரையை ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு அன்னார் (அலை) வழங்கியுள்ளார்கள். ஆனால் தனிப்பட்ட ஆசைகள், பாலியல் இச்சைகளின் காரணமாக திருமணங்கள் செய்யப்படுவதோ, அல்லது அதிகமான மனைவிகளை வைத்துக் கொள்வதோ கூடாது.

இன்றைய நாட்களில் இதற்கான புகார்களும் வருகின்றன. இஸ்லாம் இதற்கு அனுமதி அளிப்பதில்லை. தேவை நியாயமானதாக இருக்க வேண்டும். எனவேதான் இஸ்லாம் மீது ஆட்சேபனை செய்யப்படுகிறது. இஸ்லாத்தில் சிலர் ஆகுமற்ற முறையில் திருமணங்கள் செய்கின்றனர்; எனவே அவர்களின் காரணமாக இஸ்லாத்தில் பலதார மணத்திற்கு அனுமதி உள்ளது என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆனால், அதற்கும் சில நிபந்தனைகள் உள்ளன; அவற்றை முழுமை செய்வது அவசியமாகும் என்பதை முஸ்லிம்களும், ஆட்சேபனை செய்பவர்களும் நினைவில் கொள்ள வேண்டும்:

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் அவர்கள் கூறினார்கள்:

நான் முன்பும் இந்த ஹதீஸை ஒரு குத்பாவில் எடுத்துரைத்து விட்டேன். உலகியல் பொருள்களில் எனக்கு பெண்கள் மற்றும் நறுமணம் விருப்பமானவையாகும். ஆனால், எனக்கு எல்லாவற்றையும் விட அதிகமாக விருப்பமானது எனது கண்களின் குளிர்ச்சியளிக்கக் கூடிய அந்த தொழுகையே ஆகும். (ஸுனன் நிஸாயி, ஹதீஸ் எண்: 3391)

இதற்கான ஒரு விரிவான விளக்கம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களிடமிருந்து கிடைக்கின்றது. எனவே இதனை நான் மீண்டும் வைக்கின்றேன். அன்னார் (ரலி) இதனை இவ்வாறு விவரித்துள்ளார்கள்:

قُرَّةُ عَيْنِي فِي الصَّلَاةِ

தொழுகையில் தான் எனது கண்களின் குளிர்ச்சி வைக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாத்திற்கு, ஏனைய மார்க்கங்களுக்கு எதிரில் கிடைத்துள்ள ஒரு தனிச்சிறப்பாகும். உலகில் தொழுகையைப் போன்று முறையாக அமைக்கப்பட்ட வழிபாடு வேறு எந்த சமுதாயத்திலும் இல்லை. முந்தைய அனைத்து மதங்களும் வெளிப்புற அசைவுகளில் அதிக அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தன அல்லது ஆன்மிகம் பலவீனமடைந்து விடும் அளவில் அவர்களுடைய வழிபாட்டு நேரங்கள் மிகுந்த இடைவெளியுடன் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இஸ்லாம் மட்டுமே எப்படிப்பட்ட ஒரு மார்க்கமாக உள்ளதென்றால், அதனை பின்பற்றுபவர்கள் ஒரு நாளில் ஐந்து முறை வழிபாட்டிற்காக அழைக்கப்படுகின்றனர். வேறு எந்த மார்க்கத்திலும் இவ்வாறு இல்லை. இப்போது மக்கள் சிந்திக்க வேண்டும். ஒருநாளில் ஐவேளைத் தொழுகைகள் மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளன. எனவே ஆன்மிகமும் நிலைத்திருக்கும் பொருட்டு அவற்றை நிறைவேற்றுவதும் அவசியமாகும். உலகியல் காரியங்களில் மட்டுமே ஈடுபட்டிருப்பதும் கூடாது.

அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள்: கிறிஸ்தவர்களும், இந்துக்களும் வாரத்தில் ஒருமுறை வழிபாட்டிற்குச் செல்கின்றனர். அவர்களில் சிலர் இரவும், பகலும் வழிபாடு செய்வார்கள் என்பதும் சாத்தியமே. ஆனால், இங்கு கூட்டு வழிபாட்டைப் பற்றி குறிப்பிடப்படுகின்றது. ஒரு நாளில் பலமுறை வழிபாடு செய்யும் கட்டளையை இறைத் தூதர் (ஸல்) அவர்களே வழங்கியுள்ளார்கள்.

மேலும் ஸலாத் என்பதற்கு துஆ என்ற பொருளும் உள்ளது. மேலும், இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆவின் மீது அழுத்தம் கொடுத்துள்ளார்கள். பிற மார்க்கங்களின் வழிபாடுகளில் வெளிப்படையான விஷயங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், அவற்றின் மூலம் வழிபாட்டில் இன்பம் உண்டாக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, ஆரியர்களிலும் கிறிஸ்தவர்களிலும் பாடல் இசைப்பது இருக்கின்றது.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு எப்படிப்பட்ட இறை வணக்கம் வழங்கப்பட்டுள்ளது என்றால், அதிலேயே இன்பம் உள்ளது; மேலும் அதில் எத்தகைய இன்பம் உள்ளதென்றால், அதற்கு வேறு எந்த மதமும் போட்டி போட முடியாது. ( ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் நூல், ஸீரத்துன் நபி (ஸல்) அவர்கள், தொகுதி 2, பக்கம் 263)

ஆகவே, பாடல் இசைப்பது இல்லை; மாறாக, மௌனமாக அல்லாஹ்வை வணங்குதல், அவனது புகழையும் பரிசுத்தத்தையும் எடுத்துரைத்தல் மற்றும் அல்லாஹ்வின் துதி பாடுதல் பின்னர் மன்றாடுதல் ஆகிய இவை அனைத்தும் எத்தகைய விஷயங்கள் மற்றும் இறை வணக்கங்களாக இருக்கின்றன என்றால், அதில் இன்பம் இருக்கின்றது. பின்னர் அதன் மூலம் அல்லாஹ்வின் மீதான அன்பும் அதிகரிக்கின்றது.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்பட்டவாறு தொழுகைகளிலும், வழிபாடுகளிலும் இந்த தரத்தை அடைய நாம் முயற்சி செய்ய

வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான முறையில் முஸ்லிம்கள் என்று அழைக்கப்பட முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியவாறு கூறினார்கள்:

தாங்கள் எனது செயல் முறையைப் பற்றி கேட்டுள்ளீர்கள். அந்த விஷயம் இதுவே ஆகும். அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுதலின் பக்கம் ஆர்வம் கொள்ளுங்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுதலின் பக்கம் ஆர்வம் கொள்ளுங்கள்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எந்த செயல்களில் உயர்தரமான அன்பை வெளிப்படுத்தியுள்ளார்களோ, அவை இரண்டு ஆகும். ஒன்று தொழுகை, மற்றொன்று ஜிஹாது.

தொழுகை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

قُرَّةُ عَيْنِي فِي الصَّلٰوةِ

அதாவது, எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையில் வைக்கப்பட்டுள்ளது. ஜிஹாது பற்றி கூறுகின்றார்கள்: நான் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட வேண்டும்; பின்னர் உயிர்ப்பிக்கப்பட வேண்டும்; பின்னர் மீண்டும் கொல்லப்பட வேண்டும்; பின்னர் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும்; பின்னர் கொல்லப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இதனை எடுத்துரைத்தப் பிறகு அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

இந்தக் காலத்தில் ஜிஹாது ஆன்மிக வடிவத்தை பெற்று விட்டது. மேலும் இக்காலத்திற்கான ஜிஹாது இதுவே ஆகும். அதாவது இஸ்லாத்தின் கலிமாவை மேலோங்கச் செய்ய முயற்சி செய்யுங்கள். எதிரிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளியுங்கள். தூய இஸ்லாத்தின் சிறப்புகளை உலகில் பரப்புங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்தன்மையை உலகிற்கு வெளிப்படுத்துங்கள். அல்லாஹ் வேறொரு வடிவத்தை உலகில் வெளிப்படுத்தும் வரை இதுவே ஜிஹாது ஆகும். (ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம், மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 9, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஆகவே, நாம் நமது இறை வணக்கங்களின் தரத்தையும் மற்றும் அல்லாஹ்வின் மீதான நேசத்தையும் அதிகரிக்கும்போதுதான் எழுதுகோல் மற்றும் தப்லீஃக் மூலமான ஜிஹாதிலும் பரக்கத் ஏற்படும். நாம் இந்த ஜிஹாதில் பங்கெடுக்க வேண்டும் என்று விரும்பினால், பின்னர் அல்லாஹ்வின் மீதான அன்பு மற்றும் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நமது இறை வணக்கங்களின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை பின்பற்றி நடந்தவாறு நாம் இதை செய்தால், அப்போதுதான் நமது பணிகளில் பரக்கத்தும் ஏற்படும்.

அல்லாஹ் இதற்கான நற்பேறை நமக்கு வழங்குவானாக.

இன்று பங்களாதேஷ் ஜமாஅத்தின் மாநாடும் நடைபெற்று வருகிறது. அங்கு எதிர்ப்பும் அதிகமாக உள்ளது. அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. அவர்களின் ஜல்ஸாவும் பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் நிறைவடையட்டுமாக. (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், பிப்ரவரி 6, 2026, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்
முபல்லிஃக்
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

*******  *

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**தலையங்கம்...**
**2-ம் பக்கத் தொடர்ச்சி**

அன்னார் (அலை) திருக்குர்ஆனின் சான்றுகளுடன் நிரூபணம் செய்தார்கள். மேலும் கூறினார்கள்: நான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அடிமையாவேன்; எனவே அந்த அடிமைத்தனத்தின் அருளினாலேயே அல்லாஹ் எனக்கு நபித்துவ அருளையும், இறை வஹீ மற்றும் 'உரையாடல் பெறும் அந்தஸ்தையும் வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதித் தூதர் ஆவார்கள்; அன்னாருக்குப் பிறகு இனி எந்த நபியும் வரமுடியாது; ஆனால், பனீ இஸ்ராயீல் நபியான ஹஸ்ரத் ஈஸா (அலை), முஹம்மதிய்ய உம்மத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபியாக வருவார் என்று முஸ்லிம் பிரிவினர் நம்புகின்றனர். அதேநேரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம்; (ஸல்) அவர்களின் உம்மத்தில் அன்னாரைப் பின்பற்றி, அன்னாரின் அடிமைத்துவத்தில் உம்மத்தீ நபியாக வருபவரை முஸ்லிம்கள் நிராகரிக்கின்றனர். இந்த தவறான கொள்கையின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிக்கும் குற்றத்தை முஸ்லிம்கள் இழைத்து வருகின்றனர் என்று முஸ்லிம்களுக்கு அவர்களின் தவறுகளை குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவித்து கொடுத்தார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சாராதவனாக இருந்திருந்தால், மேலும் அன்னாரைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், அந்நிலையில் எனது நற்செயல்கள் உலகின் அனைத்து மலைகளுக்கும் நிகராக இருந்திருந்தாலும் கூட இந்த கண்ணியத்தை, இறைவனிடம் உரையாடுகின்ற மற்றும் பேசுகின்ற இந்த கண்ணியத்தை நான் ஒருபோதும் பெற்றிருக்க மாட்டேன். ஏனெனில், இப்போது முஹம்மதிய நபித்துவத்தை தவிர மற்ற அனைத்து நபித்துவங்களும் முற்றுப் பெற்றுவிட்டன. ஷரீஅத் கொண்டுவரும் எந்த நபியும் வர முடியாது. (புதிய) ஷரீஅத் இன்றி நபி வர முடியும், ஆனால் அவர் முதலில் முஹம்மதிய உம்மத்தைச் சார்ந்தவராக மட்டுமே இருக்க வேண்டும்.' (தஜல்லியாத்தே இலாஹியா, ரூஹானி கஸாயின் பாகம் 20, பக்கம் 411-412)

அல்ஹம்துலில்லாஹ், கடந்த 125 ஆண்டு காலத்தில் லட்சக்கணக்கான மக்கள் தங்களது தவறைத் திருத்திக்கொண்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டுள்ளனர். எந்த அளவுக்கென்றால், பெரும் பெரும் அரபு அறிஞர்கள் கூட தங்கள் தவறை உணர்ந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த உண்மை பேரன்பரின் மீது ஸலவாத்து ஓதி வருகின்றனர்.

இதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறினார்கள்:

இறைவன் என்னை இக்காலத்தில் இமாம் மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாககவும் அனுப்பியுள்ளான். மேலும், எனது காலத்தில் இனி வாளேந்தி செய்யப்படும் ஜிஹாது தடுக்கப்பட்டுள்ளது. அந்தோ! முஸ்லிம்கள் காலத்தின் இமாமின் இந்தக் குரலை செவிமடுத்திருந்தால் இன்று உலகில் முஸ்லிமே முஸ்லிமை கொலை செய்யும் காட்சி அரங்கேறியிருக்காது. மேலும் அவர்களின் ஆற்றல் நேர்மறையான பணிகளில் பயன்பட்டிருக்கும். நீதி நெறி தீர்ப்பவரின் மேலும் சில தீர்ப்புகளின் பக்கம் எதிர் வரும் இதழ்களில் பார்ப்போம்!

*******  *



# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்து மனதை கவரக் கூடிய பேருரை**

**இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**
முஹம்மதின் மகள் ஃபாத்திமாவே! எனது செல்வத்திலிருந்து நீ எதை விரும்பினாலும் கேட்டுப் பெற்றுக் கொள்; ஆனால் அல்லாஹ்வின் முன்னிலையில் நான் உனக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது

அதாவது, உங்களது இறைவணக்கங்களும் அல்லாஹ்வுடன் நீங்கள் கொண்டுள்ள தொடர்பும் மட்டுமே உங்களைக் காப்பாற்றும் என்பதே இதன் பொருளாகும்

உண்மையான ஏகத்துவவாதிகள் என்பவர்கள் கடுகளவும் நன்மையை வெளிக் காட்டாதவர்களும், உண்மையை ஏற்றுக்கொள்வதில் உலகிற்கு அஞ்சாதவர்களும் ஆவார்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ளுங்கள். உலகம் அவர்களது செயலினால் கோபப்பட்டாலும் அவர்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

எனது சொந்த அனுபவத்தின் மூலம் நான் காண்பது என்னவென்றால், துஆக்களின் தாக்கம் என்பது நீர் மற்றும் நெருப்பின் தாக்கத்தை விட மேலானதாகும்; சொல்லப்போனால் இயற்கை காரணிகளின் வரிசையில் துஆவைப் போல மாபெரும் தாக்கம் கொண்ட பொருள் வேறொன்றுமில்லை (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 ஜனவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **23 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. கடந்த குத்பாக்களில் அல்லாஹ்விடம் அன்னார் (ஸல்) கொண்டிருந்த நேசம் தொடர்பாக கூறப்பட்டது. இன்று அது குறித்து மேலும் சிலவற்றை எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை வணக்க முறையும், அதன் அழகும் ஏற்கனவே கொஞ்சம் கூறப்பட்டு விட்டது. இன்று அது குறித்து ஹதீஸ்களின் வாயிலாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியராகிய ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அன்னாரின் அந்தஸ்தையும், இறைவன் மீதான அன்னாரின் நேசத்தின் காட்சியையும் எவ்வாறு படம் பிடித்து காட்டியுள்ளார்கள்? என்பது குறித்தும் சில குறிப்புகள் உள்ளன.

ஓர் அறிவிப்பில் வருகிறது; ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஓர் இரவு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இணைந்து தொழுதேன். அன்னார் (ஸல்) சூரா பக்கராவுடன் துவங்கினார்கள். அன்னார் (ஸல்) 100 வசனங்களுக்குப் பிறகு ருகூவிற்குச் செல்வார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் அன்னார் (ஸல்) அதைத் தாண்டிச் சென்றார்கள். பிறகு, அன்னார் (ஸல்) இந்த முழு சூராவையும் முடித்துவிட்டு ருகூவிற்குச் செல்வார்கள் என்று நான் கருதினேன். ஆனால் அன்னார் (ஸல்) அதற்குப் பின்னரும் தொடர்ந்து ஓதினார்கள். பிறகு அன்னார் (ஸல்) சூரா ஆலி இம்ரானைத் துவங்கி அதையும் ஓதினார்கள்.

அன்னார் (ஸல்) மிகவும் நிறுத்தி, நிதானமாக ஓதுவார்கள். இறைவனின் தூய்மையை எடுத்துரைக்கும் வசனங்கள் வரும்போது தூய்மையை எடுத்துரைப்பார்கள். இறைவனிடம் ஏதேனும் வேண்டுவது போன்ற வசனங்கள் வரும்போது இறைவனிடம் வேண்டுவார்கள். அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடும் வசனங்கள் வரும்போது பாதுகாப்புத் தேடுவார்கள்.

பிறகு அன்னார் (ஸல்) ருகூவிற்குச் சென்று سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ என்று கூறினார்கள். பொருள்: மகத்துவமிக்க என் இறைவன் தூய்மையானவன் என்று ஓதினார்கள். அன்னாரது ருகூவானது அன்னாரது நிற்கும் நிலை போலவே நீண்டதாக இருந்தது.

அதாவது, நீண்ட நேரம் ருகூ செய்தார்கள். பிறகு, அன்னார் (ஸல்) سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهٗ (புகழ்பவரின் புகழுரையை அல்லாஹ் செவியுறுகிறான்) என்று கூறிவிட்டு மிக நீண்ட நேரம் கியாமில் நின்றார்கள்; அது கிட்டத்தட்ட அன்னாரது ருகூவின் நேரத்திற்கு இணையாக இருந்தது. பிறகு அன்னார் (ஸல்) ஸஜ்தாவிற்குச் சென்று سُبْحَانَ رَبِّيَ الْاَعْلٰى என்று கூறினார்கள். பொருள்: மிக உயர்ந்தவனான என் இறைவன் தூய்மையானவன் அன்னாரது ஸஜ்தாவும் கியாமின் நேரத்திற்கு இணையாக இருந்தது.

இது அன்னார் (ஸல்) நஃபில் தொழுகையை நிறைவேற்றிய விதமாக இருந்தது. இதனை ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு ஸஹாபி நேரில் கண்டுள்ளார். (ஸஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண்: 1283)

இதேபோன்று, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'ஓர் இரவு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை மட்டுமே ஓதி கியாமில் நின்றார்கள். (ஸுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 448)

அதாவது சூரா ஃபாத்திஹாவிற்குப் பிறகு அந்த ஒரு வசனத்தையே மீண்டும், மீண்டும் ஓதிக்கொண்டிருந்தார்கள்.

அங்கோ, பல நீண்ட,நெடிய சூராக்களை ஓதியதாக ஒரு ஸஹாபி அறிவிக்கின்றார்; இங்கோ, ஒரு வசனத்தை மட்டுமே ஓதி நீண்ட நேரம் கியாமில் நின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

அன்னார் (ஸல்) தொழுகையில் நிற்கும் நேரம் எவ்வளவு நீண்டதாக இருந்தது? இது குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பு கடந்து விட்டது. அதாவது, அன்னார் (ஸல்) தொழுகையில் நிற்பது, ருகூ செய்வது மற்றும் ஸஜ்தா செய்வது எவ்வளவு நீண்டதாகவும், அழகாகவும் இருந்தது என்றால், அதன் அழகைப் பற்றி எதையும் கேட்காதீர் என்ற ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பை கடந்த குத்பாக்களில் நான் எடுத்துரைத்து விட்டேன்.

இதேபோன்று, ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவணக்கத்திற்காக நின்றார்கள்; மேலும், அதிகாலை வரை ஒரு வசனத்தையே மீண்டும் மீண்டும் ஓதிக் கொண்டிருந்தார்கள் அந்த வசனம் இதுவாக இருந்தது.

اِنْ تُعَذِّبْهُمْ فَاِنَّهُمْ عِبَادُكَ وَاِنْ تَغْفِرْ

பொருள்: நீ அவர்களைத் தண்டித்தால் நிச்சயமாக அவர்கள் உனது அடியார்களே; நீ அவர்களை மன்னித்தால் நிச்சயமாக நீயே மிகைத்தவனாகவும் ஞானமிக்கவனாகவும் இருக்கிறாய். (ஸுனன் இப்னு மாஜா, ஹதீஸ் எண்: 1350)

அல்லாஹ்வின் மீதான நேசத்தினால், அவனது படைப்புகள் மற்றும் அடியார்கள் மீது அன்னாரது உள்ளத்தில் இருந்த அந்த அனுதாப உணர்வின் காரணமாக, அவர்களது பாவமன்னிப்பிற்காக அன்னார் தொடர்ந்து துஆ செய்து வந்தார்கள்.

அதாவது, அல்லாஹ் அவர்களைத் தண்டிப்பதற்கு வல்லமையுள்ளவன் என்றாலும், அவர்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்பதே அன்னாரது துஆவாக இருந்தது. ஏனெனில் இந்த துஆவையும் அல்லாஹ்வே கற்றுக்கொடுத்திருந்தான்.

அடுத்து, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக நின்றார்கள். அன்னார் (ஸல்) மிக நீண்ட நேரம் நின்றார்கள். அதாவது, கிரகணத் தொழுகை தொழுதார்கள். பிறகு ருகூவிற்குச் சென்றார்கள்; அதுவும் மிக நீண்ட ருகூவாக இருந்தது. பின்னர் தமது தலையை உயர்த்தி மீண்டும் நீண்ட நேரம் கியாம் செய்தார்கள். ஆனால் அது முதல் கியாமை விடச் சற்று குறைவாக இருந்தது. பிறகு மீண்டும் ருகூவிற்குச் சென்றார்கள்; அதுவும் நீண்ட ருகூவாக இருந்தது. ஆனால் முதல் ருகூவை விடக் குறைவாக இருந்தது. பிறகு ஸஜ்தா செய்தார்கள்.

பிறகு மீண்டும் கியாமில் நின்றார்கள்; அதுவும் நீண்ட நேரம் நின்றார்கள். ஆனால் முதல் கியாமை விடக் குறைவானது. பிறகு நீண்ட ருகூ செய்தார்கள்; அதுவும் முதல் ருகூவை விடக் குறைவானது. பிறகு தனது தலையை உயர்த்தி நின்றார்கள். மீண்டும் நீண்ட கியாம் செய்தார்கள்; அதுவும் முதல் கியாமை விடக் குறைவானது. பிறகு மீண்டும் ருகூ செய்து அதை நீட்டினார்கள்; அதுவும் முதல் ருகூவை விடக் குறைவானது. பிறகு ஸஜ்தா செய்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்தபோது சூரியன் பிரகாசமாகிவிட்டது. பின்னர் அன்னார் (ஸல்) மக்களுக்குக் குத்பா கொடுத்தார்கள். அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் புகழை எடுத்துரைத்தார்கள். பிறகு கூறினார்கள்: 'சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அடையாளங்களுள் உள்ளவை. இவை இரண்டிற்கும் ஒருவருடைய இறப்பு அல்லது பிறப்பிற்காக கிரகணம் ஏற்படுவதில்லை. எனவே, நீங்கள் அவற்றைக் காணும்போது அல்லாஹ்வின் பெருமையை எடுத்துரையுங்கள்; அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள்; தொழுங்கள்; தான தர்மம் செய்யுங்கள்.

பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'முஹம்மதின் உம்மத்தே! அல்லாஹ்வின் அடியான் ஒருவனோ அல்லது அடியாள் ஒருத்தியோ விபச்சாரத்தில் ஈடுபடுவதைக் கண்டு அல்லாஹ்வை விட அதிக ரோஷம் கொள்பவர் எவருமில்லை.

பாவங்களில் மூழ்கி அல்லாஹ்வின் ரோஷத்தைத் தூண்டிவிட வேண்டாம் என்பதற்கான மிகவும் உள்ளத்தை உலுக்கும் இது ஓர் எச்சரிக்கையாகும். அல்லாஹ்விடம் கருணையைத் தேடுங்கள்; அவனது கோபத்தைத் தூண்டுவதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

பிறகு அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'முஹம்மதின் உம்மத்தே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அறிந்திருப்பவற்றை நீங்கள் அறிந்தால், நீங்கள் மிக அதிகமாக அழுவீர்கள்; மிகக் குறைவாகவே சிரிப்பீர்கள். பிறகு, கேளுங்கள்! நான் (செய்தியை) உங்களிடம் சேர்த்துவிட்டேனா?' என்று அன்னார் (ஸல்) வினவினார்கள். அதாவது, செய்தியை உங்களிடம் கொண்டு சேர்த்துவிட்டேன் என்றார்கள்.

இவ்வாறு அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் பக்கம் திரும்புவதற்கும், அவனை வணங்குவதற்கும், அவன் முன் குனிவதற்கும் கவனமூட்டினார்கள். மேலும், 'இதில்தான் உங்கள் பாதுகாப்பும், வாழ்வும் அடங்கியுள்ளது. எனக்குத் தெரிந்திருப்பது போல உங்களுக்கு இதன் ஆழம் தெரிந்திருந்தால், நீங்கள் சிரிப்பதைக் கைவிட்டு அதிகமாக அழுவீர்கள்; அல்லாஹ்விடம் துஆ செய்வீர்கள்' என்றும் அன்னார் (ஸல்) கூறினார்கள்.

எனவே, நாமும் துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், அல்லாஹ்வுடன் குறிப்பான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இங்குக் கவனமூட்டப்பட்டுள்ளது. போர்க்களத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த துஆக்கள் குறித்து ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் என்னிடம் இதை எடுத்துரைத்தார்கள். 'பத்ர்ப் போரின் நாளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இணை வைப்பவர்களைப் பார்த்தார்கள். அவர்கள் ஓராயிரம் பேராக இருந்தார்கள்; ஆனால் அன்னாரது ஸஹாபிகளோ 319 நபர்களே இருந்தார்கள். அல்லாஹ்வின் நபி (ஸல்) அவர்கள் கிப்லாவை நோக்கித் தமது முகத்தைத் திருப்பி, தமது இரு கரங்களையும் ஏந்தி, தமது இறைவனை உரத்த குரலில்,

اَللّٰهُمَّ اَنْجِزْ لِیْ مَا وَعَدْتَّنِیْ اَللّٰهُمَّ اٰتِ
مَا وَعَدْتَّنِیْ اَللّٰهُمَّ اِنَّكَ
اِنْ تُهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ مِنْ
اَهْلِ الْاِسْلَامِ لَا تُعْبَدْ فِی الْاَرْضِ

என்று அழைக்கத் தொடங்கினார்கள். பொருள்: அல்லாஹ்வே! நீ எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக! அல்லாஹ்வே! நீ எனக்கு வாக்களித்ததை எனக்கு வழங்குவாயாக! அல்லாஹ்வே! முஸ்லிம்களின் இந்தக் கூட்டத்தை இன்று நீ அழித்துவிட்டால், பூமியில் உன்னை வணங்குவதற்கு இனி யாரும் இருக்கமாட்டார்கள்.

கிப்லாவை நோக்கித் தமது இரு கரங்களையும் ஏந்தியவாறு அன்னார் (ஸல்) தொடர்ந்து தமது இறைவனை உரத்த குரலில் அழைத்துக் கொண்டே இருந்தார்கள்; எந்தளவு என்றால் அன்னாரது தோளிலிருந்த போர்வை கீழே விழுந்துவிட்டது.

அதாவது, அழுதழுது துஆ செய்த காரணத்தால் அன்னாரது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அதனால் போர்வை கீழே விழுந்தது. அந்தச் சமயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரின் அருகாமையில் சென்று, போர்வையை எடுத்து அன்னாரது தோள்களில் போர்த்தினார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் இருந்து அணைத்தவாறு, 'அல்லாஹ்வின் நபி (ஸல்) அவர்களே! இறைவன் முன்னிலையில் தாங்கள் புரியும் இந்த உருக்கமான வேண்டுதலே தங்களுக்குப் போதுமானதாகும். அவன் தங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவான்' என்று கூறினார்கள். அதன் பின்னர் அல்லாஹ், اِذْ تَسْتَغِیْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ

لَكُمْ اَنِّیْ مُمِدُّكُمْ بِاَلْفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُرْدِفِیْنَ

என்ற வசனத்தை இறக்கினான்.

இது சூரா அல் அன்ஃபாலின் வசனம் ஆகும்.

இதன் பொருள்: நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தபோது அவன் உங்கள் வேண்டுதலை ஏற்றுக்கொண்டதை நினைவு கூருங்கள்; நிச்சயமாக நான் உங்களுக்கு அணி அணியாக தொடர்ந்து வரக் கூடிய ஆயிரக்கணக்கான வானவர்கள் மூலம் உதவி செய்வேன் என்று வாக்களித்தான்.

இவ்வாறு அல்லாஹ் வானவர்களின் வாயிலாக அன்னாருக்கு உதவி செய்தான்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் காஃபிர்கள் மீது வெற்றி கிடைக்கும் என்று திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இஸ்லாத்தின் முதல் போரான பத்ர்ப் போர் தொடங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுது துஆ செய்யத் தொடங்கினார்கள். துஆ செய்தவாறு அன்னாரது நாவிலிருந்து,

اَللّٰهُمَّ اِنْ اَهْلَكْتَ هٰذِهِ الْعِصَابَةَ
فَلَنْ تُعْبَدَ فِی الْاَرْضِ اَبَدًا

என்ற சொற்கள் வெளிப்பட்டன. பொருள்: என் இறைவா! இன்று நீ! வெறும் 313 பேராக இருக்கும் இந்த ஜமாஅத்தை அழித்துவிட்டால் - அல்லது சில அறிவிப்புகளின் படி 319 பேராக இருக்கும் இவர்களை அழித்துவிட்டால் - மறுமை நாள் வரை உன்னை வணங்குவதற்கு எவருமே இருக்கமாட்டார்கள்.

இந்த சொற்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரின் நாவிலிருந்து கேட்டபோது, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த அளவு ஏன் கவலை கொள்கிறீர்கள்? அல்லாஹ்வோ தங்களுக்கு வெற்றி அளிப்பதாக உறுதியான வாக்குறுதி அளித்துள்ளானே!' என்று கூறினார்கள். அதற்கு, 'அது உண்மைதான்! ஆனால் எனது பார்வை அவனது தன்னிறைவு தன்மையின் மீது உள்ளது' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அதாவது, எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றுவது என்பது அல்லாஹ்வின் மீது கடமையல்ல (அவன் எதற்கும் கட்டுப்பட்டவன் அல்ல) என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைமாண்பின் கண்ணியத்தை எந்தளவு பேணினார்கள் என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ள வேண்டும். இறைவனுடைய முன்னறிவிப்புகள் சில சமயம் வெளிப்படையான வார்த்தைகளின் படியும், சில சமயம் உருவகமாகவும் நிறைவேறக் கூடும் என்ற அனைத்து நபிமார்களின் அந்த ஒருமித்த நம்பிக்கையை நாம் ஏன் புறக்கணிக்க வேண்டும்?'

இந்தச் சம்பவத்தை எடுத்துரைத்ததன் மூலம், முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை என்று ஆட்சேபனை செய்பவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பதிலளித்துள்ளார்கள்.

அதாவது, முன்னறிவிப்புகள்

நிறைவேறுவதற்குப் பல்வேறு வழிகள் உள்ளன; சில சமயம் அவை வெளிப்படையாக நிறைவேறுகின்றன. சில சமயம் வேறு விதமாக நிறைவேறுகின்றன. ஆனால், அல்லாஹ் தான் செய்த வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுகிறான். எவ்வாறாயினும், இறைவனின் தன்னிறைவு தன்மையின் காரணமாக அதில் எந்தத் தடையும் ஏற்பட்டுவிடக் கூடாது என்றும் அது முடிந்து விடக் கூடாது என்றும், அல்லாஹ்வின் உதவியும், ஒத்தாசையும் எப்போதும் நமக்குக் கிடைக்க வேண்டும் என்றும் நாம் எப்போதும் அல்லாஹ்வுக்கு முன் குனிந்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: 'உண்மையான ஏகத்துவவாதிகள் என்பவர்கள் கடுகளவும் நன்மையை வெளிக் காட்டாதவர்களும், உண்மையை ஏற்றுக்கொள்வதில் உலகிற்கு அஞ்சாதவர்களும் ஆவார்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ளுங்கள். உலகம் அவர்களது செயலினால் கோபப்பட்டாலும் அவர்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். 'ஸஹாபிகள் செய்த அளவிற்கு கடும் உழைப்போ அல்லது நோன்போ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து நிரூபிக்கப்படவில்லை. ஸஹாபிகளில் சிலர் துறவறத்திற்கு நெருக்கமான வாழ்க்கையை மேற்கொண்டார்கள்; அதாவது மார்க்கத்தின் மீது அவர்களுக்கு இருந்த அதீத ஈடுபாட்டினால் உலகை முற்றிலும் துறந்திருந்தார்கள் என்று சிலர் கூறுகின்றார்கள். நவூதுபில்லாஹ்! இதிலிருந்து அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற முடிவு வராது ; மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ்வே கட்டாயப்படுத்தி அத்தகைய நிலையிலிருந்து வெளிக்கொண்டு வந்தான் என்பதே உண்மையாகும்.

அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் வணக்கத்தில் மூழ்கியிருந்தார்கள்; அவன் மீதான நேசத்தில் திளைத்திருந்தார்கள். அன்னாரது வாழ்வின் ஆதாரமாக இறைவனே இருந்தான். ஆனால் அல்லாஹ்வே கட்டாயப்படுத்தி அந்த நிலையிலிருந்து அன்னாரை வெளியே கொண்டு வந்தான். இருப்பினும், எதையும் மறைவாகச் செய்யும் அன்னாரது வழக்கம் நீங்கவில்லை. அன்னார் (ஸல்) மறைவாக எந்தளவு முயற்சியிலும், இறை வணக்கத்திலும் ஈடுபட்டார்கள் என்பது யாருக்குத் தெரியும்?'

இவ்வாறே, கப்ருஸ்தானில் நடந்த சம்பவம் முன்னரும் கூறப்பட்டு விட்டது. அதை எடுத்துக் கூறி ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மறைமுகமான இறைவணக்கத்தை நிரூபித்தார்கள். ஒரு முறை, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் முறையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டில் இருந்தபோது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கண் விழித்துப் பார்த்தபோது, அன்னாரைக் காணவில்லை. மிகவும் ஆச்சரியமடைந்து தேடிப் பார்த்தபோது, அன்னார் (ஸல்) கப்ருஸ்தானில் மிகவும் உருக்கமாக துஆ செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

'என் இறைவா! எனது ஆன்மா, எனது உயிர், எனது எலும்புகள் மற்றும் எனது ரோமங்கள் அனைத்தும் உனக்கு ஸஜ்தா செய்கின்றன' என்று வேண்டிக் கொண்டிருந்தார்கள்.

இதை விவரித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இந்த விஷயம் தெரிந்திருக்கவில்லை என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது இறைவனுடன் எத்தகைய உறவைக் கொண்டிருந்தார்கள்! எவ்வளவு அதிகமாக இறைவழிபாடு செய்தார்கள்! எவ்வளவு இரகசியமாகவும், மறைமுகமாகவும் அன்னார் (ஸல்) இறைவனை வழிபட்டார்கள் என்பது வேறு யாருக்குத் தெரிந்திருக்கப் போகிறது?

அன்னாரின் ஆன்மிகப் போராட்டங்களும், இறை வணக்கங்களும் இவ்வாறே இருந்தன. ஏனெனில், அல்லாஹ் அத்தகையவர்களின் இயல்பிலேயே மறைத்துச் செய்யும் பழக்கத்தை வைத்திருந்தான். அவர்கள் எதையும் மறைவாகவே செய்வார்கள் என்பதால், அவர்களின் முழுமையான நிலைமைகளைப் பற்றி உலகிற்குத் தெரிவதில்லை. அவர்கள் உலகிற்காக எதையும் செய்வதில்லை; எந்த இறைவனுடன் அவர்களுக்கு விவகாரமும், தொடர்பும் இருக்கின்றதோ, அந்த இறைவன் அனைத்தையும் எல்லா இடங்களிலும் பார்த்துக் கொண்டும், அறிந்து கொண்டும் இருக்கிறான்.

அதாவது, அவர்கள் இறைவனை வணங்குகிறார்கள்; அவனிடம் அன்பு கொள்கிறார்கள் என்ற ஒவ்வொரு விஷயத்தையும் அந்த இறைவன் அறிவான். இத்தகைய மக்கள் உலகிற்குக் காட்டுவதற்காக எவ்விதச் செயலையும் செய்வதில்லை.

உலக ஆதாயங்கள் மற்றும் வசதிகள் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரைச் சந்திக்கச் சென்றார்கள். ஒரு சிறுவன் மூலமாக அனுமதி பெற்று உள்ளே சென்றபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பேரீச்ச ஓலைப்பாயில் படுத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உள்ளே வந்ததும், அன்னார் (ஸல்) எழுந்து அமர்ந்தார்கள். அந்த வீடு முற்றிலும் காலியாக இருப்பதையும், அங்கு அலங்காரப் பொருட்கள் எதுவுமே இல்லை என்பதையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கவனித்தார்கள். ஒருபுறம் ஆணி ஒன்றில் ஒரு வாள் தொங்கிக் கொண்டிருந்தது. இன்னொருபுறம் அன்னார் (ஸல்) படுத்திருந்த அந்த ஓலைப்பாய்; அதன் அடையாளங்கள் அன்னாரது அருளுக்குரிய முதுகில் பதிந்திருந்தன. அதைக் கண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'உமரே! உம்மை அழ வைத்தது எது?' என்று கேட்டார்கள். அதற்கு, 'கிஸ்ராவும் கைஸரும் வசதி வாய்ப்புகளை வைத்திருக்கிறார்கள்; அவர்களிடத்தில் சுகபோகங்களும் வசதிகளும், ஓய்வுக்கான ஏற்பாடுகளும் உள்ளன; ஆனால் இறைத் தூதராகவும், ஈருலகிற்கும் அரசராகவும் இருக்கும் தாங்கள் பாயில் படுத்து உடலில் தழும்புகள் ஏற்படும் நிலையில் இருக்கிறீர்களே!' என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, 'உமரே! எனக்கு இவ்வுலகோடு என்ன சம்பந்தம்?; நான் ஒரு வழிப்போக்கனைப் போன்றவன்; அவன் ஒட்டகத்தின் மீது ஏறித் தனது இலக்கை நோக்கிச் செல்கிறான்; பாலைவனப் பாதையில் கடும் வெயில் காரணமாக ஒரு மரத்தைக் கண்டு அதன் நிழலில் சிறிது நேரம் இளைப்பாறுகிறான்; வியர்வை காய்ந்ததும் அவன் மீண்டும் தனது பயணத்தைத் தொடர்கிறான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறே ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

وَأَنذِرْ عَشِيرَتَكَ الْأَقْرَبِينَ

பொருள்: முதலில், நீர் உமது நெருங்கிய உறவினர்களை எச்சரிப்பீராக! என்ற வசனம் இறங்கியபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, 'குறைஷிய மக்களே! உங்கள் உயிர்கள் தொடர்பாக வியாபாரம் செய்து கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் முன்னிலையில் நான் உங்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது என்று கூறினார்கள். அதாவது, நீங்கள் நற்செயல்கள் செய்தால், அல்லாஹ்வின் பக்கம் திரும்பினால், அவனது இறை வணக்கத்தில் ஈடுபட்டால், அவனது நேசத்தில் மூழ்கினால் மட்டுமே மன்னிக்கப்படுவீர்கள்; இல்லையெனில் நான் உங்களுக்குப் பயன்பட முடியாது என்று எச்சரித்தார்கள்.

பிறகு அன்னார் (ஸல்) தமது மற்ற உறவினர்களையும், கோத்திரத்தாரையும் விளித்து, 'அப்து மனாஃப் மக்களே! அல்லாஹ்வின் முன்னிலையில் நான் உங்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது. அப்துல் முத்தலிபின் மகன் அப்பாஸே! அல்லாஹ்வின் முன்னிலையில் நான் உமக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது. அல்லாஹ்வின் தூதருடைய அத்தை ஸஃபிய்யாவே! அல்லாஹ்வின் முன்னிலையில் நான் உமக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது. முஹம்மதின் மகள் ஃபாத்திமாவே! எனது செல்வத்திலிருந்து நீ எதை விரும்பினாலும் கேட்டுப் பெற்றுக் கொள்; ஆனால் அல்லாஹ்வின் முன்னிலையில் நான் உனக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது' என்று கூறினார்கள்.

அதாவது, உங்களது இறைவணக்கங்களும் அல்லாஹ்வுடன் நீங்கள் கொண்டுள்ள தொடர்பும் மட்டுமே உங்களைக் காப்பாற்றும் என்பதே இதன் பொருளாகும்.

அல்லாஹ்வின் மீதான நேசத்திற்கு முன்னால், அன்னார் (ஸல்) தமது உயிரைக் கூட ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தப்லீஃக் செய்யத் தொடங்கிய போது, குறைஷிகள் அபூதாலிபிடம் சென்று, 'உங்கள் சகோதரருடைய மகனை எங்கள் தெய்வங்களை குறை கூறுவதிலிருந்து தடுத்து நிறுத்துங்கள்; இல்லையெனில் நாங்களே அவரைத் தடுப்போம். அப்போது நீங்கள் இதில் தலையிடக் கூடாது' என்று கூறினார்கள்.

' நாங்கள் ஏற்கனவே உங்களிடம் உங்கள் சகோதரருடைய மகனை தடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தோம். ஆனால், நீங்கள் அவரைத் தடுக்கவில்லை; இப்போது மீண்டும் வந்துள்ளோம். ஒன்று, அவர் எங்களைப் பற்றி இவ்வாறு பேசுவதை நாங்கள் தடுத்து

நிறுத்துவோம் அல்லது அவரையும் உங்களையும் எதிர்ப்போம். எந்த அளவுக்கென்றால், இரு பிரிவினரில் ஒன்று அழிந்துவிடும் என்று கூறினர்.

குறைஷிகள் அபூதாலிபிடம் இவ்வாறு கூறியதும், அபூதாலிப் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அழைத்து, 'எனது சகோதரர் மகனே! என்னால் தாங்க முடியாத ஒரு சுமையை என் மீது ஏற்றிவிடாதே' என்று கூறினார். தமது பெரிய தந்தை தமக்கு அளித்து வந்த ஆதரவைக் கைவிட்டு விடுவார் என்றும், தன்னைக் குறைஷிகளிடம் ஒப்படைத்து விடுவார் என்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எண்ணினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அபூதாலிப் அவர்களிடம், 'பெரிய தந்தை அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த மக்கள் எனது வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்தாலும் எனது கடமையிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன். அல்லாஹ் இதனை நிறைவேற்றும் வரை அல்லது இந்த முயற்சியில் நான் மடியும் வரை நான் இப்பணியைத் தொடர்ந்து கொண்டே இருப்பேன்' என்றார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அங்கிருந்து புறப்பட்டபோது, அபூதாலிப் அன்னாரை அழைத்து, 'எனது சகோதரர் மகனே! நீ விரும்புவதைச் செய்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எதற்காகவும் நான் உம்மை அவர்களிடம் ஒப்படைக்க மாட்டேன்' என்று கூறினார்கள்.

இந்தச் சம்பவம் 'ஸீரத் இப்னு ஹிஷாம்' நூலில் இடம்பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் இச்சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

இணை வைப்பவர்கள் அசுத்தமானவர்கள், தூய்மையற்றவர்கள், படைப்புகளில் மிக மோசமானவர்கள், அறிவிலிகள், ஷைத்தானின் சந்ததிகள் என்றும், அவர்களது தெய்வங்கள் நரகத்தின் எரிபொருட்கள் என்றும் திருக்குர்ஆன் வசனங்கள் இறங்கியபோது, அபூதாலிப் அவர்கள் அன்னாரை அழைத்து, 'எனது சகோதரர் மகனே! உமது வசவுச்சொற்களால் சமுதாயம் கடுமையாகச் சீற்றமடைந்துள்ளது. அவர்கள் உம்மையும் உம்மோடு சேர்த்து என்னையும் அழித்துவிடுவார்கள் போலத் தெரிகிறது. நீர் அவர்களது அறிஞர்களை அறிவிலிகள் என்றும், அவர்களது பெரியோர்களை படைப்புகளுள் மிக மோசமானவர்கள் என்றும், அவர்கள் மதித்து வணங்கும் தெய்வங்களை நரகத்தின் எரிபொருள் என்றும் கூறிவிட்டீர். பொதுவாக அவர்கள் அனைவரையும் அசுத்தமானவர்கள் என்றும், ஷைத்தானின் வாரிசுகள் என்றும், தூய்மையற்றவர்கள் என்றே கூறிவிட்டீர்; உமது நன்மையை நாடியே நான் கூறுகிறேன்; உமது நாவைக் கட்டுப்படுத்திக் கொள்; அவர்களை வசை பாடுவதை விட்டு விலகி விடு! இல்லையெனில் சமுதாயத்தை எதிர்க்கும் ஆற்றல் எனக்கு இல்லை' என்றார்கள்.

அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதில் அளித்தவாறு கூறினார்கள்: 'பெரிய தந்தையே! இது வசவு சொற்கள் அல்ல; மாறாக உண்மையை வெளிப்படுத்துவதும், எதார்த்தமான நிலையை அதற்குரிய இடத்தில் வெளிப்படுத்துவதும் ஆகும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இதற்காக நான் மரணிக்க நேரிட்டாலும், அந்த மரணத்தை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன். எனது வாழ்வு இந்த வழிக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது; மரணத்திற்கு அஞ்சி உண்மையை உரைப்பதிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன். பெரிய தந்தையே! உங்களது பலவீனம் மற்றும் சிரமத்தைக் குறித்து நீங்கள் கவலைப்பட்டால், எனக்கு வழங்கி வரும் அடைக்கலத்தை விட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்கள் ஆதரவு எனக்குத் தேவையில்லை; இறைக்கட்டளைகளை எட்டவைப்பதிலிருந்து நான் ஒருபோதும் என்னை தடுத்துக் கொள்ள மாட்டேன். எனது எஜமானனின் கட்டளைகள் எனது உயிரை விட எனக்கு மேலானவை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த வழியில் நான் கொல்லப்பட்டால், மீண்டும் மீண்டும் உயிர் பெற்று இதே வழியில் மடியவே நான் விரும்புகிறேன். இது அச்சப்பட வேண்டிய இடமல்ல; மாறாக, அவனது வழியில் துன்பங்களை அனுபவிப்பதில் நான் எல்லையற்ற இன்பத்தைக் காண்கிறேன்' என்று கூறினார்கள்.'

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதன் விளக்கவுரையில் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் இறைவன் மீதான நேசத்தில் மூழ்கியிருப்பதை நாம் காண்கிறோம். மிகப் பெரிய அளவிலான (இஸ்லாமிய) சமுதாய பொறுப்புகள் இருந்தபோதிலும், இரவும், பகலும் அன்னார் (ஸல்) இறை வணக்கத்திலேயே மூழ்கியிருந்தார்கள். பாதி இரவு கடந்ததும் அன்னார் (ஸல்) அல்லாஹ்வை வணங்குவதற்காக எழுந்து நின்று விடுவார்கள். அதிகாலை வரை இறை வணக்கம் செய்து கொண்டிருப்பார்கள்.

எனவே, இதைக் குறித்து ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறும்போது, 'நான் இறைவனுக்கு மிக நெருக்கமானவன் என்பதும், அல்லாஹ் தனது அருளால் அந்த நெருக்கத்தை எனக்கு வழங்கியுள்ளான் என்பதும் உண்மையாக இருக்கும் போது, என்னால் இயன்றவரை அவனுக்கு நான் நன்றி செலுத்துவது எனது கடமையல்லவா? ஏனெனில், பேரருளுக்குப் பதிலாகவே நன்றிக் கடன் செலுத்தப்படுகின்றது என்றார்கள்.

அதாவது, அல்லாஹ் என் மீது பேரருள் செய்திருக்கும் போது நான் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

அவ்வாறே, அன்னார் (ஸல்) எந்தவொரு பெரிய காரியத்தையும் இறைவனது அனுமதியின்றி செய்வதில்லை. அல்லாஹ்வின் கட்டளை வந்தால்தான் அதைச் செய்வார்கள். மக்கா வாசிகளின் கடுமையான அநீதிகளுக்கு மத்தியிலும், அல்லாஹ்விடமிருந்து வஹீ மூலமாக மக்காவைத் துறந்து செல்லும்படி கட்டளை வரும் வரை அன்னார் (ஸல்) மக்காவை விட்டு வெளியேறவில்லை. மக்கா வாசிகளின் அநீதிகளின் கடுமையைக் கண்டபோது அன்னார் (ஸல்) ஸஹாபிகளை அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதித்தார்கள். அப்போது அவர்களுடன் அன்னாரும் வரவேண்டும் என்று ஸஹாபிகள் விருப்பம் தெரிவித்தபோது, 'எனக்கு அல்லாஹ்விடமிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை; அதற்கான அனுமதி கிடைக்கவில்லை' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். துன்பம் மற்றும் நெருக்கடியான காலங்களில் மக்கள் தங்களது நண்பர்களையும் உறவினர்களையும் தங்களைச் சுற்றிலும் சேர்த்துக்கொள்வார்கள்; ஆனால் அன்னாரோ தமது ஜமாஅத்தை அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்து செல்லுமாறு பணித்துவிட்டு, தாம் மட்டும் தனி ஆளாக மக்காவிலேயே தங்கிவிட்டார்கள். ஏனெனில், அன்னாரது இறைவன் அன்னாருக்கு ஹிஜ்ரத் செய்ய இன்னும் கட்டளை வழங்கியிருக்கவில்லை.

அல்லாஹ்வின் வசனங்களைக் கேட்கும்போது அன்னார் (ஸல்) தம்மையும் அறியாமலேயே கண் கலங்கி அழுவார்கள்; குறிப்பாக அன்னாரது பொறுப்புகள் குறித்து நினைவூட்டப்பட்டிருக்கும் வசனங்களைக் கேட்கும்போது இவ்வாறு நிகழும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கிறார்கள்: 'ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம், 'திருக்குர்ஆனின் சில வசனங்களை எனக்கு ஓதிக் காண்பிப்பீராக! என்று கூறினார்கள்.

அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! திருக்குர்ஆனோ தங்கள் மீது இறக்கப்பட்டது; நான் தங்களுக்கு என்ன ஓதிக் காட்டுவது?' என்று நான் கேட்டேன். அதற்கு , 'பிறர் ஓதக் கேட்பதை நான் விரும்புகிறேன்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதன் பின்னர் நான் சூரா அந்நிஸாவை ஓதத் தொடங்கினேன். நான் ஓதிக்கொண்டே வந்தபோது.

فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍۭ بِشَهِيْدٍ
وَّجِئْنَا بِكَ عَلٰى هٰٓؤُلَآءِ شَهِيْدًا

**என்ற வசனத்தை அடைந்தேன்.**

பொருள்: ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் அவர்களின் நபியை அந்த சமுதாயத்திற்கு முன்னால் நாம் நிற்க வைத்து அந்த சமுதாயத்தின் கணக்கு வழக்கை சரிபார்க்கும்போது உம்மையும், உமது சமுதாயத்திற்கு முன்னால் நிற்க வைத்து கணக்கு வழக்கு வாங்கும் போது உமது நிலை என்னவாகும்!

அப்போது, போதும்! போதும்! நிறுத்து' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் அன்னாரை ஏறிட்டுப் பார்த்தபோது, அன்னாரது இரு கண்களிலிருந்தும் **கண்ணீர் துளி துளியாக விழுந்து கொண்டிருந்தது.**

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 380 - 383)

இந்தச் சம்பவத்தை ஏற்கனவே நான் எடுத்துரைத்திருக்கிறேன்; ஆயினும் நாம் எத்தனை முறை இதைக் கேட்டாலும் அல்லாஹ்விடம் அன்னார் (ஸல்) கொண்டிருந்த அச்சமும், நேசமும் ஒரு புதிய பரிமாணத்தில் நமக்குத் தெரிகின்றது.

இறைவன் மீதான நேசம் குறித்து விவரிக்கும் போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாயிஃப் பயணத்தின் போது காயமடைந்த சம்பவம் வரலாற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நபித்துவம் கிடைத்த பத்தாம் ஆண்டில், அபூதாலிப் அவர்களின் மறைவிற்குப் பிறகு குறைஷிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அநீதி இழைக்க ஆரம்பித்த போது, அன்னார் (ஸல்) தாயிஃப் சென்றார்கள். அங்கு பத்து நாட்கள் தங்கி இஸ்லாமியப் பிரசாரம்

செய்தார்கள். ஆனால் எவரும் அன்னாரது அழைப்பை ஏற்கவில்லை. இளைஞர்கள் அன்னாரது போதனையை ஏற்றுவிடுவார்களோ என்று அங்கிருந்த தலைவர்கள் அஞ்சியதால், அதாவது மீண்டும் மீண்டும் கூறுவதால் ஏற்றுக் கொண்டு விடுவார்களோ என அஞ்சியதால் ஒழுக்கமற்ற நபர்களை அன்னாருக்கு எதிராகத் தூண்டிவிட்டார்கள். அவர்கள் அன்னார் (ஸல்) மீது கற்களை எறியத் தொடங்கினர்; எந்தளவு என்றால் அன்னாரது இரு பாதங்களிலும் இரத்தம் வழிந்தோடியது. ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். கற்கள் வரும்போது ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் அவற்றைத் தமது உடல் மீது வாங்கிக் கொள்ள முயற்சிப்பார்கள்; இதில் அவர்களது தலையிலும் பல காயங்கள் ஏற்பட்டன.

ஸஹீஹ் புஹாரியில் இச்சம்பவம் குறித்து ஓர் அறிவிப்பு வருகிறது; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது தூய மனைவி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்: அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், 'உஹதுப் போரின் காயமடைந்த நாளை விடக் கடினமான ஒரு நாள் தங்கள் வாழ்வில் வந்ததுண்டா?' என்று வினவினார்கள். அதற்கு, 'உம் உம்மத்தினர் எனக்கு இழைத்த துன்பங்களில் எல்லாவற்றையும் விடக் கடினமானது அகாபாவின் தினத்தில் நேரிட்டதுதான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அதாவது, தாயிஃபில் நான் இப்னு அபீ அப்தே யஃலீல் பின் அப்தே குலால் என்பவனிடம் சென்று எனது தூதுச் செய்தியை முன்வைத்தபோது, அவன் நான் விரும்பிய பதிலை அளிக்கவில்லை. அங்கிருந்து நான் மிகுந்த கவலையுடன் புறப்பட்டேன். நான் 'கர்னுஸ் ஸஆலிப்' எனும் இடத்தை அடைந்தபோதுதான் எனது கவலை சற்று நீங்கியது. அது மினாவிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய மலை ஆகும். நான் வானத்தை ஏறிட்டுப் பார்த்தபோது, ஒரு மேகம் எனக்கு நிழல் தந்துகொண்டிருப்பதைக் கண்டேன். அதில் ஹஸ்ரத் ஜிப்ரீல் அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் என்னை விளித்து, 'உங்கள் உம்மத்தினர் உங்களிடம் கூறியவற்றையும் அதாவது, அவர்கள் உங்களுடன் நடந்து கொண்டதையும், அவர்கள் உங்களுக்கு கூறிய பதிலையும் அல்லாஹ் செவியுற்றுவிட்டான். எனவே, உங்கள் விருப்பப்படி கட்டளையிடுவதற்காக மலைகளுக்கான வானவரை உங்களிடம் அல்லாஹ் அனுப்பியுள்ளான்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: பின்னர் அந்த மலைகளின் வானவர் என்னை அழைத்து ஸலாம் கூறினார். 'முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் விரும்பியதைக் கட்டளையிடுங்கள். நீங்கள் விரும்பினால் இந்த இரண்டு மலைகளையும் அம்மக்கள் மீது மோதச் செய்து விடுகிறேன்'

அதாவது, அவர்கள் மீது விழச் செய்கிறேன். அவர்கள் உள்ளே அமுங்கி விடுவார்கள் என்று கூறினார். அதற்கு, 'வேண்டாம்! இவர்களது சந்ததியிலிருந்து அல்லாஹ்வை ஒருவன் என்று ஏற்றுக்கொண்டு அவனுக்கு இணை வைக்காத ஒரு கூட்டத்தை அல்லாஹ் உருவாக்குவான் என்று நான் நம்புகிறேன்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.'

இங்கும் அன்னாரது இரக்க குணமே மேலோங்கி நின்றது; அந்த சமுதாயத்தை அன்னார் (ஸல்) காப்பாற்றினார்கள். பின்னர் மக்கா வெற்றிக்குப் பிறகு கொஞ்சம் காலம் கடந்த பிறகு அம்மக்களது சந்ததியினர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் தகுதியைக் குறித்து எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

மனிதனுக்கு அருளப்பெற்ற - அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பெற்ற உயர்தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியிலுள்ள கடல்களிலோ அல்லது ஆறுகளிலோ இருக்கவில்லை. அது மாணிக்கம், வைடூரியம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றிலும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம். அதன் முழுமை, நிறைவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும் எஜமானரும், நபிமார்களின் தலைவரும், உயிருள்ளவர்களின் தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். எனவே அந்த ஒளி அவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் பண்புகளை சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது.

அதாவது அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுள் அன்னாரின் நடைமுறைப்படி செயல்படக்கூடியவர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

மனிதனுக்கு வழங்கப்பட்ட அந்த 'அமானிதம் என்பது என்ன? என்பதை விளக்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அமானிதம் என்பது அல்லாஹ் முழுமையான மனிதனுக்கு வழங்கும் அனைத்து ஆற்றல்களும், அறிவும், ஞானமும், இதயமும், உயிரும், உணர்வுகளும், அச்சமும், நேசமும், கண்ணியமும், அந்தஸ்தும், அனைத்து ஆன்மிக மற்றும் பௌதிக அருட்கொடைகளையும் குறிக்கும்.

اِنَّ اللّٰهَ یَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰۤى اَهْلِهَا

என்ற வசனத்திற்கு ஏற்ப, ஒரு முழுமையான மனிதர் அந்த அமானிதங்கள் அனைத்தையும் இறைவனிடமே திருப்பி ஒப்படைத்து விடுகிறார். அதாவது, இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொண்டு, அவனது வழியில் அர்ப்பணித்து விடுகிறார். அதாவது, அல்லாஹ் வழங்கிய அந்த அமானிதங்களை அவனது கட்டளைப்படி அவனது விருப்பத்தைப் பெறுவதற்காகச் செலவிடுகிறார்; இதன் மூலம் அந்த அமானிதங்கள் செலுத்தப்பட வேண்டும் எனவும் அல்லாஹ்வின் அன்பும், நேசமும் அதிகமான அளவில் கிடைக்க வேண்டும் எனவும் விரும்புகிறார்.'

ஆகவே, இதுவே அந்த அமானிதத்தின் மிக உயர்ந்த நிலையாகும்; அல்லாஹ்வுடனான நேசத்தில் தம்மை அர்ப்பணித்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனை நிறைவேற்றினார்கள்.

இதனை விளக்கும் விதமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

இந்தச் சிறப்பு உயர்வாகவும், முழுமையாகவும், நிறைவாகவும், நம் தலைவரும் எஜமானரும் நம் வழிகாட்டியும், கல்வி கற்காத நபியும், உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே காணப்பட்டது. இதைக் குறித்து அல்லாஹ்வே திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

قُلْ اِنَّ صَلَاتِیْ وَنُسُكِیْ وَمَحْیَایَ
وَمَمَاتِیْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ
لَا شَرِیْكَ لَهٗ وَبِذٰلِكَ اُمِرْتُ
وَاَنَا اَوَّلُ الْمُسْلِمِیْنَ

அடுத்து, அல்லாஹ் கூறினான்:

وَاَنَّ هٰذَا صِرَاطِیْ مُسْتَقِیْمًا
فَاتَّبِعُوْهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ
فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِیْلِهٖ ذٰلِكُمْ
وَصّٰىكُمْ بِهٖ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِیْ
یُحْبِبْكُمُ اللّٰهُ وَیَغْفِرْ لَكُمْ
ذُنُوْبَكُمْ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِیْمٌ

பிறகு, அல்லாஹ் கூறினான்:

فَقُلْ اَسْلَمْتُ وَجْهِیَ لِلّٰهِ

அடுத்து, அல்லாஹ் கூறினான்:

وَاُمِرْتُ اَنْ اُسْلِمَ لِرَبِّ الْعٰلَمِیْنَ

பொருள்: நீர் கூறுவீராக! எனது தொழுகையும், எனது வணக்க வழிபாடுகளுக்கான முயற்சியும், எனது தியாகங்களும், எனது வாழ்வும் எனது மரணமும் அனைத்தும் இறைவனுக்கே உரியன. அவனது வழியில் அர்ப்பணம். அந்த இறைவன் அகிலங்கள் அனைத்தையும் படைத்து பரிபாலிப்பவன் ஆவான். அவனுக்கு இணையானவர் எவருமில்லை. இவ்வாறே நான் 'அவ்வலுல் முஸ்லிமீன்' (முஸ்லிம்களில் முதன்மையானவன்) ஆவேன் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளேன். அதாவது, உலகின் ஆரம்பம் முதல் இறுதி வரை என்னைப் போன்ற ஒரு முழுமையான மனிதர் எவரும் கிடையாது. இறைவனின் அனைத்து அமானிதங்களையும் அவனிடமே ஒப்படைக்கும் அளவிற்கு மிக உயர்ந்த தரத்திலான இறை நேசத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நிலையை கொண்டவர் யாருமில்லை.

இந்த வசனத்தில், நமது நபி (ஸல்) அவர்களுக்கு மற்ற நபிமார்களை விட முழுமையான சிறப்பு கிடையாது என்று கருதும் அந்த அறிவற்ற ஏகத்துவவாதிகளுக்கு மறுப்பு உள்ளது. பலவீனமான ஹதீஸ்களை ஆதாரமாகக் காட்டி, 'என்னை யூனுஸ் பின் மத்தி (அலை) அவர்களை விட மேலானவராகக் கருத வேண்டாம்' என்று நபி (ஸல்) அவர்கள் தடுத்திருப்பதாகக் கூறுகின்றனர். அந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் கூட, அது நமது

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

தலைவர் நபி (ஸல்) அவர்களின் வழக்கமான பணிவு மற்றும் தன்னடக்கத்தின் காரணமாகக் கூறப்பட்டதாகும் என்று இந்த அறிவிலிகள் புரிந்துகொள்வதில்லை. ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு சந்தர்ப்பமும், சூழலும் உண்டு.

உதாரணமாக, ஒரு நல்ல மனிதர் தனது கடிதத்தில் தன்னை அல்லாஹ்வின் அடியார்களில் மிகத் தாழ்ந்தவன் என்று எழுதினால், அதிலிருந்து அவர் உண்மையில் உலகிலுள்ள அனைவரையும் விட, இன்னும் கூறுவதென்றால், சிலைகளை வணங்குபவர்கள் மற்றும் தீயவர்கள் அனைவரையும் விட மோசமானவர் என்றும் அவரே அதை ஒப்புக் கொள்கிறார் என்றும் முடிவு எடுப்பது எவ்வளவு பெரிய அறிவீனம் மற்றும் உள்ளத்தின் தீய எண்ணமாகும்!

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரை 'அவ்வலுல் முஸ்லிமீன்' (முஸ்லிம்களில் முதன்மையானவர்) என்று சூட்டி, கீழ்ப்படிபவர்கள் மற்றும் கட்டளைக்கு அடிபணிபவர்கள் அனைவருக்கும் தலைவராக்கியுள்ளான். மேலும், அமானிதத்தை இறைவனிடம் முதலில் ஒப்படைப்பவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே ஆவார்கள் என்று தீர்மானித்துள்ளான். இவ்வாறிருக்க, திருக்குர்ஆனை நம்பும் எவருக்காவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்து குறித்து ஏதேனும் ஒரு வகையில் குறை கூறவோ அல்லது விமர்சனம் செய்யவோ இடமுண்டோ?

அல்லாஹ் மேற்கூறிய வசனத்தில் இஸ்லாமிய நிலைகளுக்குப் பல படிநிலைகளை வைத்த போதிலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்பிற்கு வழங்கப்பட்ட அந்த நிலையையே அனைத்துப் படிநிலைகளிலும் மிக உயர்ந்த ஒன்றாகத் தீர்மானித்துள்ளான்.

ஓதப்பட்ட மற்ற வசனங்களின் பொருள் என்னவென்றால்; அல்லாஹ் தன் நபியிடம் கூறுகிறான்; நீர் அவர்களிடம் கூறுவீராக! எனது இந்த வழிதான் நேர்வழியாகும். எனவே இதையே பின்பற்றுங்கள். மற்ற வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை உங்களை இறைவனை விட்டும் தூரமாக்கிவிடும்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: (நபியே!) நீர் அவர்களுக்குக் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்; அதாவது இஸ்லாத்தின் மிக உயர்ந்த உண்மையான எனது வழியில் நடை போடுங்கள்; அப்போது அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களை மன்னிப்பான்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET, ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

நீர் அவர்களுக்குக் கூறுவீராக! 'எனது வழி இதுவே; எனது முழு இருப்பையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிடவும், அகிலங்களைப் படைத்து பரிபாலிப்பவனுக்காக என்னை அர்ப்பணித்துக் கொள்ளவும் நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். அதாவது, அவனில் என்னை மாய்த்துக் கொண்டு, அவன் எவ்வாறு அகிலங்களைப் படைத்து பரிபாலிக்கிறானோ அவ்வாறே நான் அகிலங்களுக்குச் சேவை செய்பவனாக மாறி, முழுமையாக அவனுக்கும், அவனது பாதைக்கும் உரியவனாக ஆகிவிட வேண்டும். எனவே, எனது முழு இருப்பையும் என்னிடம் இருந்த அனைத்தையும் நான் அல்லாஹ்வுக்கே அர்ப்பணித்து விட்டேன். இப்பொழுது என்னிடம் எனக்கென்று எதுவுமில்லை; என்னிடம் எவை உள்ளனவோ அவை அனைத்தும் அவனுக்கே உரியவை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தகுதி மற்றும் அந்தஸ்து குறித்த இத்தகைய உயரிய ஞானத்தை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு வழங்கியிருந்தான்; அவர்களும் அதனை நமக்காக எடுத்துரைத்துள்ளார்கள். இவ்வளவு இருந்தும், நமது எதிரிகள் நவூதுபில்லாஹ்! நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அவமதிப்பதாகவும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அதிக அந்தஸ்து அளிப்பதாகவும் கூறுகிறார்கள். இவர்களது தீய எண்ணங்களிலிருந்து அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாப்பானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: 'அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருள்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) இந்த இறைத்தூதர் எவ்வளவு உயர்வான தகுதியைக் கொண்ட இறைத்தூதர் ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கின்றேன். அவருடைய உயரிய அந்தஸ்தின் எல்லையை கண்டறிய முடியாது. அவருடைய பரிசுத்தமாக்கும் தாக்கத்தைப் பற்றி அனுமானிப்பது மனிதனின் வேலையன்று. பிரித்தறியப்பட வேண்டிய முறையில் அவருடைய உயர் அந்தஸ்து பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். உலகிலிருந்து மறைந்த அந்த ஏகத்துவத்தை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அந்த வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவர் உயிரே உருகி விட்டது. எனவே அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை அறிந்திருந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவருடைய குறிக்கோள்களை அவர் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அன்னாரே ஒவ்வொரு அருளுக்கும் ஊற்றாக விளங்குகிறார். அன்னாரது அருளைப் பெற்றுக்கொண்டதாக ஒப்புக் கொள்ளாமல் எவராவது ஒரு சிறப்பிற்கு உரிமை கொண்டாடினால், அவர் மனிதர் அல்ல; மாறாக ஷைத்தானின் சந்ததி ஆவார். ஏனெனில், ஒவ்வொரு சிறப்பிற்கும் உரிய திறவுகோல் அன்னாருக்கே வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஞானத்தின் பொக்கிஷமும் அன்னாருக்கே அருளப்பட்டுள்ளது. அன்னார் (ஸல்) மூலமாகப் பெறாதவன் நித்திய இழப்பிற்குள்ளானவன். நாம் யார்? நமது உண்மை நிலை என்ன? இந்த நபியின் மூலமாகவே நாம் உண்மையான ஏகத்துவத்தைப் பெற்றோம்; உயிருள்ள இறைவனைப் பற்றிய ஞானம் இந்த முழுமையான நபியின் மூலமாகவும், அவரது ஒளியின் மூலமாகவுமே நமக்குக் கிடைத்தது என்று நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம் நன்றி மறந்தவர்களாகிவிடுவோம்.

அல்லாஹ்வின் முகத்தைக் காண்பதற்கும், அவனது உரையாடல்களைப் பெறும் பாக்கியத்தைப் பெறுவதற்கும் இந்த மாபெரும் நபியே காரணமாக இருந்தார். நேர்வழி எனும் இந்தச் சூரியனின் கதிர்கள் நம் மீது விழுகின்றன; நாம் அவருக்கு முன்னால் நிற்கும் வரை மட்டுமே ஒளியுடன் இருக்க முடியும். எந்த நபர்கள் இந்தத் தவறான எண்ணத்தில் பிடிவாதமாக இருக்கிறார்களோ, அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளாதவர் அல்லது மார்க்கத்தை விட்டு விலகிய ஒருவர், ஏகத்துவத்தில் நிலைத்திருந்து அல்லாஹ்வை இணையற்ற ஏகன் என்று அறிந்து கொண்டால் அவரும் இரட்சிப்பு பெற்றுவிடுவார் என்றும், ஈமான் கொள்ளாததாலோ அல்லது முர்தத் ஆனதாலோ அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் கருதுகிறார்களோ, அத்தகையவர்கள் உண்மையில் ஏகத்துவத்தின் உண்மையை பற்றியே அறியாதவர்கள் ஆவர். வெறுமனே இறைவனை ஏகன் என்று மட்டும் கருதுவதால் இரட்சிப்பு கிடைத்துவிடாது; மாறாக, இரட்சிப்பு என்பது இரண்டு விஷயங்களைப் பொறுத்தே அமைகின்றது.

1. முழுமையான உறுதியுடன் அல்லாஹ்வின் இருப்பு மற்றும் அவனது ஏகத்துவத்தின் மீது ஈமான் கொள்ள வேண்டும்.

2. அந்த ஏக இறைவனின் மீதான முழுமையான நேசம் ஒருவரது உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிய வேண்டும் என்றால், அதன் ஆதிக்கத்தினால் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிதலே அவரது உயிருக்கு நிம்மதியாக மாற வேண்டும்; அவனின்றி அவரால் வாழவே முடியாது என்ற நிலை ஏற்பட வேண்டும். அவனது நேசம் மற்ற அனைத்து நேசங்களையும் அழித்துவிட வேண்டும்.

இத்தகைய உண்மையான ஏகத்துவம், நமது தலைவரும் எஜமானருமான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதைத் தவிர வேறு எதன் மூலமும் கிடைக்காது. ஏன் கிடைக்காது? இதற்கான பதில் என்னவென்றால், இறைவனது இருப்பு என்பது மறைவிலும் மறைவானதும், எட்ட முடியாததற்கும் அப்பாற்பட்டதும், மிகவும் நுட்பமானதும் ஆகும்; அதனை மனித அறிவு தனது சுய சக்தியால் மட்டும் கண்டறிய முடியாது. எந்தவொரு தர்க்க ரீதியான ஆதாரமும் இறைவனது இருப்பிற்கு அறுதியான சான்றாக முடியாது. ஏனெனில், அறிவின் ஓட்டமும், முயற்சியும் இவ்வுலகின் படைப்புகளைக் கண்டு ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்ற தேவையை உணர்வதுடன் நின்றுவிடும். ஆனால் ஒரு தேவையை உணர்வது என்பது வேறு; அந்தப் படைப்பாளன் உண்மையில் இருக்கிறான் என்ற நிச்சய உறுதி நிலையை அடைவது என்பது வேறு விஷயமாகும்.

அறிவின் மூலம் 'இறைவன் ஒருவன் இருக்கிறான்' என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; ஆனால் அவன் 'யார்? என்பது தெரியாது. அறிவின் வழிமுறை குறைபாடுள்ளதாகவும், முழுமையற்றதாகவும், சந்தேகத்திற்குரியதாகவும் இருப்பதால், ஒரு தத்துவஞானியால் வெறும் அறிவைக் கொண்டு

இறைவனை அடையாளம் காண முடியாது. மாறாக, அறிவின் மூலம் மட்டும் இறைவனைத் தேடுபவர்கள் இறுதியில் இறை மறுப்பாளர்களாக மாறிவிடுகிறார்கள். பூமி மற்றும் வானத்தின் படைப்புகள் குறித்துச் சிந்திப்பது அவர்களுக்கு எவ்விதத்திலும் பயன் தருவதில்லை; மாறாக, அவர்கள் அல்லாஹ்வின் முழுமையான மனிதர்களைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார்கள். இவ்வுலகில் ஆயிரக்கணக்கான பொருள்கள் காணப்படுகின்றன; அவற்றில் நமக்கு எந்தப் பலனும் இருப்பதாகத் தெரிவதில்லை. நமது அறிவுப்பூர்வமான ஆய்வின் மூலம் அவற்றில் படைப்பாளனை அடையாளப்படுத்தும் எவ்வித கைத்திறனும் நிரூபிக்கப்படுவதில்லை என்று அவர்கள் வாதிக்கிறார்கள். அவர்கள் தங்களது அறிவைக் கொண்டு சிந்திக்கும்போது, சில பொருள்கள் ஏன் இருக்கின்றன என்பதற்கான அறிவுப்பூர்வமான காரணம் எதுவும் அவர்களுக்குத் தெரிவதில்லை; மாறாக, அத்தகைய பொருள்களின் இருப்பு வீணானது, தேவையற்றது என்று அவர்கள் கருதுகின்றனர். ஒரு பொருளைப் பற்றிய அறிவு நமக்கு இல்லை என்பதற்காக அந்தப் பொருளே இல்லை என்பது அர்த்தமல்ல என்பதை அந்தோ பரிதாபம், அந்த அறிவிலிகள் அறிவதில்லை. தங்களை முதல் தரமான அறிவாளிகள் என்றும், தத்துவவாதிகள் என்றும் கருதிக்கொண்டு, இறைவனின் இருப்பையே கடுமையாக மறுக்கும் இத்தகைய மக்கள் இன்றைய காலத்தில் இலட்சக்கணக்கில் காணப்படுகின்றனர். இப்போதோ கோடிக்கணக்கில் உள்ளனர்.

அவர்களுக்கு ஏதேனும் ஒரு வலுவான அறிவுப்பூர்வமான ஆதாரம் கிடைத்திருந்தால், அவர்கள் இறைவனின் இருப்பை மறுத்திருக்க மாட்டார்கள் என்பது வெளிப்படை. மேலும், இறைவனின் இருப்பு குறித்து ஏதேனும் உறுதி மிக்க அறிவுப்பூர்வமான சான்று அவர்களைக் கட்டுப்படுத்தியிருந்தால், அவர்கள் இவ்வளவு வெட்கக்கேடாகவும், கேலியும் கிண்டலும் செய்துகொண்டு இறைவனை மறுக்க மாட்டார்கள். எனவே, எந்தவொரு நபரும் தத்துவவாதிகளின் படகில் ஏறிக் கொண்டு சந்தேகங்கள் எனும் புயலிலிருந்து தப்பித்துவிட முடியாது. நீங்கள் தத்துவவாதிகளுடன் அமர்ந்தாலோ அல்லது அவர்களின் சிந்தனைப் போக்கில் சென்றாலோ சந்தேகங்களிலிருந்து விடுதலை பெறுவது சாத்தியமற்றது.

இறைவனை மறுக்கும் அந்தத் தத்துவவாதிகளின் உள்ளங்களில் சந்தேகங்களின் பெரும் புயலே வீசுகிறது; அதில் அவர்கள் நிச்சயம் மூழ்கிப் போவார்கள். அவர்களுக்கு ஒருபோதும் தூய ஏகத்துவம் எனும் பானம் கிடைக்கப் போவதுமில்லை. இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மத்தியஸ்தம் இன்றி ஏகத்துவம் கிடைத்துவிடும் என்றும், அதன் மூலம் மனிதன் இரட்சிப்பு பெற்றுவிடலாம் என்றும் கருதுவது எவ்வளவு தவறான, துர்நாற்றம் வீசக்கூடிய சிந்தனையாகும்!

எனவே, தவ்ஹீதைப் பற்றியும் இறைவனின் இருப்புப் பற்றியும் நாம் அறிய வேண்டுமானால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை ஆழமாகப் பார்க்க வேண்டும்; திருக்குர்ஆனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அறிவிலிகளே! இறைவனது இருப்பு குறித்து முழுமையான உறுதி ஏற்படாத வரை, அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி பிறக்க முடியும்? எனவே, உண்மையான ஏகத்துவம் நபியின் வாயிலாக மட்டுமே கிடைக்கும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நமது நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டின் இறைமறுப்பாளர்களுக்கும், மார்க்கமற்றவர்களுக்கும் ஆயிரக்கணக்கான விண்ணின் அடையாளங்களைக் காட்டி அவர்களை இறைவனின் இருப்பை ஏற்கச் செய்தார்கள்.

இன்றும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் அத்தகைய அடையாளங்களை இறை மறுப்பாளர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறார்கள். உண்மையான விஷயம் என்னவென்றால், உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் நேரில் காணாத வரை, ஷைத்தான் அவனது உள்ளத்தை விட்டு வெளியேற மாட்டான்; உண்மையான ஏகத்துவம் அவனது உள்ளத்தில் நுழையாது. மேலும், இறைவனது இருப்பை ஒருவனால் உறுதியாக ஏற்கவும் முடியாது. இத்தகைய தூய, முழுமையான ஏகத்துவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.

இக்காலத்தில் இந்தப் போதனைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அரபு நாட்டின் அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்ததே! அதாவது இலட்சக்கணக்கான இறந்தவர்கள் சில நாட்களில் உயிர் பெற்றனர். பல தலைமுறைகளாக சீர்கெட்டுப் போயிருந்தவர்கள் இறைப் பண்புகளைப் பெற்றனர். குருடர்கள் கண்ணொளி பெற்றனர். ஊமைகளின் நாவில் இறைஞானம் பெருக்கெடுத்தது. எக்கண்ணும் கண்டிராத, எக்காதும் கேட்டிராத அத்தகு புரட்சி உலகில் மலர்ந்தது. அது என்னவென்று தெரியுமா? அது இறைவனில் தன்னை மாய்த்துக் கொண்ட ஒருவர் இருள் நிறைந்த இரவுகளில் செய்திட்ட துஆக்க(ளின் பயன்க)ளே! (துஆக்களாகிய) அவை உலகில் ஒரு பேரொலியை எழுப்பின. மேலும் அந்தக் கல்லாத, இயலாத, அம்மாமனிதரால் செய்ய முடியாதது என்று காணப்பட்ட அற்புதங்களை செய்து காட்டின.

அல்லாஹ்வே! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரது குடும்பத்தினர் மீதும் உனது அருளையும் சாந்தியையும் அபிவிருத்திகளையும் பொழிவாயாக! இந்த உம்மத்திற்காக அன்னார் சுமந்த கவலைகள், துக்கங்கள் மற்றும் வேதனைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், உனது அருளின் ஒளியை அன்னார் மீது என்றென்றும் இறக்குவாயாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

எனது சொந்த அனுபவத்தின் மூலம் நான் காண்பது என்னவென்றால், துஆக்களின் தாக்கம் என்பது நீர் மற்றும் நெருப்பின் தாக்கத்தை விட மேலானதாகும்; சொல்லப்போனால் இயற்கை காரணிகளின் வரிசையில் துஆவைப் போல மாபெரும் தாக்கம் கொண்ட பொருள் வேறொன்றுமில்லை.'

அல்லாஹ் நமக்கு இந்த வழியில் சென்றவாறு துஆக்கள் செய்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய துஆக்களைச் செய்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! மேலும், உண்மையான முறையில் துஆக்களைச் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! துஆக்களின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க முயற்சிப்பவர்களாகவும் இருக்கும் வகையில் உண்மையான முஃமின்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

தமிழாக்கம்
முபல்லிஃக்
A.P.A தாரிக் அஹ்மது

** * * * * * * * *

24- மம் பக்கத் தொடர்ச்சி...
**(மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அந்தஸ்து)**

அவசியமாகும். அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸலாத்தை எட்ட வைப்பது அவசியமாகும். மேலும், அவருக்கும் எனக்குமிடையில் எந்த நபியும் இல்லை ; தூதரும் இல்லை. ஏனெனில் அவர் அல்லாஹ்வின் கலீஃபா ஆவார் என்றும் அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள்.

கண்ணியத்திற்குரிய அவையோரே! வாக்களிக்கப்பட்ட மஸீஹும், மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் 1889-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதி முதல் பைஅத் வாங்கினார்கள். இந்த பைஅத் அதிகரித்து, அதிகரித்து, மலர்ந்து செழித்து 125 ஆண்டுகளில் உலகின் 200-க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி விட்டது. முதலில், அஹ்மதிய்யா கலீஃபாக்கள் மற்றும் முபல்லிஃக்மார்கள் மூலமாக உலக நாடுகளிலும், துணைக் கண்டங்களிலும், நகரங்களிலும், ஊர்களிலும் இந்த பைஅத் நிகழ்ந்து வந்தது. தற்போது இந்த பைஅத் ஒரே நேரத்தில் சேட்டிலைட் மூலமாக காலத்தின் கலீஃபாவின் கரங்களில் செய்யப்படுகின்றது.

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்:

' நீங்கள் முன்னேற வேண்டும் என்றும், உலகம் முழுவதும் இஸ்லாம் வெற்றி பெற வேண்டும் என்றும் விரும்பினால், எனது அறிவுரை இதுதான்: கிலாஃபத்துடன் இணைந்து இருங்கள். கிலாஃபத்தின் கயிற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். நமது அனைத்து முன்னேற்றங்களும் கிலாஃபத்துடன் இணைந்திருப்பதில்தான் அடங்கியுள்ளது.

எனவே, இந்தப் பாதுகாப்பான அரணிலிருந்து பலன் பெற, நாம் அனைவரும் கிலாஃபத்துடனான நமது தொடர்பை மென்மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் வெற்றிக்கும், உலக அமைதிக்கும் துஆ செய்ய வேண்டும்.

தமிழாக்கம்
முபல்லிஃக்
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * * * * *



# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீத் திட்டத்தின் 68 -ம் ஆண்டில் ஜமாஅத் உறுப்பினர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட பொருள் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்புகளும் புதிய ஆண்டிற்கான அறிவிப்பும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 ஜனவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **23 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

கினீ பஸாவுடைய முபல்லிஃக், எதிர்பாராத விதமாக அல்லாஹ்வுடைய அருள் பொழிந்த நிகழ்வைப் பற்றி எழுதுகின்றார்:

ஒரு தூய அஹ்மதி அபு ஸானியா ஸாஹிப் நாட்டை விட்டு வெளியே இருந்தார். நாட்கள் கடந்த பிறகும் கூட அவருக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை. இதனால் பொருளாதார அழுத்தத்தில் இருந்தார். மனிதன் வெளிநாட்டில் இருக்கும் பொழுது, வேலையும் இல்லாமல், பணமும் இல்லாமல் இருக்கும்போது அவனுடைய நிலை எப்படி இருக்கும்? அப்பொழுது அவர் கையில் ஏதாவது செல்வம் கிடைத்தால் அது அவருக்கு மிகவும் விருப்பத்திற்குரியதாக இருக்கும். அதை தனக்கு செலவு செய்வார்.

ஆனால் இந்த தூய்மையானவரின் நிலையை பாருங்கள்! அந்நேரத்தில் ஜமாஅத் தரப்பிலிருந்து சந்தா கேட்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு லெப்பைக் கூறியவாறு அபு ஸானி அல்லாஹ்வின் வழியில், தன்னிடம் இருந்ததை தியாகம் செய்துவிட்டார். அப்பொழுது அவரிடம் சிறப்பான தொகை எதுவும் இருக்கவில்லை. என்ன இருந்ததோ அது அவருக்கு விருப்பமானதாக இருந்தது. ஆனால் அவர் அதை அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விட்டார்.

எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அவருடைய தியாகத்தை உடனடியாக ஏற்றுக்கொண்டான். சந்தா செலுத்தி ஒரு வாரம் கூட கழிந்திருக்கவில்லை, அவர் விண்ணப்பம் கொடுத்திருந்த ஒரு கம்பெனியில் இருந்து அவருக்கு ஃபோன் கால் வந்தது. இன்டர்வியூ இல்லாமல் அவரை வேலையில் அமர்த்தப்போவதாக கூறப்பட்டது. இன்டர்வியூ தேவையில்லை, நீங்கள் உங்களுடைய வேலைக்கு வாருங்கள் என்று கூறப்பட்டது.

அபூ ஸானியா சாஹிப் கூறுகின்றார்கள்:

இது அல்லாஹ்வின் வழியில் செய்யப்பட்ட தியாகத்தின் பரக்கத் ஆகும். மேலும் அல்லாஹ் அதிகப்படுத்தி தருகின்றான்; மேலும் எதிர்பாராத வகையில் எப்படி வழங்கினான் என்றால் அதனை அவர் எதிர்பார்த்திருக்கவிலலை. இது அவனுடைய உதவிக்கான வாக்குறுதியின் செயல் வடிவத்தில் முழுமையடைதல் ஆகும்.

ரஷ்யாவின் முபல்லிஃக் இன்சார்ஜ் எழுதுகின்றார்:

இக்கிரான் ஜான் ஸாஹிப் ஒரு களங்கமற்ற நண்பர் ஆவார். அவர் கூறுகின்றார்: கடந்த மாதங்களில் அவர் தன்னுடைய சந்தாவை அனுப்பி வைத்தார். மேலும் மிகுந்த உணர்ச்சிவயப்பட்டு கூறினார்: கடந்த இரண்டு மாதங்களாக சந்தா செலுத்த இயலவில்லை; மிகவும் கவலையில் இருந்தேன்; மேலும் இறைவனுடைய வழியில் தியாகம் செய்வதிலிருந்து இழப்புக்குரியவனாக ஆகிவிடக்கூடாது என்ற கவலையில் இருந்தேன்.

இப்பொழுது பாருங்கள்! இவர் புதிய அஹ்மதி. நீண்ட தொலைவில் உள்ள பகுதியில் இருக்கக்கூடியவர். ஆனால் நாம் பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு எந்த அளவிற்கு கவலை உள்ளது! ஏனென்றால், இதனால்தான் நம் மீது இறைவனுடைய அருள் இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கை இவர்களுக்கு உள்ளது.

அவர் கூறுகின்றார்: நான் அதிகமாக துஆ செய்து வந்தேன். மக்கள் தங்களுடைய வியாபாரத்திற்காக துஆ செய்வர். ஆனால் இவர்களுக்கு செல்வத்திற்கான கவலை இருந்தது. அதுவும் சந்தா செலுத்த வேண்டும் என்பதற்காக இருந்தது. எவ்வாறு இருப்பினும் கூறுகின்றார்:

இந்த நற்பேறிலிருந்து நான் பின்தங்கி விடக்கூடாது; மேலும், அல்லாஹ்வுடைய வழியில் தியாகம் செய்வதிலிருந்து இழப்பிற்குரியவனாகி விடக் கூடாது; மேலும் இறைவன் எனக்கு உதவ வேண்டுமென்று அதிகமாக நான் துஆ செய்து வந்தேன். ஒருநாள் அலுவலகம் செல்லும் வழியில், நான் சந்தா செலுத்த வேண்டும்; என்னுடைய சம்பளம் எனக்கு விரைவாக கிடைத்துவிட வேண்டும் என்று நான் மீண்டும் இறைவனிடம் துஆ செய்தேன். அங்குள்ள நிலைமையில் சம்பளமும் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

எவ்வாறு இருப்பினும், அலுவலகம் சென்ற உடனே எதிர்பாராத விதமாக அன்றே எனக்கு சம்பளம் கிடைத்தது. நான் உடனடியாக என்னுடைய சந்தாவை செலுத்தினேன். நான் தியாகத்தில் இருந்து இழப்பிற்குரியவனாகவில்லை என்று இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

இந்தியாவிலிருந்து அங்குள்ள இன்ஸ்பெக்டர் எழுதுகின்றார்: ஒரு ஜமாஅத்தின் ஒரு நண்பரிடம் சென்றேன். அவருடைய வக்ஃபே ஜதீத் சந்தா 16 ஆயிரம் ரூபாய் பாக்கி இருந்தது. அவர் தன்னுடைய ஒரு வேலையில் முக்கியமான தவணை ஒன்றை செலுத்த வேண்டியிருந்தது. அதற்காக இந்த பணத்தை வைத்திருந்தார். நாங்கள் சென்றவுடன் அவர் எங்களிடம், எனக்கு தவணை செலுத்த வேண்டியதுள்ளது. அதை பார்த்துக்கொள்கிறேன். சந்தாதான் செலுத்த வேண்டும்; அதை நான் செலுத்தி விடுகின்றேன். இப்பொழுது என்னுடைய பாக்கி இருக்கின்றது. நீங்களும் என்னிடம் வந்து விட்டீர்கள். நீங்கள் முதலில் என்னுடைய சந்தா பாக்கியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார். அவரிடம், நீங்கள் கஷ்டத்தில் இருக்கின்றீர்கள். இப்பொழுது நீங்கள் பாதி கொடுங்கள்; மீதம் பிறகு கொடுத்து விடுங்கள் என்று கூறினோம். அதற்கு அவர் கூறினார்: முதலில் இறைவனுக்காக கொடுக்க வேண்டும்; மற்ற விவகாரங்களை அல்லாஹ் சிறப்பாக்கி விடுவான். இன்ஷா அல்லாஹ்!

நான் இறையச்சத்தின்படி செயல்படுகிறேன் என்றால், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கின்றேன் என்றால், பிறகு அல்லாஹ் சிறந்த ஏற்பாட்டை செய்வான் என்று கூறினார். பிறகு, அவர் ஃபோன் மூலமாக தெரிவித்தார்: ஒரு தொகை நீண்ட காலமாக நிலுவையில் இருந்தது. அவருக்கு இவ்வளவு விரைவாக கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்தது. அது உடனடியாக கிடைத்துவிட்டது.

இவ்வாறு சந்தாவின் அருளினால் இறைவன் என்னுடைய அனைத்து பணிகளையும் முழுமையாக்கினான். என்னுடைய ஈமானும் அதிகரித்தது. தியாகம் செய்யக் கூடியவருடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை நான் பார்த்தேன்.

குவாதே லூப் என்பது தென் அமெரிக்காவின் ஒரு நாடாகும். அங்கு புதிதாக பைஅத் செய்த ஓர் இளைஞர் ஜெர்மன்ஸன் என்பவர் 28 வயது உடையவர் ஆவார். இப்பொழுது மாணவராகவும் இருக்கின்றார். படிப்புடன் பார்ட் டைம் வேலையும் செய்கின்றார். ஏழை நாடாகும். அவருக்கு வக்ஃபே ஜதீத் உடைய முக்கியத்துவம் மற்றும் அருள்களை பற்றி தெரிவிக்கப்பட்டது.

பொதுவாக, புதியதாக பைஅத் செய்யக் கூடியவர்களுக்கு சந்தாவுடைய பழக்கம் ஏற்படுத்துவதற்காக வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீதில் இணைக்க வேண்டும். இதன் பக்கம் கவனம் மூட்ட வேண்டும் என்று கூறப்படுகின்றது. அவருக்கு கூறப்பட்ட போது, அவர் கூறினார்: இதில் இணைய வேண்டும் என்று எனக்கு விருப்பம் இருக்கின்றது; ஆனால் இப்பொழுது என்னிடம் எந்த தொகையும் இல்லை. மேலும் மாதம் எப்படி கழியும்? என்பதே எனக்கு தெரியாது.

கையில் எதுவும் இல்லாத நிலையில், மாதம் எப்படி கழியும்? என்பது பற்றி தெரியாத நிலையில் இவ்வாறான விருப்பம் கொள்வது மிகவும் கடினமான பணியாகும். மனிதரிடம் செல்வம் வந்துவிட்டால் முதலில் தனக்கு செலவு செய்வான். ஆனால் நம்பிக்கை கொண்ட பிறகு இந்த மக்களுடைய நடத்தை வித்தியாசமாக உள்ளது.

முபல்லிஃக் இவரிடம் கூறினார்: நீங்கள் மாணவராவீர்கள்; அதிகமாக தியாகம் செய்யத் தேவையில்லை. உங்களால்

எவ்வளவு முடியுமோ, ஒன்று அல்லது இரண்டு யூரோ கொடுங்கள்; அல்லாஹ் எண்ணத்திற்கு ஏற்றவாறு கூலி கொடுக்கின்றான். முபல்லிஃக் ஸாஹிப் தொடர்ந்து கூறுகின்றார்: ஒரு வாரத்திற்கு பிறகு, அவர் மிஷன் ஹவுஸுக்கு வந்தார். 160 யூரோ வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டார். அவர் கூறினார் : சந்தா கொடுக்க வேண்டும் என்று எந்த நாளில் எண்ணம் கொண்டேனோ, அந்த வாரத்திலேயே இறைவன் எனது செல்வத்தில் பரக்கத்தை வழங்கி விட்டான்; நான் பார்ட் டைம் வேலை பார்க்கின்ற இடத்தில், நேரத்திற்கு முன்பாக எனக்கு ஊதியம் கொடுத்து விட்டார்கள். அதிகமாகவும் கொடுத்துவிட்டார்கள். காரணம் இல்லாமல் அதிகமாக கொடுத்து விட்டார்கள்.

அவர் கூறுகின்றார்: எதற்காக அதிகமாக கொடுத்தார்? என்று எனக்கு புரியவில்லை. பிறகு மீண்டும் கூறினார்: பிறகு, சிறிது நாட்களில் மீண்டும் ஓர் அற்புதம் நடந்தது. 160 யூரோ கொடுத்த அந்நாளில் எனக்கு இன்னும் கூடுதலாக கொடுக்க விருப்பம் இருந்தது. ஆனால் தொகை இல்லை. ஆனால் சந்தா கொடுத்த சில நாட்களுக்குப் பிறகு எதிர்பாராத விதமாக அதிகமான தொகை கைக்கு வந்தது. ஒரு ட்ரெய்னிங் சென்டரிலிருந்து எனக்கு சில தொகை வர வேண்டியது இருந்தது. பலமுறை கூறியும் அது எனக்கு கிடைக்கவில்லை. ஆனால், அல்லாஹ் சந்தாவின் பரக்கத்தினால் என்னுடைய அந்த தொகையை கொடுக்க செய்தான். ஆக, கூடுதலாக 150 யூரோ செலுத்தி விட்டார். பசியோடு வாழ்வை கழித்த அந்நிலை எங்கே! 300 யூரோ சந்தா கொடுத்த நிலை எங்கே!

இதைப் போன்றே இன்னும் நிறைய சம்பவங்கள் உள்ளன. சில மக்களுக்கு அசாதாரண முறையில் செல்வங்கள் கிடைத்தன.

கிர்கிஸ்தான் ஜமாஅத்தில் இருந்து யூலியா கோர்னுவா ஸாஹிபா கூறுகின்றார்: நான் பணியாற்றும் இடத்தில், என்னுடைய ஊதியம் உயர சாத்தியம் உள்ளதா? என்று அவர்களிடம் கேட்டேன். அவர்கள் என்னிடம் போனஸ் என்ற வகையில் சாத்தியம். ஆனால் போனஸ் எப்பொழுது கிடைக்கும் என்று தெரியாது என்று பதிலளித்தார்கள். எவ்வாறு இருப்பினும் கூறுகின்றார்:

அக்டோபர் மாதத்தில் சம்பளத்தின் ஒரு பகுதி கிடைத்தவுடன் எனக்கு என்னுடைய தனிப்பட்ட செலவு இருந்தாலும், எல்லாவற்றுக்கும் முதலாக என்னுடைய வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தினேன். இதுதான் அல்லாஹ்வுடைய வாக்குறுதியின் அடையாளமும் ஆகும். உண்மையான தியாகம், அல்லாஹ்வுடைய வாக்குறுதியின் அடையாளம் ஆகும். எந்தப் பொருளை நீங்கள் நேசிக்கின்றீர்களோ அதை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள். அப்பொழுது இவர்களுக்கு அந்தத் தொகை மிகவும் விருப்பத்திற்குரியதாக இருந்தது. ஏனென்றால் அதனுடைய தேவையும் இருந்தது. அதிக செலவீனங்களும் இருந்தன.

ஆனால், இவர் கூறுகின்றார்: ஜமாஅத்திற்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவது எல்லாவற்றுக்கும் முதலாக என்னுடைய அவசியமாக இருந்தது. அந்த மாதத்தின் இறுதியிலேயே என்னுடைய சம்பளத்தில் 40 சதவீதம் அதிகமானது. இது மட்டுமல்லாமல் வேலையின் தரத்தின் அடிப்படையில் ஒரு கூடுதலான போனஸையும் பெற இயலும். எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. ஏனென்றால் சம்பளம் இந்த அளவு கூடும் என்று எனக்கு ஒருபோதும் எதிர்பார்ப்பு இருந்திருக்கவில்லை.

ஒரு நாள் முன்பு செலவீனங்களை கணக்கிட்ட போது நான் உணர்ந்தது என்னவென்றால், எனக்கு தேவைப்பட்ட அளவே சம்பளத்தில் கூடுதலாக கிடைத்தது. நான் முதலில் வஃக்பே ஜதீத் சந்தாவை செலுத்தி விட்டேன். ஆனால், இந்த செலவீனங்களில் குறைபாடு கூடுதலாக கிடைத்ததை கொண்டு நிவர்த்தி ஆகிவிட்டது.

அவர் கூறுகின்றார்: நான் அல்லாஹ்விற்கு மிகவும் நன்றி செலுத்தினேன். எதிர்பாராத விதமாக கிடைத்த இறைவனுடைய இந்த அருள் சந்தாவின் பரக்கத்தினால் ஏற்பட்டது என்று எனக்கு நம்பிக்கை உள்ளது.

அவர் கூறுகின்றார்: நான் இன்னொரு விஷயத்தையும் கூறி விடுகின்றேன், நான் சில நாட்களாக நடத்தி வந்த ஒரு சிறிய தொழில் இருந்தது. ஆனால், அதில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஆனால் இவ்வாண்டு என்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றிய உடன் டிசம்பரில் இந்த தொழிலில் என்னுடைய லாபம் இரண்டு மடங்கு ஆனது.

இதே போன்று இந்தோனேஷியாவுடைய மேன்டூங் ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் ராமா ஸாஹிபா இந்தோனேஷியாவுடைய நேஷனல் மீடியாவில் ஃப்ரீ லேன்ஸ் ரைட்டராக இருக்கின்றார். கல்வியறிவு படைத்த பெண்மணி ஆவார்.

அவர் கூறுகின்றார்: இந்த பணியின் மூலம்தான் என்னுடைய தேவைகளை நிவர்த்தி செய்து வருகின்றேன். இவ்வருடம் கட்டுரைகள் நிராகரிக்கப்பட்டதனாலும், நூல்கள் குறைவாக விற்கப்பட்டதனாலும் என்னுடைய வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை முழுமை செய்ய இயலவில்லை. அதனால் எனக்கு மிகவும் வருத்தம் மற்றும் மன உளைச்சல் ஏற்பட்டது. நான் இறைவன் மீது நம்பிக்கை வைத்து என்னுடைய சேமிப்பில் இருந்து சிறிது பாக்கியை செலுத்தினேன். மேலும் இறைவனிடம் துஆ செய்தேன்:

அல்லாஹ்வே! அனைத்தும் உன்னுடையது. செலவு எவ்வாறு நிவர்த்தியாகும்? என்ற எண்ணத்தை என்னுடைய உள்ளத்தில் இருந்து அகற்றி விடு!

நான் இப்பொழுது தொழுது முடித்த பிறகு, தொழுகை விரிப்பை மடிக்க கூட இல்லை. அதற்குள் ஒரு நண்பருடைய ஃபோன் வந்தது. அவருக்கு அவசரமாக மொழிபெயர்ப்பில் என்னுடைய உதவி தேவைபட்டது. ஆக, அந்த பணி முழுமையான உடன் அந்த நண்பர் எனக்கு ஒரு கவரை தந்தார். அந்த கவரில் எனக்கு வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை முழுமைப்படுத்த தேவைப்பட்ட அந்த அளவு தொகையே இருந்தது. நான் அப்பொழுது அந்த தொகையை வக்ஃபே ஜதீதில் செலுத்தி விட்டேன். பிறகு அல்லாஹ்வுடைய அருள் இவ்வாறு இருந்தது:

எனக்கு எடிட்டருடைய செய்தி கிடைத்தது. என்னுடைய புத்தகம் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவர் ஒரு புத்தகம் எழுதி இருந்தார்.

எனக்கு பத்து விழுக்காட்டிற்கு பகரமாக, 30 விழுக்காடு ராயல்டி கிடைக்கும் என்பது அந்த செய்தியாக இருந்தது. பிறகு இறைவன் என்னுடைய தியாகத்தின் அருளினால் அசாதாரணமாக விளங்கிய என்னுடைய மகன் மெடிக்கல் காலேஜில் சேர்வது சுலபமாக முடிந்தது.

இவர் கூறுகின்றார்: என்னுடைய தனிப்பட்ட அனுபவம் ஆகும். இது என்னுடைய வருமானத்திலிருந்து எல்லாவற்றையும் விட முதலில் சந்தா தொகையை நான் செலுத்த தொடங்கியவுடன் இறைவன் என்னுடைய அனைத்து உலக விவகாரங்களையும் தானே கவனித்து கொண்டே செல்கின்றான். இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும். அல்லாஹ் எவ்வாறு நிறைவேற்றுகின்றான்!

சில சம்பவங்களை விட்டு விடுகின்றேன்.

இப்பொழுது நான் வக்ஃபே ஜதீதின் ஆண்டறிக்கையைப் படித்து விடுகின்றேன். அதாவது ஜமாஅத்துகளில் இருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் அந்த அறிக்கைகள் முழுமையாக இல்லை. இன்றைய நிலவரங்களில் குறிப்பாக ஆஃப்ரிக்காவுடைய முழு ரிப்போர்ட் வர இயலாது. ஆனால் கிடைத்ததை கூறி விடுகின்றேன்.

இது வக்ஃபே ஜதீதுடைய 69 ஆவது ஆண்டாகும். 68 ஆவது ஆண்டு நிறைவடைந்து விட்டது. மேலும் புதிய ஆண்டு தொடங்கியுள்ளது. அல்லாஹ்வின் அருளினால் ஏறத்தாழ 14.97 மில்லியன் பவுண்ட் அல்லது சுமார் 15 மில்லியன் பவுண்ட் தொகையை மக்கள் பொருள் தியாகமாக வழங்கியுள்ளார்கள். இது கடந்த ஆண்டை விட இந்த தொகை 1.3 மில்லியன் பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்!

கனடா மற்றும் பிரிட்டன் முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் உள்ளன. இந்த ஆண்டில் மொத்தமாக பிரிட்டன் முதல் இடத்தைப் பெற்றுள்ளது; ஆனால் கனடா மிகவும் முயற்சி செய்துள்ளது, மேலும் அது பிரிட்டனுக்கு மிக அருகில் வந்து சேர்ந்துள்ளது. இந்த ஆண்டு கனடா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. மூன்றாம் இடத்தில் ஜெர்மனி, நான்காம் இடத்தில் அமெரிக்கா, ஐந்தாம் இடத்தில் இந்தியா, அதன் பிறகு ஆஸ்திரேலியா, அதன் பின்னர் மத்திய கிழக்கின் ஒரு ஜமாஅத், அதன் பின் இந்தோனேஷியா, மீண்டும் மத்திய கிழக்கின் ஒரு ஜமாஅத் மற்றும் பத்தாம் இடத்தில் பெல்ஜியம் உள்ளது.

ஆஃப்ரிக்காவின் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதல் 10 ஜமாஅத்துகள்; நாடுகள். அவற்றின் பெயரை தரவரிசைப்படி படிக்கின்றேன்.

முதல் இடத்தில் கானா, அதன் பிறகு மொரிஷியஸ், புர்கினாஃபோஸோ, தான்ஸானியா, நைஜீரியா, லைபீரியா, கேம்பியா, சிராலியோன், பெனின், மற்றும் மாலி.

அல்லாஹ்வின் அருளால் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை 15 லட்சத்தைத் தாண்டியுள்ளது. இதில் அதிக முயற்சி செய்த நாடுகளில் நைஜீரியா, நைஜர், கேம்பியா, கினிபிஸாவ், காங்கோ பிராஸ்வில், ஐவரி கோஸ்ட், மத்திய ஆப்பிரிக்காவுடைய காங்கோ கின்ஷாசா குறிப்பிடத்தக்கது. மக்களை இணைப்பதில் அவர்கள்

பெரிதும் முயற்சி செய்துள்ளனர்.

மொத்த வசூலின் அடிப்படையில், பிரிட்டனின் பத்து பெரிய ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் இஸ்லாமாபாத், இரண்டாம் இடத்தில் ஒஸ்டர் ஃபார்க், மூன்றாம் இடத்தில் ஏஷ், அதன் பின்னர் வால்ஸால். பின்னர் ஆல்டர்ஷாட் சவுத், ஃபார்ன்ஹம் நார்த், அதன் பிறகு வார்டன், ஃபார்ன்ஹம் சவுத், ஜில்லிங்ஹம், பின்னர் ஆல்டர்ஷாட் நார்த்.

ஐந்து மண்டலங்களில் முதலிடத்தில் இஸ்லாமாபாத் உள்ளது. அதன் பின்னர் பைத்துல் ஃபுதூஹ், அதன் பிறகு மஸ்ஜித் ஃபஸ்ல், பின்னர் பைதுல் இஹ்சான், அதன் பின்னர் வெஸ்ட் மிட்லண்ட்ஸ்.

அத்ஃபால் பதிவேடு வக்ஃபே-ஜதீதில் தனியான கணக்கு இருப்பதனால், அதிலும் தரவரிசைகள் உள்ளன. அந்த வரிசையில், முதலிடத்தில் ஆல்டர்ஷாட் சவுத், அதன் பிறகு ஆல்டர்ஷாட் நார்த், பின்னர் வார்டன், அதன் பிறகு ஏஷ், சீம் சவுத், ஃபாரன்ஹாயம் சவுத், இஸ்லாமாபாத், ரூஹிம்டன் வெல், டட்சன் பார்க் மற்றும் வால்சால் ஆகியவை உள்ளன.

மொத்த தரவரிசையில் இரண்டாம் இடத்தில் கனடா இருந்தது. அந்த அடிப்படையில், கனடாவின் ஜமாஅத்துகளில் முதலிடத்தில் வாகன் (Vaughan), அதன் பிறகு பீஸ் வில்லேஜ், பின்னர் கேல்கரி, பிரஹ்மண்டன் வெஸ்ட், வான்கோவர், டொரோண்டோ வெஸ்ட், மிசிசாகா, பிரஹ்மண்டன் ஈஸ்ட் மற்றும் டொரோண்டோ.

கனடாவின் பத்து பெரிய ஜமாஅத்துகள். முதலிடத்தில் ஹேமில்டன், அதன் பிறகு எட்மண்டன் வெஸ்ட், ஹதீகா அஹ்மத், ஹேமில்டன் மவுண்டன், ஒட்டாவா வெஸ்ட், ரெஜைனா, ஏர்ட்ராயீ, இன்ஸ்ஃபெல், வுட் ரியல் மற்றும் சட்பெரி ஆகியவை உள்ளன.

**இவர்களுடைய அமாரத் ஜமாஅத்துகளின் அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில், முதலிடத்தில் வாகன்,** அதன் பின்னர் டொரோண்டோ வெஸ்ட், பீஸ் வில்லேஜ், கேல்கரி, பிரஹ்மண்டன் வெஸ்ட், பிரஹ்மண்டன் ஈஸ்ட், வான்கோவர், மிசிசாகா, டொரோண்டோ.

ஜமாஅத்துகளில் அத்ஃபால் பதிவேட்டில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை: ஹதீகா அஹ்மத் முதலிடத்தில் உள்ளது. அதன் பின்னர் லண்டன் சவுத், ஹேமில்டன். அங்கு கனடாவிலும் ஒரு லண்டன் உள்ளது. ஹேமில்டன் மூன்றாம் இடத்தில், அதன் பிறகு இன்ஸ்ஃபெல், மான்ட்ரியால் வெஸ்ட், பைத்துல் இஹ்சான், சாஸ்கடூன் வெஸ்ட், சவுத் வெஸ்ட், டர்ஹாம் ஈஸ்ட், வுட் ஸ்டாக், எப்ஸ் ஃபோர்ட், பெனிங்டன்.

ஜெர்மனியில் ஐந்து உள்ளூர் ஜமாஅத்துகள் உள்ளன. அவற்றில் முதலிடத்தில் ஹேம்பர்க், இரண்டாம் இடத்தில் ஃப்ராங்க்ஃபர்ட், அதன் பிறகு வெஸ்பாடன், ரீட்ஸ் மற்றும் க்ராஸ்-கெராவ்.

முன்னதாக ஐந்து உள்ளூர் அமாரத்துகள் இருந்தன. தற்போது பத்து உள்ளூர் ஜமாஅத்துகள் உள்ளன. அவை: ரோட்காவ், நீடா, நோயே-வீட், ரோய்டர்மார்க், வைங்கார்டன், ஃப்ளோரன்ஸ் ஹைம், பெர்லின், கோப்லென்ஸ், மஹ்தியாபாத் மற்றும் பின்னே பெர்க்.

அத்ஃபால் பதிவேட்டில் உள்ள ஐந்து மண்டலங்களில், முதலிடத்தில் வெஸ்பாடன் உள்ளது. அதன் பிறகு ஹேம்பர்க், பின்னர் ஹேசன் சவுத் ஈஸ்ட், மான்ஹைம் மற்றும் வெஸ்ட்ஃபாலன்.

அமெரிக்காவின் பத்து ஜமாஅத்துகள். முதலிடத்தில் நார்த் வெர்ஜீனியா, அதன் பிறகு மெரிலாண்ட், பின்னர் லாஸ் ஏஞ்சலஸ், சிகாகோ, சியேடல், சிலிகான் வேலி, டெல்லஸ், டெட்ராய்ட், சவுத் வெர்ஜீனியா, ஜார்ஜியா, கரோலாய்னா.

அத்ஃபால் பதிவேட்டில், முதலிடத்தில் மெரிலாண்ட் உள்ளது. அதன் பிறகு ஆல்பனி, லாஸ் ஏஞ்சலஸ், நார்த் வெர்ஜீனியா, சீயாட்டல், சிகாகோ, ஜார்ஜியா, கரோலினா, டெல்லஸ், ஆஷ்காஷ் மற்றும் ஹூஸ்டன்.

பாகிஸ்தானுக்கும் ஒரு நிலை உள்ளது. மொத்த தரவரிசையைப் பார்க்கும்போது, பாகிஸ்தான் ஐந்தாம் இடத்தில் வருகிறது. அங்கு பணத்தின் மதிப்பு குறைந்துவிட்டது. இருந்தபோதும், அனுகூலமற்ற சூழ்நிலைகள் இருந்தபோதிலும், அல்லாஹ்வின் அருளால் பாகிஸ்தானின் தியாகங்களின் தரம் மிக உயர்ந்ததாக உள்ளது. பாகிஸ்தானில் முதலிடத்தில் லாஹூர். இரண்டாம் இடத்தில், ரப்வா. மற்றும் மூன்றாம் இடத்தில் கராச்சி உள்ளது. மேலும் சந்தா கொடுப்பவர்களின் மாவட்ட தரவரிசையில் முதலிடத்தில் இஸ்லாமாபாத், அதன் பிறகு ஃபைஸலாபாத், பின்னர் ராவல்பிண்டி, குஜ்ராத், சர்கோதா, உமர்கோட், முல்தான், நாரோவால், மிர்பூர் காஸ் மற்றும் டேரா காஸீ கான்.

முதல் பத்து ஜமாஅத்துகளில், முதலிடத்தில் இஸ்லாமாபாத் சிட்டி உள்ளது. அதன் பிறகு டவுன்ஷிப் லாஹூர், டிஃபென்ஸ் லாஹூர், தாருஸ் ஸிக்ர் லாஹூர், ஸமனாபாத் லாஹூர், அல்லாமா இக்பால் டவுன் லாஹூர், பைத்துல் ஃபஸ்ல், ஃபைஸலாபாத், முகல்பூரா லாஹூர், முல்தான் நகரம் மற்றும் டெல்லி கேட் லாஹூர்.

பாகிஸ்தானில் அத்ஃபால் பதிவேட்டில் ஜமாஅத்துகளில், முதலிடத்தில் லாஹூர், இரண்டாம் இடத்தில் ரப்வா மற்றும் மூன்றாம் இடத்தில் கராச்சி உள்ளது. மேலும், மாவட்டங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது: முதலிடத்தில் இஸ்லாமாபாத், இரண்டாம் இடத்தில் ஃபைஸலாபாத், அதன் பிறகு நாரோவால், ராவல்பிண்டி, உமர்கோட், சர்கோதா, குஜ்ராத், மிர்பூர் காஸ், லையா மற்றும் டோபா டேக் சிங்.

இந்தியாவின் தரவரிசையைப் பார்க்கும்போது, மாநிலங்களின் அடிப்படையில் கேரளா முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, கர்நாடகா, ஒடிசா, பஞ்சாப், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம்.

ஜமாஅத்துகளில் முதல் 10 இடங்களில், முதலிடத்தில் கோயம்புத்தூர், அதன் பிறகு ஹைதராபாத், காதியான், கோழிக்கூடு, மேலப்பாளையம், பெங்களூர், மஞ்சேரி, கொல்கத்தா, கேரங் மற்றும் கரூளை.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகள், மெல்போர்ன் லாங் வாரன், மார்ஸ்டன் பார்க், கேஸில் ஹில், மெல்போர்ன் பெர்விக், மெல்போர்ன் க்ளைடு, பேன்ரித், மெல்போர்ன் வெஸ்ட், லோகன் ஈஸ்ட், மெல்போர்ன் ஈஸ்ட்.

அவர்களுடைய ஜமாஅத்துகள் இவையாகும்: மெல்போர்ன் லாங் வாரன், மார்ஸ்டன் பார்க், கேஸில் ஹில், மெல்போர்ன் பெர்விக், மெல்போர்ன் க்ளைடு, பேன்ரித், மெல்போர்ன் ஈஸ்ட், பெர்த், மெல்பன் வெஸ்ட், அடிலெய்ட் வெஸ்ட்.

அத்ஃபால் பதிவேட்டில், இவர்களின் தரவரிசை, முதலிடத்தில் லோகன் ஈஸ்ட், அதன் பிறகு மெல்போர்ன் லாங் வாரன், அடிலெய்ட் சவுத், மெல்போர்ன் வெஸ்ட், லோகன் வெஸ்ட், மெல்போர்ன் பெர்விக், காஸில் ஹில், பேர்த், லெம்ப்டன், அதன் பிறகு பென்ரித்.

அல்லாஹ் இத்தகைய தியாகம் செய்த அனைவரின் செல்வங்களிலும், வாழ்நாளிலும் அளவற்ற பரகத்துகளை வழங்குவானாக!

நான் ஏன் பெயர்களை வாசிக்கிறேன் என்றால், சில ஜமாஅத்துகள் எங்களுடைய தரவரிசை என்ன? என்பது எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். எனவே, வழக்கத்தின்படி வாசிக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கருமித்தனமும், ஈமானும் ஓர் உள்ளத்தில் ஒன்றிணைய முடியாது என்பதை உறுதியாக கூறுகின்றேன். எந்த மனிதர் உண்மையான உள்ளத்துடன் இறைவன் மீது நம்பிக்கை கொள்வாரோ அவர் தன்னிடம் பெட்டியில் இருக்கின்ற செல்வத்தை மட்டும் தனது செல்வமாக கருத மாட்டார். மாறாக, இறைவனுடைய அனைத்து கருவூலகங்களையும் தன்னுடைய கருவூலமாக கருதுவார். அவரிடமிருந்து கருமித்தனம் அகன்று விடுகின்றது. ஒளியினால் இருள் அகன்று விடுவதைப் போன்று அகன்று விடுகிறது.

எனவே இது அல்லாஹ்வுடைய சிறப்பான அருளாகும். எவ்வாறு அல்லாஹ் மக்களுக்கு வழங்குகின்றான் என்பதை நாம் அனுபவித்தும் இருக்கிறோம். ஏனென்றால் அல்லாஹ்விடமே அனைத்து கருவூலங்களும் இருக்கின்றன என்று அவர்கள் அறிகின்றார்கள்.

ஹதீஸிலும் வருகின்றது, அல்லாஹ்விடமே அனைத்து கருவூலங்களும் இருக்கின்றன. அவன் மறுமையில் அவர்களுக்கு வழங்குவான். இன்னும் சொல்வதென்றால் இம்மையிலும் வழங்கிக் கொண்டே செல்வான். இதையே இறைவன் திருக்குர்ஆனிலும் கூறியுள்ளான். அல்லாஹ் நமக்கு எவ்வாறு வழங்குகின்றான் என்று மனிதன் வியப்படைகின்றான். மக்கள் இதை அனுபவித்து அறிகிறார்கள். சில சம்பவங்களையும் நான் கூறியுள்ளேன்.

அல்லாஹ் நமக்கு பொருள் தியாகத்திற்கான நற்பேறு வழங்குவதுடன் நம்முடைய ஈமானையும், நம்பிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்வானாக!

தமிழாக்கம்
முபல்லிஃக்
ஸாஹிர் ஹுஸைன்

** * * * * * * * *

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அந்தஸ்து

(மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஸாஹிப் காதிம், ஆசிரியர் - பத்ர் வார இதழ், உருது )

(சொற்பொழிவு: காதியான் ஜல்ஸா ஸாலானா - 2024)

اَشْهَدُ اَنْ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ○ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ الرَّحْمٰنِ الرَّحِيمِ مَالِكِ يَوْمِ الدِّينِ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ
يُسَبِّحُ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ الْمَلِكِ الْقُدُّوْسِ الْعَزِيْزِ الْحَكِيْمِ ○ هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ○ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ۗ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ○ ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ۗ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ○

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! மற்றும் கண்ணியமிக்க அவையோரே!

நான் இப்போது ஓதிய இந்தத் திருவசனங்கள் தான் உண்மையில் எனது உரையின் தலைப்பாகும். நீங்கள் செவியுற்றதைப் போல, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் அந்தஸ்து மற்றும் தகுதி குறித்து சில விஷயங்களை எடுத்துரைக்குமாறு எனக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்களின் விளக்கத்தில் ஒரு நபிமொழியின் சான்றுடன், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஸஹீஹ் ஹதீஸில் உள்ளபடி, இந்த வசனம் அருளப்பட்டபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது கையை ஸல்மான் பார்ஸி (ரலி) அவர்களின் முதுகில் வைத்து இவ்வாறு கூறினார்கள்:

ஈமான் ஒருவேளை கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றிருந்தாலும் கூட, பாரசீகத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது சிலர் அதை அங்கிருந்து மீண்டும் கொண்டு வருவார்கள்.' (புஹாரி)

அன்னார் (அலை) கூறினார்கள்:

இது என்னைப் பற்றிய முன்னறிவிப்பாகும். பராஹீனே அஹ்மதியாவில் இந்த முன்னறிவிப்பு உண்மைப்படுத்தப்பட்டுள்ளது போன்று, இதே ஹதீஸ் என் மீது வஹீயாக இறக்கப்பட்டது. வஹீயின் அடிப்படையில் எனக்கு முன்பு இதனை உண்மைப்படுத்தக்கூடிய குறிப்பிட்ட எந்தவொரு நபரும் இருக்கவில்லை. இறைவனுக்கு எல்லா புகழும், அவனே அதை எனக்கு உறுதிப்படுத்தினான்.

(ஹகீகத்துல் வஹீ, பக்கம் 391-ன் அடிக்குறிப்பு)

மேலும் கூறினார்கள்:

திருக்குர்ஆனில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போன்று, பாரசீக நபர் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பது ஒரே நபரின் இரு பெயர்கள் ஆகும். அதாவது, 'வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்' (அவர்களில் இன்னும் சேராத மற்றவர்கள்) என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸஹாபிகளுடன் இணைந்த ஒரு பிரிவினராவர். அவர்கள் இன்னும் வெளிப்படவில்லை. நபியின் காலத்தை அடைந்து, ஈமானிய நிலையில் அவரது நட்பில் இருப்பதற்கு நற்பேறு பெற்று, மேலும் நபியிடமிருந்து மார்க்கப் பயிற்சி பெற்றவர்களே ஸஹாபிகள் என்றழைக்கப்படுவர் என்பது வெளிப்படையாகும். எனவே இதிலிருந்து, எதிர்வரும் சமுதாயத்தில் ஒரு நபி தோன்றுவார்; மேலும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிபலிப்பாக இருப்பார் என்பது நிரூபணமாகின்றது. எனவே, அந்த நபியின் தோழர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள்' என்றே அழைக்கப்படுவர்.மேலும், எப்படி ஸஹாபிகள் தமது வடிவில் இறைவனின் வழியில் மார்க்கத் தொண்டுகளை ஆற்றினார்களோ நிச்சயமாக அவர்களும் தமது வடிவில் தொண்டாற்றுவார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த வசனம் இறுதிக் காலத்தில் ஒரு நபியின் வருகை தொடர்பான ஒரு முன்னறிவிப்பாகும். அவ்வாறில்லையென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தோன்ற இருந்த அந்த மக்களுக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் பெயரை சூட்டுவதில் எந்தக் காரணமும் இல்லை. அவர்களோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்க்கவே இல்லையே. எனவே ஆகரீன மின்ஹும் என்ற மேற்குறிப்பிட்ட வசனத்தில் மின்ஹும் என்ற சுட்டுச் சொல் ஸஹாபா பெருமக்களைக் குறிக்கின்றது என்பதை அனைவரும் அறிவர். எனவே எவர்களுக்கு மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிபலிப்பாக இருக்கின்ற நபி இருப்பாரோ அவர்களே அந்தக் கூட்டத்தினராக இருக்க முடியும். (ததிம்மா, ஹகீகத்துல் வஹீ)

கண்ணியத்திற்குரிய அவையோரே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மேற்குறிப்பிட்ட வசனத்தின் விளக்கவுரையில் ஸஹீஹ் புஹாரியின் ஹதீஸின் அடிப்படையில், தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான நிழல் மற்றும், நிழல் நபி ஆவேன் என்று கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மட்டும் கூறவில்லை. மாறாக, உம்மத்தின் முந்தைய சான்றோர்கள் மஸீஹ் மவ்ஊத் அவர்களின் அந்தஸ்து மற்றும் தகுதி தொடர்பாக அப்படிப்பட்ட முன்னறிவிப்புகளை செய்திருக்கின்றனர்.

ஆக, ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தெஹ்லவி அவர்களின் கூறுகின்றார்கள்:

ஹுஜ்ஜதுல்லாஹில் பாலிகா மற்றும் அல்கைருல் கஸீர் ஆகிய நூல்களில் அவர் பின்வருமாறு கூறுகிறார்:

' மிகச் சிறந்த நபியின் மேன்மை என்னவென்றால், அவருடைய மற்றொரு வகையிலான தோற்றமும் இருக்கும். அவரது இரண்டாம் வருகையால் அல்லாஹ்வின் நோக்கம் என்னவென்றால், அவர் அனைத்து மக்களையும் இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் கொண்டு வருவதற்கு காரணியாக இருக்க வேண்டும் என்பதாகும். அதாவது அனைத்து மக்களுக்காகவும் தோற்றுவிக்கப்பட்ட அவரது சமுதாயம் அனைத்து சமுதாயங்களை விடவும் சிறந்ததாக இருக்கும். எனவே அந்த நபியின் முதலாவது வருகையானது இரண்டாம் வருகையை வலுவுடன் பற்றிப் பிடித்ததாக இருக்கும்.

ஹஸ்ரத் ஷாஃ வலியுல்லாஹ் முஹத்திஸ் தெஹ்லவி வரக் கூடிய இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அந்தஸ்து மற்றும் தகுதியை குறிப்பிட்டவாறு தமது நூல் கிதாபுல் கய்ருல் கஸீரில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

حَقٌّ لَهُ أَنْ يَنْعَكِسَ فِيهِ أَنْوَارُ سَيِّدِ الْمُرْسَلِينَ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَيَزْعَمُ الْعَامَّةُ أَنَّهُ إِذَا نَزَلَ إِلَى الْأَرْضِ كَانَ وَاحِدًا مِنَ الْأُمَّةِ كَلَّا بَلْ هُوَ شَرْحٌ لِلِاسْمِ الْجَامِعِ الْمُحَمَّدِيِّ وَنُسْخَةٌ مُنْتَسِخَةٌ مِنْهُ فَشَتَّانَ بَيْنَهُ وَبَيْنَ أَحَدٍ مِنَ الْأُمَّةِ ›

பொருள்: முஹம்மதிய்ய சமுதாயத்தில் தோன்றவிருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் உரிமை என்னவென்றால், அவரிடம் ஸய்யிதுல் முர்ஸலீன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒளியின் பிரதிபலிப்பு முழுமையாக இருக்கும். அவர் தோன்றும்போது, அவர் வெறும் ஒரு சாதாரண உம்மத்தீயாக மட்டுமே இருப்பார் என்று மக்கள் கருகின்றனர். அப்படி ஒருபோதும் கிடையாது. அவரோ முஹம்மது (ஸல்) என்ற பெயரின் முழுமையான உள்ளடக்கமாக இருப்பார்; மேலும், அவர் அன்னாரின் ஓர் 'உண்மை நகல்' (True Copy) ஆவார். எனவே அவருக்கும் மற்ற உம்மத்திகளுக்கும் இடையே ஒரு பெரிய வித்தியாசம் இருக்கும்.'

கண்ணியமிக்க சபையினரே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான பிரதிபலிப்பாக இருக்கின்றார்கள், எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் அன்னாரின் காலத்தில் மழை பொழிவதைப் போல பொழியும் என்று அன்னார் (அலை) கூறினார்கள். எனவே, அன்னாரின் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய அற்புதங்கள் மழை மேகங்களைப் போல பொழிந்தது என்பது ஓர் உண்மையாகும், மேலும் இதுவே அன்னாரின் உண்மைத்துவத்திற்கு ஒரு சிறந்த சான்றாகும்.

இந்த வசனத்தின் பொருள்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 05 - 12 MAR 2026 Issue No.10 & 11

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

என்னவென்றால், உச்சபட்ச வழிகேட்டிற்குப் பிறகு நேர்வழியையும், ஞானத்தையும் பெறக் கூடியவர்கள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் மற்றும் அருட்களை காணக் கூடியவர்கள் இரண்டு கூட்டத்தினர் மட்டுமே ஆவர்.

முதல் கூட்டத்தினர்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்பு கடும் இருளில் மூழ்கியிருந்தனர். பின்னர் இறைவனின் அருளால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தைப் பெற்றார்கள். மேலும், தங்கள் கண்களால் அற்புதங்களையும், முன்னறிவிப்புகளையும் கண்டனர். அந்த நம்பிக்கையானது அவர்களிடம் எத்தகைய ஒரு மாற்றத்தை உருவாக்கியது என்றால், அவர்கள் ஒரே ஆன்மாவாக ஆகிவிட்டனர்.

இரண்டாம் கூட்டத்தினர்: இவர்களே மேற்கண்ட வசனத்தின் அடிப்படையில், ‘வாக்களிக்கப்பட்ட மஸீஹ்‘ அவர்களின் ஜமாஅத்தினர் ஆவர். இவர்கள் ஸஹாபிகளைப் போன்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களைக் காணக் கூடியவர்கள் ஆவர்; மேலும், இருள் மற்றும் வழிகேட்டிற்குப் பிறகு நேர்வழியை அடைபவர்கள் ஆவர். மேலும்,

اخرين مِنۡهُم لَمَّا يلحقو بهم

. என்ற வசனத்தில் அந்தக் கூட்டத்தினருக்கு மின்ஹும் என்ற சொல்வத்தில் அதாவது ஸஹாபிகளுக்கு ஒப்பாக இருத்தல் என்ற அருளில் பங்கு வழங்கப்பட்டுள்ளது. ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களையும், முன்னறிவிப்புகளையும் கண்டனரோ; அதேபோன்று இவர்களும் காண்பார்கள் என்ற விஷயத்தின் பக்கம் இது சுட்டிக் காட்டுகின்றது. இடைப்பட்ட காலத்தில் இந்த அருளில் முழுமையான முறையில் பங்கு இருக்காது.

ஆக, இன்றைய நாட்களில் அப்படியே நிகழ்ந்துள்ளது. அதாவது, பதிமூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களுக்கான கதவு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. மேலும், தாருல் குத்னீ ஹதீஸிற்கு ஏற்பவும், இப்னு ஹஜ்ர் ஃபத்வாவிற்கு ஏற்பவும் ரமலான் மாதத்தில் சந்திர மற்றும் சூரிய கிரகணம் குறிப்பிட் நாட்களில் வெளிப்பட்டதை மக்கள் தங்களது கண்களால் கண்டனர். அதாவது ரமலானில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் கிரகணம் ஏற்பட்டது, ஹதீஸில் கூறப்பட்ட விஷயத்தைப் போன்று ரமலானின் கிரகணத்திற்குரிய இரவுகளில் துவக்க இரவிலும், சூரிய கிரகணம் தனது கிரகணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்கு மத்தியிலும் பகலில் நிகழ்ந்தது. அந்த கிரகணம் நிகழ்ந்த அந்தக் காலத்தில் தானே அந்த இமாம் மஹ்தி என்று வாதம் செய்பவரும் இருந்தார். இந்த நிலை வானம், பூமி படைக்கப்பட்டது முதல் இதுவரை ஒருபோதும் நிகழ்ந்தது இல்லை. ஏனெனில், இதுவரை இதற்கு நிகரான உதாரணம் அதற்கான வரலாற்றுப் பக்கங்களில் இருந்து நிரூபணமாகவில்லை. ஆக, இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஓர் அற்புதமாக இருந்தது. இதனை மக்கள் தமது கண்களால் பார்த்துக் கொண்டனர்.

அடுத்து, வால் நட்சத்திரம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் வெளிப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அது வெளிப்பட்டதையும் பார்த்து விட்டனர். அதேபோன்று ஜாவா நெருப்பையும் லட்சக்கணக்கான மனிதர்கள் பார்த்து விட்டனர். அதேபோன்று, பிளேக் நோய் பரவுதல், மற்றும் ஹஜ்ஜிலிருந்து தடுக்கப்படுவதையும் அனைவரும் கண்கூடாகப் பார்த்து விட்டனர். நாட்டில் இரயில் வண்டி தயாராகுதல், ஒட்டகங்கள் கைவிடப்படுதல், இவை அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அற்புதங்கள் ஆகும். அவை இக்காலத்தில் இவ்வாறு பார்க்கப்பட்டன.

மதிப்பிற்குரிய அவையோரே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் மகத்தான அந்தஸ்து என்னவென்றால், அவருக்கு என்னுடைய ஸலாத்தை எட்ட வைக்க வேண்டும்; மேலும் அவரிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் கடினமான நேரத்திலும் கூட இமாம் மஹ்தி தொடர்பாக கட்டளை வழங்கியுள்ளார்கள்.

ஆக, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

اَلَا إِنّ عِيسَى بْنَ مَرْيَمَ لَيْسَ بَيْنِي وَبَيْنَهُ نَبِيٌّ وَلَا رَسُولٌ انّهُ خَلِيفَتِي فِي أُمَّتِي مِنْ يَعْدِى، اَلَا إِنَّهُ يَقْتُلُ الدَّجَّالَ وَيَكْسِرُ الصليب وَيَضَعُ الْجِزْيَةَ، وَتَضَعُ الْحَرْبُ أَوْزَارَهَا اَلَا مَنْ أَدْرَكَهُ فَلْيَقْرَأْ عليه السلام

பொருள்: கவனமாக கேளுங்கள்; எனக்கும் அவருக்கும் இடையே எந்த நபியும் இல்லை; எந்த தூதரும் இல்லை. கேளுங்கள். அவர் எனக்குப் பிறகு எனது உம்மத்தில் எனது கலீஃபாவாக இருப்பார்.

அடுத்து, கவனமாக கேளுங்கள். அவர் தஜ்ஜாலை ஆன்மிக ரீதியில் கொலை செய்வார்; மேலும் அவர் சிலுவையை அதாவது சிலுவை கொள்கையை தவிடு பொடியாக்கி விடுவார்; ஜிஸ்யாவை ஒழிப்பார், அதாவது மார்க்கப் போர்களை முடிவுக்கு கொண்டு வருவார்.‘

‘ கவனமாக கேளுங்கள்; எவரெல்லாம் அவரைச் சந்திப்பாரோ, அவர் எனது ஸலாமை அவருக்கு எட்ட வைக்கட்டும்.‘

மேலும், அதே போன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்கள். அதாவது எவ்வளவுதான் கடினமான சூழ்நிலைகள் நிலவினாலும், இமாம் மஹ்தியிடம் செல்ல வேண்டும்; மேலும் அவரிடம் பைஅத் செய்ய வேண்டும்.

அவரது வருகை குறித்து உங்களுக்கு தெரிய வந்தால், நீங்கள் பனிமலையில் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும், நீங்கள் நிச்சயம் அவரிடம் பைஅத் செய்யுங்கள், ஏனெனில் அவர் மஹ்தியும், அல்லாஹ்வின் கலீஃபாவும் ஆவார்.‘ (இப்னு மாஜா)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களிலிருந்து இமாம் மஹ்தியின் அந்தஸ்து மற்றும் தகுதியைக் குறித்து அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது அவர் பொய் சக்திகளுக்கு முடிவு கட்டுவார். சிலுவைக் கொள்கைகளை பொய்ப்படுத்துவார். உலகிலிருந்து மார்க்கப் போர்களை முடிவிற்கு கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டுவார். அவரது பைஅத்தின் கீழ் வருவது

இதன் தொடர்ச்சி 19 ம்-பக்கம்....

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad